KALKI 2.11.86 ரூ. 1.50

கல்கி

தீபாவளி சிறப்பிதழ்



எஸ்.வி.சேகர் Vs ராம்ஜி

சிரிப்புப் போட்டி!







* உன்
மத்தாப்புச் சிரிப்பில்
மயங்கி
சங்குச் சக்கரமாய்ச்
சுழன்றேன் ......

* காதல் —
அது சாட்டைவெடியாக
மலர்ந்தது......
இடையில் —
யார் வைத்தது
லெட்சுமி வெடியை ......?

* இன்று —
நீ
புஸ்வாணமாகிவிட்டாய் ......

* எரிந்து முடிந்த
கம்பி மத்தாப்பைத்
தெரிந்தே எடுத்தேன் ......
அது —
என்னைச் சுட்டுவிட்டது......

— பவல்ராஜ்.

மனைவி: "'கமான் கமான்'னு தூக்கத்திலே பேத்து றீங்களே, இண்டர்வெண்யூ பெட்டிங்குக்குப் பழையபடி கிண்டி ரேஸுக்குப் போக ஆரம் பிச்சிட்டீங்களா?"

கணவன்: "சத்தியமா இல்லே டியர்! ஆபிஸப் போட்டி உஷாவைத்தான் கூப்பிட்டேன்!"

— கே. சம்சுதின்





அடிதடிப் பட ஜோக்

எஸ்.வி. சேகர்: எனக்கு ஒரே ஒரு வருத்தம். போயும் போயும் ஒரு ஆம்பளே யோட சேர்ந்து ஒரு போட்டோ எடுத்துக்கணும்னு இருக்கு பாரு!

ராம்ஜி: கல்கியும் தெகுளுங்கணாம். பல பெண்கள் 'ரெடி'ன் இங்க. ஆறு எஸ்.வி. சேகரோட சேர்ந்து எடுத்துக் கணும்னு உடனே அம்பேல்னுட்டாங்க! நான் மாட்டிக்கிட்டேன்!





சேகர்: வாயை ரொம்ப ஓவராத் திறக்காதே — சிரிக்கிறியா, அழுறியான்னு ரீடர்ஸ்க்குத் தெரியாது.

ராம்ஜி: நீ சிரிக்கறதப் பார்த்தா ஏதோ 'வன விலங்குகள் வார' சிறப்பிதழுக்கு போஸ் குடுக்கற மாதிரி இருக்கு.

சேகர்: சீ, சரியா சிரிடா, பாக்கறவங்க சிரிக்கப் போறாங்க!

ராம்ஜி: எஸ்.வி. சேகரோட டிஸ்கஷன்னு சொன்னதும் நான் ஏன் உடனே ஜாலியா ஒத்துக்கிட்டேன் தெரியுமா? ஏன்னு என் அளவுக்கு உன்னைப் பத்தி டீடெய்ல்டா தெரிஞ்சவன் இன்னிக்கு மெட்ராஸ்ல யாருமே கிடையாது.

சேகர்: ரெண்டு பேர் இருக்காங்க. எஸ்.வி. வெங்கட்ராமன், அலமேலு வெங்கட்ராமன் — எங்க அப்பா, அம்மா!

ராம்ஜி: சரி.... அவங்களுக்கப்புறம்னு வச்சுக்கயேன். நீ டெலிவிஷன், ரேடியோ இஞ்சினியரிங் படிச்சதிலேருந்து எனக்குத் தெரியும், கரெக்டா?

சேகர்: அடப்பாவி, எவ்வளவு தப்புப் பண்றே நீ.... நான் படிச்சது மெகானிகல் இஞ்சினியரிங். இதிலேர்ந்து நீ என்னைப் பத்தி எவ்வளவு தப்புத் தப்பா தெரிஞ்சுக்கிட்டிருக்கேன்னு தெரியுது.

ராம்ஜி: உன்னோட ஃபர்ஸ்ட் டிராமா, இனாகுரேஷன் போது நான் இருக்கேன்... நான் இருக்கேன் அங்க.... 'சொந்த வீடு வாடகை வீடாகிறது'ங்கற உன்னோட முதல் டிராமா....

சேகர்: டேய்டேய்....என்னோட ஃபர்ஸ்ட் டிராமா 'அவன் ஒரு தனி மரம்'டா.

ராம்ஜி: கொஞ்சம்கிட்டத்தட்ட உண்மை சொல்றபோது ஒத்துக்க வேண்டியது தானே.... நீ நடிச்ச முதல் படம் 'மணல் கயிறு'ல....

சேகர்: ஐயோ.... நான் நடிச்ச முதல் படம் 'நினைத்தாலே இனிக்கும்'. ஆனா நான் ஆக்டிவலா நடிச்ச முதல் படம் லிட்டன் ரூபி டஸ்ட் டீ படம். 700 நாள் 800 நாள் ஓடிச்சு. பிரமாதமா இருந்துச்சுன்னாங்க.

ராம்ஜி: அதுக்கப்புறம் டீ வியாபாரம் எப்படி ஆச்சு?

சேகர்: அதுக்கு முன்னால் ஏகப்பட்ட வியாபாரம்! சரி.... நீ என்ன இன்னிக்கு இப்படி காலைல கிளம்பி வந்திருக்கே? ஒனக்கு இன்னிக்குப் பேச்சுக் கச்சேரி ஒண்ணும் இல்லையா?

நிருபர்: பேச்சுக் கச்சேரியா!

சேகர்: ஆமா, கல்யாணத்தில் எல்லாம் ரிசப்ஷனுக்கு ராம்ஜியோட கச்சேரி வைக்கறாங்க இல்லையா? இரண்டு மணி நேரப் பேச்சுக் கச்சேரின்னா நடுவுல பத்துப் பாட்டு ஃப்ரீ. மத்தவங்க கச்சேரின்னா ஒரு இருபது இருபத்தஞ்சு பாட்டுப் பாடுவாங்க. நடுவுல கொஞ்சம் பேசுவாங்க.

ராம்ஜி: நீ டிராமா போடறே. நீயேதான் பேசறே ஆரம்பத்திலிருந்து கடைசி வரைக்கும்! சீன் முடிஞ்சு வாழிய செந்தமிழ் பாடினதுக்கப்புறமும்என்ட்ரன்ஸ்லதின்னு பத்துப் பேர்கிட்ட ஜோக் அடிச்சிக்கிட்

டிருக்கே.... ஆமா.... ரசிகைகள் ஜாஸ்தி ஆச்சே ஒனக்கு....

சேகர்: டே இரைஞ்சு சொல்லாதே. என் பொண்டாட்டி வீட்டுலதான் இருக்கா. வம்புல மாட்டி விட்டுடாதே....

ராம்ஜி: ஒகே. ஒகே. உன் ரசிகைகள், நீ என்ன சொன்னாலும் சிரிக்கிறதுன்னு தீர்மானமா வந்துடறாங்க போலிருக்கு...

சேகர்: ரசிகைகள் மட்டுமா! புரொட்யூசர்கிட்டே போய் 'சார், பணம் வேணும்'னு 'நீ ரொம்ப தமாஷா பேசறேப்பா'ங்கறார் அவர்! 'சார் நான் ஷூட்டிங்குக்கு ஒன்பது மணிக்கு வந்துடறேன், என்னை நாலு மணிக்கு உட்டுடுங்க'ன்னு, 'எல்லாம் தமாஷ் தான் சார் உங்களுக்கு'ங்கறார்! ஆமா.... நீ ஏன் சினிமாவுக்கு ம்யூசிக் போட மாட்டேங்கறே? சினிமாவோட தரம்தான் ஏற்கெனவே கெட்டுப் போச்சே, நீயும் போட வேண்டியதுதானே?

ராம்ஜி: டே, ஒரு புரொட்யூசர் எவ்வளவு ரிஸ்க்தான் எடுப்பான்? ஏற்கெனவே உன்னை நடிக்க வைக்கற பெரிய ரிஸ்க் இருக்கு. என்னை ம்யூசிக் டைரக்டரா போட்டு இன்னொரு ரிஸ்க் வேறேயா? பொழைச்சுப் போட்டும் இண்டஸ்ட்ரின்னு உட்டுட்டேன்.

சேகர்: சரி, நானே அடுத்த படத்துல உன்னைப் போடலாமான்னு யோசிச்சேன். அதுல நானே வேறே நடிக்கறதுனால வேண்டாம்னு நிறுத்திட்டேன்! ஆமா, இந்த 'நல்ல தோர் வீணை'யில் நடிச்சிருந்தியாமே? உமா சொன்னா, ரொம்ப வருத்தப்பட்டுக்கிட்டிருக்கார், நீங்க போன் பண்ணிச் சொல்லுங்கன்னு... ஆட்டோகிராப் எல்லாம் கேட்டாங்களாமே உன்கிட்ட?

ராம்ஜி: இனிமே நடிக்கறதில்லேன்னு சத்தியம் பண்ணி எழுதிக் கொடுங்கன்னாங்க சேகர், கொடுமை....! நீ எப்படி இந்த வம்புல வாரம் ஒருவாட்டி மாட்டிக்கறே? நீயா மாட்டிக்கறியா இல்லே,....

சேகர்: நமக்கு பப்ளிசிடி குறைச்சல்னு படறபோது இந்த மாதிரி ஏதானும் மாட்டிக்கும். எதிர்ப்பில வளர்றதிலதாண்டா ராம்ஜி ஒரு த்ரில் இருக்கு. என்ன சொல்றே?

ராம்ஜி: சே, அரசியல்வாதியா போயிருக்கணும் நீ.

சேகர்: அதுவும் ஆக்டிங். இதுவும் ஆக்டிங். இதுல பிராஃபிட் குறைச்சல். சரி, இப்போதைக்கு இது போதும்னு இதுக்கு வந்துட்டேன். கொஞ்ச நாளைக்கப்புறம் அதுல போய்டலாம்னு இருக்கேன். இப்ப உன்னோட கல்யாண கச்சேரி எல்லாம் எப்படி இருக்கு? கல்யாணத் தேதி நிச்சயம் பண்ணிட்டு கச்சேரியை ஃபிக்ஸ் பண்றாங்களா, இல்லே கச்சேரியை ஃபிக்ஸ் பண்ணிட்டு, கல்யாணத் தேதியை நிச்சயம் பண்றாங்களா? உன் கச்சேரி வக்கறதுனால பொண்ணு வீட்டுக்கும் பையன் வீட்டுக்கும் தகராறு வரும்?

ராம்ஜி: எங்க ம்யூசிக் போடற சத்தத்துல அவங்க சண்டை அப்படியே அமுங்கிப் போயிடும்.

சேகர்: உன்னோடது ம்யூசிக்ங்கறே?


ராம்ஜி: ஆமா, ம்யூசிக், ஏன்?

சேகர்: எப்படி நான் போட்றதுதான் டிராமான்னு சொல்றேனோ அது மாதிரி சரி....

ராம்ஜி: இதுதானே வேணுங்கறது! ஒன்னையே எடுத்துக்க. உன் கல்யாணத்துக்கே நான்தான் கச்சேரி பண்ணேன். ரெண்டு கொழந்தைகளோட, வாழ்க்கைல எவ்வளவு ஹாப்பியா எவ்வளவு சக்ஸஸ்ஃபுல்லா இருக்கே பாரு!

சேகர்: எங்க கல்யாணத்தின்போது ஒரு சின்ன தப்புப் பண்ணிட்டேன். என்னோட கல்யாண முகூர்த்தம் ஃபிக்ஸ் பண்ணின உடனே நீ ஃப்ரீயா இருக்கியான்னு கேட்டோம். நீ இல்லேன்ன; தைரியமா இருந்துட்டோம். அப்புறம் லாஸ்ட் மினிட்ல நீ ஃப்ரீயா இருக்கேன்னு சொல்லி, வந்து பாடிட்டே. எங்க கல்யாணத் தேதியை கடைசி நிமிஷத்துல மாத்த முடியலே, என்ன பண்றது!

ராம்ஜி: வெளியூர்ல அவுட்டோர்க்கு எல்லாம் போறபோது ரசிகைகள்கிட்ட எல்லாம், 'எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலே'ன்னு சொல்லிட்டிருப்பியே? இப்பவும் அப்படித்தானா? இப்போ ஒய்ஃப் குழந்தைகள் போட்டோ எல்லாம் பத்திரிகைகள்ள வந்து, 'சேகர் தன் மனைவியை எப்படிக் கூப்பிடுவார்?'னு எல்லாம் வந்தப்புறம்கூட அப்படித்தான் சொல்றியா?



ஒரு டாக்டர் போஸ்டாபீஸ் கட்டைப் பேனாவுல மருந்துச் சீட்டை எழுதுறது அதுதான் உலகிலேயே புரியாத கையெழுத்து.

எஸ்.வி.சேகர் Vs ராம்ஜி



எனக்கு எழுத்துத் திறமை இல்லை என்பதை நான் உணர பதினைந்து வருடங்கள் ஆயிற்று; ஆனால் அதற்குள் நான் மிகப் பிரபலமாகிவிட்டதால் எழுதுவதை நிறுத்த முடியவில்லை.

— ராபர்ட் பெஞ்ச்லி



சேகர்: இல்லே, இப்பல்லாம் நான் கல்யாணம் ஆகலேன்னு பொய் சொல்றதில்லே. பக்கத்திலே ஒருத்தனே வச்சிப்பேன். அவன் சொல்லுவான். சார்க்குக் கல்யாணம் ஆகலேம்பான். ஏண்டா பொய் சொல்றேம்பேன் அவன்கிட்ட. ஆனா இப்ப எல்லாம் கல்யாணம் ஆனவங்களுக்குத்தான் மோர் ரெஸ்பெக்ட், இண்டஸ்ட்ரில.போகட்டும்ஒனக்குஇசைல எப்படி ஆர்வம் உண்டாச்சு?

ராம்ஜி: நான் மூணு மாசக் குழந்தையா இருந்தபோதே, என்னைக் குளிப்பாட்டற ஆயா மேல தும்தும்னு ரிதத்தோட குத்திட்டிருந்தபோதே எனக்கு இசைல ஆர்வம் ஏற்பட்டுடிச்சு....,

சேகர்: ரிதத்தோட குத்துவியே! அந்த ஆயாவைப் பார்த்தேன். சொன்னாங்களே....

ராம்ஜி: பல் தேக்கறபோது ரிதம், குளிக்கறபோது அண்டால ரிதம்.... இவ்வளவு நாள் பழகின நண்பனான நீயே என்னோட திறமையை ஒப்புக்க மாட்டேங்கறே. அப்புறம் உலகம் எப்படி ஒப்புக்கும்?

சேகர்: நீ உடனே சண்டை போடணும். அப்ப பேட்டிகள் நிறைய வரும். அந்த டெக்னிக் உனக்குத் தெரியலே. விட்டுத் தள்ளு. நீ ம்யூசிக் லைனுக்குப் போயிருக்கலேன்னா என்ன ஆகியிருப்பே?

ராம்ஜி: என்ன! நடிப்புத் துறைக்கு வந்திருப்பேன். உன்னோட பொழைப்பு கெட்டுப் போயிருக்கும்.

சேகர்: நான் வந்து இசைத் துறைக்குப் போயிருப்பேன். எப்புடின்னா நரம எப்பவுமே நமக்குத் தெரியாத துறைலதான் பிரபலமாவோம். அது வந்து பிரச்னையே இல்லே. எனக்கு வந்து டிராமா அனவுன்ஸ் பண்ணிட்டு, ராணி சீதை ஹால்ல, பெரிய மழையினால ஹீரோயின் டயத்துக்கு வர முடியாதபடி இருந்தும் சமாளிச்சிருக்கேன். உனக்கு அப்படி ஏதாவது அனுபவம் இருக்கா? நீ போகாமியே உன் ட்ரூப் புரொக்ராம் நல்லா அமைஞ்சிருக்கா?

ராம்ஜி: அப்படி உட்டுடறதில்லே. அப்புறம் நம்ம ட்ரூப்புக்கு நான் இல்லாமையே சமாளிக்கத்தெரிஞ்சுபோச்சுன்னா ஆபத்து. ஆனாலும் எனக்கும் ஒரு பிரச்னே வந்துது. தர்ம பிரகாஷ்ல ஒரு கல்யாணக் கச்சேரி. மோட்டார் பைக்தான் வச்சிருந்தேன். இப்ப மாதிரி கார் இல்லே. சுமார் எட்டு வருஷத்துக்கு முன்னாடின்னு ஞாபகம்... மௌபரீஸ் ரோட்ல வேகமா போய்க்கிட்டிருந்தபோது ஒரு எருமை மாட்டு மேலே மோதி, நானும் அடிபட்டுக் கீழே விழுந்து...

சேகர்: எது எருமை எது ராம்ஜின்னு இருட்டுல தெரியலியாக்கும்?

ராம்ஜி: நோ நோ.... அதுக்குள்ளே என்னோட ரசிகர்கள் வந்து கஷ்டப்பட்டு என்னே அடையாளம் கண்டு பிடிச்சு, இது எருமை, இது ராம்ஜின்னு தீர்மானிச்சு, யாரை வெட்டரினரி டாக்டர்கிட்டே, யாரைச் சாதாரண டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போகறதுன்னு டிஸைட் பண்ணி.... நான் பாண்டேஜ் எல்லாம் போட்டுக்கிட்டு, ஒருவழியா போனா மணி ஏழே முக்கால்! கல்யாண பார்ட்டி ஒரே கோபத்தோட கடுப்பா இருந்தார். என் கை கட்டு இட்டுஎல்லாம்பார்த்தும்நான்சொன்னதை நம்பலே....

சேகர்: நீ போன தடவை கச்சேரில வாங்கினதுன்னு நினைச்சிருப்பார் அவர்... ம்.... சொல்லு.

ராம்ஜி: நான்.... ஆனா பயங்கரமா ஒரு ஐடியா வச்சிருந்தேன். நேரா வாசலுக்கு அவங்களைக் கூட்டிகிட்டுப் போய், அந்த அடிபட்ட எருமை மாட்டை டெம்போல ஏத்திக்கிட்டு வந்து நிக்கறதைக் காமிச்சப்புறம்தான் ஒப்புத்துக்கிட்டார்,போயேன்!

சேகர்:நீவெளிநாட்டுக்குப்போயிருக்கே இல்லே....?

ராம்ஜி: போயிருக்கேனே?

சேகர்: அப்போ அங்கேயே இருக்கிறதுக்கு என்ன? ஓ.... அவங்க உன்னோட ம்யூசிக்கைக் கேட்டுட்டாங்களோங்கறியா? சரி, நகைச்சுவையைப் பத்தி உன்னோட அபிப்ராயம் என்ன?

ராம்ஜி: திங்க் பண்ணி வராம, ஸ்பான்டேனியஸா வரணும். பல புஸ்தகங்கள் படிக்க நிறைய எழுதிட்டு வந்திருக்கேன். படிச்சுரவா?

சேகர்: வேண்டாம்டா....!

ராம்ஜி: சேகர், நீ ஏன் இந்த இரட்டை அர்த்த வசனம் எல்லாம் சினிமால டிராமா லல்லாம் பேசறே?

சேகர்: பிடிவாதமா அதுல ரெண்டாவது அர்த்தத்தை எடுத்துக்கிட்டா நான் என்ன பண்றது?

ராம்ஜி: சரி.... வண்ணக் கோலங்கள் முடிஞ்சு போச்சு. அடுத்து டீ.வி.யிலே என்ன பண்ணப் போறே?

சேகர்: 'தேவை ஒரு மாப்பிள்ளை'ன்னு ஒண்ணு பண்றேன். நாலு ஹீரோ.

ராம்ஜி: நாலு பேரும் நீதானா?

சேகர்: என்னோட டிராமா ட்ரூப்புல இருக்கிறவங்கதான். ஹீரோயின் ரெண்டு மூணு தேடிகிட்டிருக்கேன். பிரச்னைகள் தராத, தமிழ்ப் பேசத் தெரிந்த பெண்கள் இந்த கல்கியைப் படிச்சுட்டு இந்தப் பேட்டி எல்லாம் நிஜம்னு நம்பற ஹீரோயின்கள்,' யாராவது அப்ளை பண்ணினா கன்ஸிடர் பண்ணறேன்! ஆமா, நீ ஏன் டெலிவிஷன்ல நிகழ்ச்சி ஒண்ணும் குடுக்கறதில்லே? ஒனக்கும் டீ.வி.க்கும் ஏதாவது தகராறா?

ராம்ஜி: டீ.வி.ல கடைசியா ஒரு நிகழ்ச்சி குடுத்தேன். அந்த 'டிஸ்கோ டிஸ்கோ'

புரோகிராமுக்கு மாக்ஸிமம் லெட்டர்ஸ் வந்ததுன்னு ஆடியன்ஸ் ரிஸர்ச்ல சொன்னாங்க...

சேகர்: அதை நம்ப மாட்டேன் நான். புரோகிராமுக்கு முன்னாடியே லெட்டர்ஸ் வந்துடறது அங்கே! ஏதோ ஒரு காண்ட்ரவர்ஸினு சொல்லு அப்ப!

ராம்ஜி: காமெடியைப் புரிஞ்சுக்கற சக்தி இருக்கணும். இங்க கொஞ்சம் கம்மி. வெளி நாட்டுல எல்லாம் ஃப்ரீடம் ஜாஸ்தி. ரொனால்ட் ரீகன் பத்தி எழுதலாம்.

சேகர்: இங்கியும் எழுதலாம். ரொனால்ட் ரீகன் பத்தி.... நான்கூட ஒரு டிராமாக்கு யோசிச்சேன். ரீகனும் என்.டி. ஆரும் ஒரே ஆபரேஷன் தியேட்டர்ல ஹார்ட் ஆபரேஷனுக்குப் படுத்திருக்காங்க. ஒரு குளறுபடில இவரோட ஹார்ட் அவருக்கும், அவரோட ஹார்ட்டை இவருக்கும் வச்சுத் தச்சுடறாங்க. ரீகன் மயக்கம் தெளிஞ்சு எழுந்து தெலுகு கங்காவை முடிச்சே தீருவேன்ங்கறார். என்.டி. ஆர். என்னடான்னா, "யார் எனக்கு விவேகானந்தர் வேஷம் போட்டது? நான் ஆபிரகாம் லிங்கன் மாதிரி தாடிதான் வச்சுப்பேன்'ங்கறார். இந்த மாதிரி ஐடியால்லாம் யோசனை பண்ணி வச்சிட்டிருந்தேன். கம்ப்ளீட் பண்ணல்லே. ஒரு சங்கடம். இங்க எல்லாம் பாரேன், என்னோட ஒரு டிராமால எம்.எல்.ஏ.க்களையெல்லாம் கொஞ்சம் தாக்கற மாதிரி வசனம். நான் மினிஸ்டர் ராசாராம்கிட்டகூடச் சொன்னேன். எம்.எல்.ஏ. எல்லாம் திட்டற மாதிரி நடத்துக்கக் கூடாதுன்னார் அவர். 'சில பேர்'னு டுங்க நீங்கன்னார். யாரானும் எம்.எல்.ஏ. சண்டைக்கு வந்தா அந்தச் சில பேர் நீங்க இல்லேன்னுடலாம் இல்லையா. அதுக்காக பொதுவா, சட்டசபைன்னுடறது. எந்த சட்ட சபைன்னு சொல்லக்கூடாதில்லையா, அதுக்காக! ஆனா இந்தச் சட்டமெல்லாம் பாத்து ஜோக் சொல்றதுக்குள்ள டைமிங் மிஸ் ஆயிடும். அதுதான் பிரச்னே!

ராம்ஜி: சரி ரொம்பப் பேசிட்டோம். கொஞ்சம் உட்டா கின்னஸ் புக்ல போட்டுடுவான். ஆமா, கின்னஸ் புக்குக்காக நீ ஒரே நாள்ள எட்டு நாடகம் நடத்தலே? வந்துதோ?

சேகர்: கின்னஸ் ஒத்துக்கலே!

ராம்ஜி: நான் ஒத்துக்கிட்டேனே, போறுதா? சரி, வாசகர்களுக்கு ஒரு செய்தி கொடுக்க வேணுமா? சட்டுனு சொல்லு.

சேகர்: தீபாவளி வாழ்த்துக்கள்!

உரையாடல் ஏற்பாடு,
தொகுப்பு: **சாருகேசி**

அட்டை வண்ணப்படம்,
புகைப்படங்கள்: **யோகா**




அடுத்த இதழில்...




மூப்பனாருக்கு எதிரான சக்திகள்

உலக மொழிகளில் ஒரு தெலுங்குப் படம்!

— ஜனாதிபதி பரிசு பெற்ற இந்தப் படம் உலகின் பல பாகங்களில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது!





மாதம் ஒரு மாவட்டம்



கல்கி ஏற்கும் சமுதாயப் பணி

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வரப்போகிறோம்!

புதுக்கோட்டை என்றதுமே அதன் நேர்த்தியான வீதி அமைப்புகள்தான் நினைவுக்கு வருகின்றன. அந்த அளவுக்கு அந்நகரின் வீதிகள் அழகானவை! ஆனால் அம்மாவட்ட மக்களின் வாழ்க்கை? திருச்சியிலிருந்து தனி மாவட்டமாகப் பிரிந்த பிறகு, அது எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது? மக்களின் வாழ்க்கைத் தரம் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது? மக்களின் பிரச்னைகள் என்ன? அவை தீர என்ன செய்ய வேண்டும்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை காணும் முயற்சியாகத்தான் கல்கி ஏற்றிருக்கும் 'மாதம் ஒரு மாவட்டம்' என்னும் சமுதாயப் பணியில், பத்தாவது மாவட்டமாகப் புதுக்கோட்டை மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்!

எனவே புதுக்கோட்டை மாவட்டம் முழுவதிலுமுள்ள பிரச்னைகள், அல்லது உங்கள் ஊர்ப் பிரச்னைகள், இல்லையெனில் தனி மனிதர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், ஆகியவற்றோடு, அரசியல்வாதிகளுடைய — அமைச்சர்களுடைய — அதிகாரிகளுடைய மெத்தனப் போக்குகளையும் சமூக விரோதிகளின் அட்டகாசங்களையும் சுருக்கமாக எழுதி உங்கள் முழு முகவரியோடு கல்கி அலுவலகத்திற்கு அனுப்புங்கள். இவற்றோடு உங்கள் மாவட்ட வளர்ச்சிக்கான திட்டங்களையும் — ஆலோசனைகளையும் உங்கள் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள சாதனைகளையும் சேர்த்தே எழுதலாம்.

கல்கி அலுவலகத்திற்கு வரும் உங்கள் ஒவ்வொருவருடைய கடிதமும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, அவற்றில் முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுத்து, டிசம்பர் மாத மத்தியில் நமது கல்கி பிரதிநிதிகள் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்வார்கள்; உங்களைச் சந்தித்துப் பேசுவார்கள். அவர்கள் வரும் தேதி பற்றிய முழு விவரங்களும் பின்னர் தனித்தனிக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்படும்.

சுற்றுப் பயண முடிவில், கல்கி பிரதிநிதிகள் புதுக்கோட்டை மாவட்ட கலெக்டரைச் சந்தித்துத் தாங்கள் சேகரித்த பிரச்னைக்குரிய விஷயங்களைப் பற்றி விவாதித்துப் பதில்களைப் பெறுவார்கள். அவையெல்லாம் ஜனவரி மாதக் கல்கி இதழ்களில் செய்திகளாகவும் பேட்டிக் கட்டுரைகளாகவும், புகைப்படங்களாகவும் பிரசுரமாகும்.

எல்லாவற்றையும் பிரசுரித்துவிட முடியாது என்றாலும், நியாயமான பிரச்னைகள் அத்தனையும் கலெக்டரிடம் எடுத்துச் சொல்லப்படும். அதன் மூலம் அரசின் கவனத்தையும் அதிகாரிகளின் கவனத்தையும் திருப்ப முடியும் என்பதோடு வாழ்க்கையின் நிஜங்களை உணர்த்துவதன் மூலம் மக்களிடையிலும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியுமல்லவா! உடனடியாக எழுதுங்கள்.

புதுக்கோட்டை மாவட்டம் பற்றிய பிரச்னைகளும், குறைகளும், அநீதிகளும் தவிர, சாதனைகளும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி 20.11.86.

உறையின் மேல் 'மாதம் ஒரு மாவட்டம்' — புதுக்கோட்டை' என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

— ஆசிரியர்.

பி.கு.: கோயமுத்தூர் மாவட்டம் பற்றிய பரபரப்பூட்டும் செய்திகளும் பேட்டிகளும் புகைப்படங்களும் நவம்பர் 16, 23 தேதியிட்ட கல்கி இதழ்களில் வெளியாகும்.







சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்காகக் கூவத்தில் அலங்காரப்படகு விடப் பட்டது - செய்தி



1986 நவம்பர் 2
மலர் 45 இதழ் 14
அக்ஷய ஐப்பசி 16

கல்கி



ஒரு யூஸ்லெஸ் தலையங்கம்!

அமெரிக்க அதிபர் ரேகன் ஒரு விழாவுக்குப் போனார். அவர் மனைவி நான்ஸியும் மேடையில் இருந்தார். வரவேற்புரை நிகழ்த்தினார் ஒருவர். திடீரென்று மேடையின் ஒரு பகுதி சரிய, நான்ஸி கீழே விழுந்துவிட்டார்! நல்லவேளை, காயம் படவில்லை. சமாளித்துக் கொண்டு எழுந்து வந்து மீண்டும் மேடையில் அமர்ந்தார். அதிர்ச்சி அடைந்திருந்த பார்வையாளர்கள் கைதட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். உடனே ரேகன் தம் மனைவியைத் திரும்பிப் பார்த்தவாறே மைக்கில், ''டார்லிங்! எனக்கு ஒரு வேளை கைதட்டல், பாராட்டு கிடைக்காமல் போய்விட்டால்தானே, இப்படி ஸ்டண்ட் அடிக்கும்படி உன்னைக் கேட்டுக் கொண்டிருந்தேன்! இன்னும் வரவேற்புரையே முடியவில்லை; அதற்குள் உனக்கு என்ன அவசரம்?'' என்று கேட்டார். விழாவுக்கு வந்திருந்தவர்கள் குபீரென்று சிரித்து, கைதட்டி அமர்க்களப்படுத்தியதில் அன்று கோர்பசேவுக்கு ஒரே வயிற்றெரிச்சலாம்!

இந்தச் செய்தியைப் படித்ததிலிருந்து ஸோனியாவுக்கு ஒரே பரபரப்பு. தானும் விழுந்தெழுந்து காட்ட வேண்டும் என்றுதான்! ஒரு விழாவில் அவர் அப்படி செய்ததும் ராஜீவ் சிறிதாவது படபடத்துக் கொள்ள வேண்டுமே? அமைதியாக, ''ஷி இஸ் ஒகே!, ஐ ஆம் ஒகே! ஒரு விபரீதமும் நடந்துவிடவில்லை'' என்றார். பிறகு, ''இது கூர்க்காலாந்து தேசிய விடுதலை முன்னணியினரின் தேசத் துரோகக் காரியம் என்று சந்தேகிக்க இடமில்லை. அப்படி ஒருவேளை இது அவர்களுடைய காரியம்தான் என்று மேற்கு வங்க அரசு சந்தேகிக்குமானால் ஜோதிபாசு அதற்கான ஆதாரங்களைக் காட்ட வேண்டும். அப்போது மத்திய அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும். மேற்கு வங்க அரசால் இந்தப் புதிரை விடுவிக்க முடியவில்லை என்றால் அதை ஒப்புக் கொள்ளட்டும்'' என்று ஒரு போடு போட்டார்!

ஸோனியா விழுந்ததை அறிந்ததிலிருந்து ஜானகிக்கு உள்ளங்காலில் அரிப்பு. வேறென்ன, தானும் விழ வேண்டும்; தன் கணவரும் அது பற்றி கமெண்ட் அடிக்க வேண்டும் என்றுதான்! 'தடால்' என்று விழுந்து வைத்தார் அவர். உடனே, எம்.ஜி. ஆர். கூறினார்: ''இதற்காகத்தான் நான் 'என் மனைவியேயானாலும்' என்று ஆரம்பித்து அரசாங்கக் காரியங்களில் தலையிடக் கூடாது' என்று விளம்பரம் கொடுத்திருந்தேன். என்னைக் கவிழ்க்க யாராலும் முடியாது. அதனால் என் மனைவியைக் கவிழ்த்திருக்கிறார்கள். இதெல்லாம் யூஸ்லெஸ் முயற்சிகள். எனவே எல்லாரும் கத்தி வைத்துக் கொள்ளுங்கள். நான் கூறுவதைத் தப்பர்த்தம் செய்து கொள்ள வேண்டாம். தற்காப்புக்காகத்தான் கத்தி.''

தயாளு சும்மா இருப்பாரா? அவரும் ஒருநாள் 'பொதகடீர்' என்று விழுந்து வைத்தார். உடனே கருணாநிதி, ''இது ஆளும் கட்சி 'குண்டர்களின் வேலைதான். இதற்காகத்தான் நான் தொண்டர் படை வேண்டும் என்றேன். அதை 'ஆர்மி' என்று ஆங்கில நாளிதழ்கள் விஷமத்தனமாகப் போட்டன. நான் மறுப்பு தெரிவித்தேன். கல்கி கூட 1986ம் ஆண்டிலேயே இந்த மறுப்பைக் 'காலம் கடந்த ஞானோதயம்' என்று தலையங்கத்தில் குறிப்பிட்டது. ஆனால் நான் போர்ப் படை திரட்டுவதாகக் கூறுவது ஒரு யூஸ்லெஸ் அரசின் பேஸ்லெஸ் குற்றச்சாட்டு'' என்று முழங்கினார்.

இதையெல்லாம் பத்திரிகைகளில் படித்துப் பார்த்துக் கொண்டிருந்த நளினிக்கு என்ன தோன்றியதோ என்னவோ அவரும் ஒருநாள் 'டமால்' என்று மேடையிலிருந்து விழுந்து வைத்தார்! உடனே அமைச்சர் சிதம்பரம், ''நேருஜியின் உறுதிமொழி காப்பாற்றப்படும்' என்று ராஜீவ் எம்.ஜி. ஆருக்கு உறுதி மொழி அளித்தபோது நான் பக்கத்திலேயே இருந்தேன். எனக்குத் தெரியும். ஆனால் அப்போது நளினி அருகில் இல்லை. அதுவும் எனக்குத் தெரியும். அவ்வாறிருக்க, 'தி.மு.க. சட்ட எரிப்பு செய்வது தேசத் துரோகம்' என்று நான் கூறியதற்காக இன்று நளினி பழிவாங்கப்பட்டிருக்கிறாள். இதன் பின்னணியைக் கண்டுபிடிப்பதில் சி.பி.ஐ. விஜிலன்ஸ் அதிகாரிகள் பயப்படாமல் தைரியமாகச் செயல்பட வேண்டும். தவறு செய்யும் பெரிய அதிகாரிகளைப் பிடித்துத் தண்டித்தால் சிறிய அதிகாரிகள் பயந்து ஒழுங்காக நடந்து கொள்வார்கள்'' என்றார்!

என்னதான் சொல்லுங்கள், நமது தலைவர்களுக்கு உள்ள நகைச்சுவை உணர்வு ரேகனுக்கு உண்டா? சிரியோல் கோல்ட் மெடல்கள் நம்மவருக்குத்தான்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

ஏதேனும் ஓர்
இடத்திற்குப் போகும் போது
இரண்டு விஷயங்கள்
பெண்களைத்
தாமதப்படுத்தி விடுகின்றன
முதலில்
ஒரு பெண்
தன் மனத்தைத்
தயார்ப்படுத்திக் கொள்ள
வேண்டியிருக்கிறது


பிறகு —
அவள் முகத்தை!



அவர்கள் தம் குழந்தைக்கு
'ஜாக்' 'ஜில்' என்று
வெறும் பெயராக இல்லாமல்
ஒன்றன் அடையாளமாய்
பெயர்சூட்ட விரும்பினர்
மாதத்தின் முதல் தேதியில்
அவர்கள் குழந்தை பிறந்தது
அதனால் அவர்கள் பெயர் சூட்டினர்
'பில்' என்று!

— ரிச்சர்ட் ஆர்மர்

புயலையும்
பூகம்பத்தையும் விட
ஆபத்தானது
குழந்தைகள்
திடீரென்று அமைதியாகிவிடுவது!



முன்னுரிமை முன்னுரிமை
என்பது உங்கள்
உயிர்ப் போராட்டமாக இருக்கிறது
இறுதியில்
உங்களுக்கு அது
கிடைக்கிறது
நீங்கள்
ஓய்விற்குத்
தயாராகும்போது

— ஆர். ஏ.

அக்கரைச் சிரிப்பு!

தமிழாக்கம்: வைரமுத்து

இந்த மக்கள்
எத்தனை சுயநலமிகளாயிருக்கிறார்கள்?
என்னை நினைத்துக் கொள்வதற்குப் பதிலாகத்
தங்களையே நினைத்துக் கொண்டு...!

— ஜி. எஸ். ஜி.



அது
மிக உன்னதமான கவிதை
நீ கூறும்போது
அதை
மிக விருப்பத்தோடு கேட்டேன்
அந்தச்
சிந்தனையை
நான் விரும்புகிறேன்
அக்கவிதை வீச்சினை
நான் காதலிக்கிறேன்
அதில்
எல்லாவற்றையுமே
நான் நேசிக்கிறேன்
ஏனென்றால் அது
என் கவிதை!

— ஆர். ஏ.

கவிஞர் வைரமுத்துவின் நகைச்சுவைக் கவிதைகள்

①

காத்திருந்த காதல்

கடைசியில்
அவள்
என் காதலுக்குச்
சம்மதம் சொல்ல வந்தபோது
அவளுக்குப் பரிசளித்தேன்
ஒரு
வெள்ளிப்பூண் போட்ட
கைத்தடி.

பதில்

②

எல்லா ஏரியாவும்
விற்று விட்டீர்களா
என்று வினவிய போது
தயாரிப்பாளர் சொன்னார்:
"ஊரிலிருந்த தென்னந்தோப்பு
விருகம்பாக்கத்து வீட்டடி
நன்னிலத்தில் இருந்த நன்செய்
எல்லா ஏரியாவும் விற்றுவிட்டேன்."

முடிவு

③

அந்த எழுத்தாளர்
தமிழை வாழ வைப்பதாய்
முடிவு செய்துவிட்டார்
அதாவது —
எக்காரணம் கொண்டும்
இனிமேல் எழுதப் போவதில்லை.



விளம்பர மாடல் அப்புசாமி!

பாக்கியம்ராமசாமி மாதிரி எழுத முயற்சி செய்திருப்பது: 'கடுகு'

மரவட்டை மாதிரி நன்றாகச் சுருட்டி படுத்துக் கொண்டு விடிகாலைத் தூக்கத்தை ரசித்துக் கொண்டிருந்தார் அப்புசாமி. அபாரமான கனவு.

ராத்திரி வெகுநேரம் வரை தெரு வோர விளக்கின் கீழ் அவருடைய நண்பர்கள் ரசகுண்டுவும் பீமாராவும் தாங்கள் பார்த்த விட்டலாசார்யா படத்தை அப்புசாமிக்குக் காட்சி காட்சியாக விவரித்திருந்தார்கள்.

"தாத்தா, நீ ஜெயமாலினியின் அட்டகாசமான டான்ஸைப் பார்த்திருந்தால் ஸும்மா கிர்ரிங் ஆயிருப்பே" என்றான் ரசம்.

"டேய் அவரேனு ஹாகே ஆகுவதில்லா. அவரு தும்ப வயசாதவரு" என்றான் பீமா.

"யாருடா கெய்ம்....? நீ கெயம், ஒன் தாத்தா கெயம்.... அந்தத் தாத்தாவுக்குத் தாத்தா கெயம்.... வாயை வாஷிங் சோடா போட்டுக் கழுவு. அய்யாவா கெயம்... ஆடு கட்டிடுவேன்" என்று பீமாராவின் மேல் பாய்ந்தார்.

"தாத்தா:.... பீமாவை வுடு. கதையைக் கேளு. ஒரு சீன்லே ஜெயமாலினி பயங்கர மழையிலே மாட்டிக்கிறு.... அடாடா..."

"ஏய், ரசம்..... நீனு ஏனுதரு ஹேளி அவரிகே வயித்தெரிச்சலைக் கிளப்பாதே. அவரெல்லி சினிமா, சினிமாகே ஹோகுத்தாரே? பாட்டிதான் ஃபுல் கண்ட்ரோல் நல்லி இட்டித்தாரே....."

"போடா குண்ரோல்! கண்ட்ரோலாம் ஒண்ணும்....! மேலே கதையைச் சொல்லுடா....."

"தாத்தா மீதிக் கதை நாளைக்கி ராத்திரிதான். ருக்மணி திட்டும்...." என்று ரசகுண்டு சொல்ல, கூட்டம் கலைந்தது.

அப்புசாமி, மரவட்டை அவதாரத்தில் இருந்தாலும், சுகமான கனவில் மிதந்து கொண்டிருந்தார். கம்பீரமான கவர்ச்சி நாயகனாக! ஜெராக்ஸ் காப்பி எடுத்தது போல் பல ஜெயமாலினிக்கள் அவரைச் சுற்றி மழையில் நனைந்து கொண்டிருக்க, எல்லாரும் சடாரென்று தண்ணீரைத் தெளிக்க —

சட்டென்று கண்விழித்துப் பார்த்தார்.

"வாட் ஈஸ் தி டைம்.... எய்ட் ஆச்சு. நீங்க எழுந்துக்கலை. ஐ டோண்ட் அண்டர்ஸ்டாண்ட் வாட் எ ஜென்மம் யூ ஆர்? தூங்கறதுக்கு லிமிட் வேண்டாம்.

"சீதே..... உனக்குத்தான் அம்னீசியா, மலேசியா எல்லாம்.... உனக்கு வயசாயிடுத்து. கிழக்கோட்டான் மாதிரி நைட்டெல்லாம் முழிச்சுண்டு இருக்கே....."

"ஆகாகா... பெரிய இளைஞர் திலகம். உங்க மூஞ்சியை மிர்ரர்லே பாருங்க. அது கூட வேறே பக்கம் திரும்பிக்கும். கெட் அப்...."

"டூ மினிட்ஸ், சீதே...."

"நீங்க என்ன மேக்கியா, டூ மினிட் என்று டீ.வி.யிலே சொல்ற மாதிரி சொல்றீங்களே.... சீக்கிரம் எழுந்திருங்க. மிஸஸ் அலமேலு சந்தானத்தின் கிராண்ட் சன் பர்த்டே செலிபரேஷனுக்குப்போகணும்னு தௌசண்ட் டைம்ஸ் நேற்று சொன்னேன். சீக்கிரம் எழுந்து கிளம்புங்க."

"சீதே.... என்ன பிரமாத பர்த் டே? அது அப்பர் பர்த் டேயாக இருந்தாலும் சரி, லோயர் பர்த் டேயாக இருந்தாலும் சரி, நம்பளை இந்த ஸ்லீப்பர்லேருந்து கிளப்ப முடியாது" என்று சொல்லிவிட்டு அப்புசாமி மீண்டும் மரவட்டை ஆனார்!

ஆனால் தூக்கம் வரவில்லை. 'சீதே.... என் தூக்கத்தைக் கலைத்தாயே, நீ நன்னா இருப்பியா? என் மூஞ்சியைப் பத்தி என்ன சொன்னே? என் மூஞ்சியிலே விழுந்திருக்கிற ஒவ்வொரு வரியும் ரவி வர்மா பிரஷ்ஷால் போட்ட வரி மாதிரி' என்று மனத்திற்குள் பேசிக் கொண்டார்.

வேஷ்டியின் நுனியை நன்றாகத் திருகிக் காதில் விட்டு, சுகமாகக் காது குடைந்து கொண்டிருந்தார் அப்புசாமி.



சட்டம் தெரியாது என்பதால் யாரும் தப்பிக்க முடியாது — வழக்கறிஞர்களைத் தவிர.
— ஜெரமி பெண்ட்ஹாம்



பீமாராவும் ரசகுண்டுவும் வந்தார்கள்.

''தாத்தா.... நீவு தும்ப அதிர்ஷ்டசாலி. நிம்மகே ஐந்நூறு ரூபாய் பருத்தே'' என்றான் பீமாராவ்.

''என்னடா ரசம், பீமா என்ன ரீல் வுடறான், பருத்தே, இளேச்சேன்னு!''

''ரீல் இல்லே தாத்தா.... நெஜம்மாதான் சொல்றான். பீமாவின் மாமா ஒரு விளம்பரக் கம்பெனியிலே இருக்கார். புதுசா ஒரு 'டெய்லி' பத்திரிகை வரப் போறது. அதைப் பத்தி விளம்பரம் போடறாங்க. நீங்க பேப்பர் படிக்கிற மாதிரி படம் எடுக்கணும்.''

''அப்புறம் டீ.வி.யிலே கூட வருமா?''

''ஹௌது தாத்தா ஹாகே கேள்றீர்? மவுண்ட்ரோடில் ஸ்ரீதேவியின் புயல் சினிமா பேனர் பக்கத்தல்லி நிம்ம பேனரை இடுத்தாரே....''

''ஏண்டா ரசம்.... டீ.வி. விளம்பரங்களில் அழகழகா குட்டிப் பொண்ணுங்க வர்றாங்களே. அதுமாதிரி நம்பளோட ஏதாவது கிட்டு கித்வானி, சுப்ரியா பதக், ரீனா ராய்தான்னு இளசா ஒண்ணைப் போட்டா சர்க்குலேஷன் 'கும்'னு தூக்கிடும். பீமா ஒன் மாமா கிட்டே சொல்லும்மா'' என்றார் அப்புசாமி.

''மாமா முதல்லே இந்த மாடலிங் லைன்லே பூருங்க. அப்புறம் பாருங்க நான், நீயின்னு மேலே வுழுவாங்க....''

''யாருடா வுழுவாங்க.... இளசுங்களா?''

''சொல்ல முடியாது தாத்தா. கவர்ச்சித் தாத்தான்னு உங்களுக்கு ஒரு இமேஜ் வந்துடுத்தானால் பணம் மழையா கொட்டும்''

''பீமா.... நீ சொல்றதாலே ஒத்துக்கறேன். ஐந்நூறு ரூபாய் எப்படிடா போறும்?''

''தாத்தா வர்ற லட்சுமியை வேணாம்னு சொல்லாதீங்கோ. பிகு பண்ணாதிங்க...''

''ரசம்.... நீ சொல்றதாலே ஒத்துக்கறேன். போட்டோ எடுக்கறதுக்கு முன்னே பத்து கமர்கட் தாணும். அப்பத்தான் ஜாலி மூடு வரும்....'' என்றார் அப்புசாமி.

ஒரு பொறை பிஸ்கெட்டை, பாதாம் அல்வா சாப்பிடுவதுபோல் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்துச் சுவைத்துக் கொண்டே மேலே பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார் அப்புசாமி.

இடம்: மவுண்ட் ரோடு. அண்ணா சிலை சமீபம்!

ரசகுண்டு, ''தாத்தா.... தூள் கிளப்பிட்டீங்க. அதென்ன ஸ்டைல் தாத்தா! படா ஷோக்காக இருக்கீங்க....'' என்றான்.

''தாத்தா.... நீவு ஒந்து ஸ்டார் ஆகிபிட்றி. நோடு நீரா... பக்கத்தல்லி ஸ்ரீதேவி. வெச்ச கண்ணை தொகையுவ்தில்லா, நிம்ம பேனர் நோடுதவரு'' என்றான் பீமாராவ்.


''பீமா.... எல்லாம் சரிதான். இதைச் சீதாக்கிழம் பார்க்கணும். சும்மா வயிறு எரியணும். 'மங்கையர்மலர்'லே அவளோட போட்டோ வந்ததாம். என்னமா குதிச்சா? அது மட்டுமாடா ரசம்... உங்க போட்டோ வரணும்னு நீங்களே பத்திரிகை ஆரம்பிச்.



"எங்க ஆபீஸ்லே ஒரு சின்னக் குண்டூசி விழுந்தால் கூட சத்தம் கேட்கும்!"

"கொடுத்து வெச்சவர் சார், நீங்க. அமைதியா தூங்குறீங்க!"

— கடுவை. கோபால்சாமி.



சாத்தான் உண்டு'ன்னு இன்ஸல்டிங்கா சொன்னுளேடா.... இந்தப் பேனரைப் பார்த்தா நம்ப காலில் வுழுந்து மன்னிப்புக் கேட்பாடா.... ஏண்டா பீமா... என் தலை இவ்வளவு வழுக்கையாவா இருக்கு. கொஞ்சம் டச் அப் பண்ணியிருக்கலாம். வாங்கடா.... சோன்பப்டி சாப்பிடலாம். ஐந்நூறு ரூபாய்லே அந்தக் கிழவிக்கு அரிசி மிட்டாய் கூட வாங்கித் தரப் போறதில்லே. ரசம்... சாயங்காலம் திருவல்லிக்கேணி பீச்சுக்குப் போய் மிளகாய் பஜ்ஜி அடிக்கலாம்...." அப்புசாமி, விசு எழுதிய டயலாக் மாதிரி விடாமல் பேசிக் கொண்டிருந்தார்.

"ஐ நெவர் தாட் நீங்க இந்த லெவலுக்கு ஸ்டூப் பண்ணுவீங்கன்னு. பொன்னம்மா டேவிட், பா.மு. கழக மீட்டிங்க்லே உங்களைப் பத்தி, அதாவது நீங்க போஸ் கொடுத்திருக்கிறதைப் பத்தி கமெண்ட் அடிச்சா. எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய்ட்டுது...."

"சீதே.... அதுலே நல்லபடியாகத்தானே போட்டோ பிடிச்சுப் போட்டிருந்தாங்க."

"அக்ரீட்.... பட், நீங்க பேப்பரில் என்ன நியூஸ் படிக்கிறதாக் காட்டியிருந்தாங்க. முதல்லே அதைப் போய் அப்ஸர்வ் பண்ணிக்கிட்டு வாங்க. ஹாப் நேக்கட் கேர்ள் படத்தை வாயைத் திறந்து பார்த்துக்கிட்டிருக்கீங்க. இந்த மாதிரி மாடலிங் செய்றதுக்கு முன்னே என்கிட்ட ஒரு வார்த்தை கர்ட்டிசிக்காகவாவது கேட்டீங்களா?"

"சீதே.... அது மாடலிங். ஒரு ஆக்டிங் மாதிரிதான். இப்போ நான் ஒரு சோப் விளம்பரத்துக்கு மாடலிங் பண்ணுறேன். அந்தச் சோப்பை நான், அதாவது இந்த அப்புசாமி யூஸ் பண்றேன்னு அர்த்தமா....."

"இந்த விஷயத்துலே யாரும் அப்படி நினைக்கமாட்டாங்க. நீங்க குளிச்சாத்தானே ரெகுலரா...." இந்த சமயத்தில் டெலிபோன் மணி அடிக்கவே சீதாப் பாட்டி அதைக் கவனிக்கச் சென்றுவிட்டாள்.

"என்னடா ரசம்.... நீ என்ன சொல்றே? இந்தப் படத்தைப் பார். இந்த மாதிரி படம் எடுத்துக்கணுமாம்."

"ஹேனு தாத்தா.... யோசனை. மாடலிங் சும்மனேனு மாடுதிரீ? எங்க மாமா, ஆகாகே காசு கொடுத்தாரே. பாக்கெட் மணிகே பாட்டி ஹத்திர கை நீடு போகா இல்லா!"

"அதில்லே பீமா.... அவர் என்னவோ நாலைஞ்சு பொம்மனாட்டிப் பசங்களுக்கு நடுவுலே நிக்கணும்னு சொல்றுரு. எனக்கு வெக்கமா இருக்குமே...."

"அந்தப் பொண்ணுங்களுக்கே வெக்கம் வருவதில்லா. நிம்மகேக ஏன் வரப் போவுது, தாத்தா? ஆயிரம் ரூபாய் கசக்குதா?"

"ஸோன்பப்டி வாங்கிச் சாப்பிட்டா கசக்காது. பாவக்காய்ச் சாப்பிட்டா கசக்கும். டேய் பீமா, நான் ரெடிடா.... ஸ்விம்மிங் டிரஸ்லே கூட ரெடி. எவண்டா போட்டோ எடுத்துப் பணமும் கொடுக்கிறான், இந்தக் காலத்திலே."

"தாத்தா.... சின்ன வயசிலேயே இந்த லைன்லே நீங்க பூந்திருந்தா எக்கச்சக்கமா சம்பாதிச்சுப் பெரிய வூடு கட்டியிருப்பீங்க...."

"ஏண்டா ரசம், இப்ப மட்டும் என்னவாம்? இப்போ ஒரு சின்ன வீடாவது கட்டறேன். பீமா, உன் மாமாகிட்ட சொல்லு, நான் ரெடி" என்றார் அப்புசாமி.

"டேய் பீமா.... கூனெ க்னேயா நோட்டு...."

"நோட்டு இருக்கட்டும் தாத்தா. நிம்ம போட்டோ காட்டு."

உறையிலிருந்த போட்டோவை நாலுக்காக எடுத்துக் கொடுத்தார் அப்புசாமி.

"தாத்தா.... ஹேனு தாத்தா இது...."

"பீமா.... அவருக்கு அதிர்ஷ்டம்டா. எத்தனை பொம்மனாட்டிங்க! அப்படியே கடிச்சுச் சாப்பிடற மாதிரியில்லே சூழ்ந்துகிட்டு இருக்காங்க. லட்டு கணக்கா இருக்காங்க. தாத்தா கொடுத்து வச்சவரு.

"ஹேனு தாத்தா. இது என்னு அட்வர்டைஸ்மெண்டு?"

"ஏதோ லேகியமாம். எதுவாயிருந்தால் என்ன? நாய் வித்த காசு குரைக்குமா? வாங்கடா, பீச்சிலே போய் பஜ்ஜி சாப்பிடலாம். ராத்திரி செகண்ட் ஷோ போய்ட்டு மசாலா பால் அடிக்கலாம். அடி சீதே பாட்டி.... உனக்கு பாக்கெட் மணி வேணுமா என்னைக் கேளு!" என்று நாடக பாணியில் கூறித் தன் மார்பைத் தட்டிக் கொண்டார்.

துரதிர்ஷ்டம்! அடுத்த அறையில் உறங்குவது போலிருந்த சீதாப்பாட்டி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாள்!

அப்புசாமி, போட்டோவைத் தன் ட்ரங்கில் வைத்துவிட்டு பீச்சுக்குப் புறப்பட்டதும், ட்ரங்கைத் திறந்து பார்த்ததும் சீதாப் பாட்டிக்கு ஏற்பட்டது ஷாக்!

"திஸ் ஈஸ் அட்ரோஷியஸ்..... இந்த லேடீஸ் எல்லாம் டிரஸ் பண்ணிண்டா இருக்காங்க. பார்க்கக் கண் கூசறது. ஐ

திங் திஸ் ஓல்ட் மேன் ஹேஸ் கான் மேட்! என்னமோ லேகியமாமே.... ஓ, காட்.... இது ஏதோ டர்ட்டி விளம்பரமாக இருக்கும். ஐ ஷுட் ஸ்டாப் திஸ்.''

சிதாப்பாட்டியின் கம்ப்யூட்டர் மூளை மளமளவென்று வேலை செய்தது. போட்டோவைத் திருப்பிப் பார்த்ததில் போட்டோக்காரரின் பெயர் விலாசம் இருந்தது. அவருக்குப் போன் பண்ணி, பீமாவின் மாமாவைக் கண்டு பிடித்தாள்.

''ஐ எம் மிஸஸ் அப்புசாமி. எஸ். எஸ். உங்க லேகிய விளம்பர மாடல்.... அவர் மாடலிங்குக்காக இப்ப வெளியே போயிருக்கார். ஒரு சின்ன விஷயம். வேறே ஒரு லேகியக் கம்பெனிக்காரங்க அவரை மாடல் பண்ணச் சொல்லிக் கூப்பிடறாங்க. இப்ப உங்களுக்காக ஒரு லேகிய விளம்பரத்திற்குப் போஸ் கொடுத்திருக்காரு இல்லையா? அதனால் ஒத்துக்க மாட்டோம்னு சொல்ல நினைக்கிறேன். பை தி வே, என்ன லேகியக் கம்பெனி உங்களுடையது.... திஸ் ஈஸ் ஜஸ்ட் ஃபார் அவர் இன்ஃபர்மேஷன். இன்சிடெண்ட்லி ஐ எம் சிதாப்பாட்டி, பிரசிடெண்ட் ஆஃப் பா.மு. கழகம்...''

''இஸ் இட் மேடம். உங்க ஹஸ்பண்ட் தான் தி கிரேட் அப்புசாமி.... ஹி ஈஸ் எ ஒண்டர்ஃபுல் மாடல்.... யெஸ். அந்த லேகியம்.... அது வந்து....''

''ஏன் ஹெஸிடேட் பண்றீங்க.... மாடலிங்னு வந்துட்டால் யூ ஷுட் பி ரெடி ஃபார் எவ்வரிதிங்க்....''

''தட் ஈஸ் தி ஸ்பிரிட் மேடம். அது வந்து ரதி–மன்மத லேகியம்.... யூ நோ த ஸ்டஃப்... ரிஜுவெனேஷனுக்கு....''

''ஓ அப்படியா, இட் ஈஸ் பர்ஃபக்ட்லி ஆல்ரைட்.... தேங்க்யூ.....''

''யூ ஆர் வெல்கம் மேடம்!'' போனை வைத்ததும், சிதாப்பாட்டி தன் மூளையைக் கசக்கிக் கொண்டாள்!

ஜடை கட்டி ட்ரிம்மாகக் காரில் வந்து இறங்கிய ஆசாமியைப் பார்த்து அப்புசாமி அசந்துவிட்டார். கார் என்றால் படகுக் கார்!

''மிஸ்டர் அப்புசாமி? ஐ எம் மோகன் ராஜ். மோகன் மாடலிங் ஏஜென்ஸி நடத்தறேன். இண்டியாவிலேயே இது பெரிய ஏஜென்சி''.

அப்புசாமி மனத்திற்குள் 'ரேட்'டைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தார்.

''ஏதாவது மாடலிங் பண்ணணுமா?''

''கரெக்ட். எங்க கிளையண்ட், உங்க போட்டோவைப் பார்த்து அசந்துட்டாரு. அவரு பிராடக்ட் விளம்பரங்களுக்கு உங்களை எக்ஸ்க்ளூஸிவ்வா யூஸ் பண்ண ஆசைப்படறார்.''

''அப்படீன்னா?''

''அந்த பிராடக்ட் சம்பந்தப்பட்ட பத்திரிகை, டீ.வி. விளம்பரங்கள், பேனர் எல்லாவற்றிலும் நீங்கதான் இருக்கணும். அதுக்காக ஒரு பத்து வருஷ காண்ட்ராக்ட் போட்டுக்கலாம் என்கிறார்.''

புதுக் கவிதைப் போட்டி



நீங்கள் ப்ளஸ்டு அல்லது கல்லூரி மாணவரா? இதோ உங்களுக்காக வேறொரு போட்டி:

தேவை: ஒரு பேனா, ஒரு போஸ்ட் கார்ட், கொஞ்சம் மூளை, கொஞ்சம் கற்பனை +

அடுத்த வார கல்கி இதழ்.

அடுத்தவார கல்கி வருவதற்குள் போஸ்ட் கார்டை வாங்கி, அதன் பின்புறத்தில் பள்ளி அல்லது கல்லூரி முத்திரையைப் பெறுங்கள். உங்கள் பெயர், விலாசத்தை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.

9.11.86 கல்கி இதழின் மேலட்டைக்குப் பொருத்தமாக கற்பனையைத் தூண்டிவிட்டு ஒரு புதுக் கவிதையை போஸ்ட் கார்டின் மறுபக்கத்தில் எழுதி 17.11.86 க்குள் எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பி வையுங்கள்.

கார்டில் நுணுக்கி நுணுக்கி நாற்பது வரி எழுதும் சாமர்த்தியத்துக்குப் பரீட்சை இல்லை இது. நறுக்குத் தெரிந்த மாதிரி நாலு வரி, மிஞ்சிப் போனால் எட்டைத் தாண்டக் கூடாது.

முதல் பரிசு: ரூ. 100/–

இரண்டாம் பரிசு: ரூ. 25/– தவிர ஆறு மாதங்களுக்குக் கல்கி இலவசம்.

தவிர, பிரசுரமாகும் கவிதைகள் அனைத்துக்கும் சன்மானம் உண்டு.



காதல் என்பது பித்துப் பிடித்த நிலை அல்ல; ஆனால் இரண்டுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. — தாமஸ் கார்லைல்



''அதாவது.....''

''காண்ட்ராக்ட் முடியற வரைக்கும் வேறே யாருக்கும் மாடலிங் பண்ணக் கூடாது. ஆனல் மாசா மாசம் உங்களுக்கு நாங்க 1000 ரூபாய் ரீடைய்னர் கொடுப் போம். மாடலிங் பண்ணும்போது 5000 ரூபாய், ஒவ்வொரு ஸிட்டிங்கிற்கும்.... ரேட் குறைவுதான். ஆனல் இப்போ நீங்க ஒத்துக்கணும். பிஸினஸ் இம்ப்ரூவ் ஆனல், ரேட்டை ஏத்தரேம்'' என்று வார்த்தைகளைச் சாக்ரீனில் தோய்த்துத் தோய்த்துச் சொன்னர்.

அப்புசாமிக்கு ஒன்றும் புரியவில்லை. 'நமக்கா இத்தனை அதிர்ஷ்டம்' என்று சந் தோஷத்தால் திக்குமுக்காடினர்.

அந்தச் சமயம் சீதாப்பாட்டி அங்கு வந் தாள், காப்பியுடன், ''சீதே.... இவர் வந்து....''

''ரீஸனபிள் ஆஃபர். கண்ணை மூடிண்டு கையெழுத்துப் போடுங்க.''

அப்புசாமிக்குத் தலைகால் புரியவில்லை. சீதா ஒரு வார்த்தைகூட எதிர்ப்பு தெரி விக்கவில்லை. ஸெவன்த் ஹெவனுக்குப் போய்விட்டார்!

அப்புசாமி கையெழுத்துப் போட்டார் காண்ட்ராக்டில். மோகன்ராஜ் ஆயிரம் ரூபாய் எண்ணிக் கொடுத்தார்.

அப்புசாமியைப் பார்க்க பீமாவின் மாமா வந்தார்.

''சார்.... அந்த லேகிய விளம்பரம் பிர மாதமான லே—அவுட் போட்டுத் தயார் பண்ணியிருக்கோம். க்ளையன்ட் அசந்து போய்ட்டான். நாலு லட்சம் போஸ்டர் அடிக்கச் சொல்லி, வேலை நடந்துண்டு இருக்குது....''

''ஹி.... ஹி.... அப்படியா. இனிமேல் தமிழ்நாட்டில் எல்லாச் சுவர்களிலும் நான் தானு?''

''நீங்கள் மட்டுமில்லே. ஜிலுஜிலு குமரி கள். குளுகுளு கன்னிகள்....''

''சார்.... ஒரு போஸ்டரை நான் பார்க்க லாமா?''

பீமாராவின் மாமா அந்த மூவண்ண போஸ்டரை எடுத்துக் காட்டினர்.

''சார்.... எனக்கு ஒரு காபி தர்றீங் களா?''

''இது ரஃப் ப்ரூப். வார்னிஷ் போட்ட தைத் தர்றேன்.''

''அதுவரைக்கும் இதை வெச்சுக் கறேன்'' என்று கெஞ்சி வாங்கிக் கொண் டார் அப்புசாமி.

''**போ**ஸ்ட்மேன், ரிஜிஸ்தர் லெட்டரா யாருக்கு....? என் ஹஸ்பெண்டுக்கா. இதோ கூப்பிடறேன்....'' அப்புசாமியைச் சீதாப்பாட்டி கூப்பிட்டாள்.

''யார் எனக்கு ரிஜிஸ்தர் அனுப்பப் போருன். ஓ, செக்காக இருக்கும். சீதே கெட் மீ எ பென்'' என்று அலட்டலாகச் சொன்னர் அப்புசாமி.

கவரை வாங்கிப் பிரித்துப் பார்த்ததும் தேள் கொட்டியது போல் குதித்தார்.

''ஒய் ஆர் யூ ஜம்பிங் லைக் எ வால் அறுந்த பல்லி? எந்தப் பட்டணத்தை யார் ராப் பண்ணிட்டாங்க?''

''கொள்ளையடி சீதே.... கொள்ளை.... இந்த மோகன்ராஜ் வக்கீல் நோட்டீஸ் அனுப்பியிருக்கான். அவன் அனுமதி இல்லாமல் லேகிய விளம்பர போஸ்டர் என் படத்தோட அச்சடிச்சது தப்பாம். 25,000 ரூபாய் நஷ்ட ஈடு தர்றணுமாம். காண்ட்ராக்டிலே அப்படி கண்டிஷன் இருக்குதாம்.''

''இருக்கட்டுமே. காண்ட்ராக்டில் கையெழுத்துப் போடறதுக்கு முன்னேயே மாடலிங் பண்ணதுதானே இது.... டேக் இ காண்ட்ராக்ட் காப்பி. லெட் மீ ஸீ.''

அப்புசாமி ஓர் அழுக்குத் துணியில் சுற்றிக் கட்டி வைத்திருந்த மோகன்ராஜ் காண்ட்ராக்ட்டை எடுத்து வந்தார்.

சீதாப்பாட்டி பிரித்துப் பார்த்தாள்.

''மோகன்ராஜ் ஈஸ் கரெக்ட். நீங்க காண்ட்ராக்ட்டைச் சரியாப் படிக்கலே. இது என்ன டேட் தெரியுமா. ஜூன் 18, 1985. தட் ஈஸ் லாஸ்ட் இயர்.''

''இந்த வருஷம்தானே நான் கையெழுத் துப் போட்டேன்.''

''அதை கோர்ட்டு ஏத்துக்காதே. இதிலே கிளியரா இருக்கே. அதனல் இந்த தேதிக் குப் பிறகு நீங்க லேகிய கம்பெனிக்கு மாடலிங் பண்ணியது தப்பு. இல்லீகல்.''

''இது தில்லுமுல்லு. என்னை ஏமாத்தி கையெழுத்து வாங்கிட்டாங்க.''

''கோர்ட்டு, கேஸ்ன்னு போய் ஊரெல் லாம் சந்தி சிரிக்கணுமா.... யூ டூ ஒன் திங்க். அந்த லேகிய கம்பெனியிலே போய், அவங்க கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுத்துடுங்க.''

''அவங்க போஸ்டரெல்லாம் அச்சடிச் சிருப்பாங்களே.''

''அந்தச் செலவையும் கொடுத்திடலாம். டேக் மை செக் புக். போய் செட்டில் பண்ணிட்டு வந்து, வர்ற வழியிலே ரோடு குழாயிலே முழுக்குப் போட்டுட்டு வாங்க, இந்த மாடலிங் வேலைக்கு.... அண்டர் ஸ்டாண்ட்....''

பதவி இழந்த மந்திரியைப் போல அப்பு சாமி செக்புக்குடன் லேகியக்கம்பெனிக்குச் சென்றர்!

''**தே**ங்க்யூ மிஸ்டர் மோகன்ராஜ்.... அவருக்கு ஒரு லெஸ்ஸன் டீச் பண்ணற துக்கு ஹெல்ப் பண்ணீங்களே.... ஆமாம். போஸ்டர் பிரின்ட் பண்ண என்ன செல வாச்சு?''

''அது ஃபர்ஸ்ட் ப்ரூப்தான். பிளாக் சார்ஜ் 500 ஆச்சு. அது போக மீதிப் பணத்தை அனுப்பிடறேன்.''

சீதாப்பாட்டி தன் 'காப்'பில் மற்றெரு ஃபெதரைச் சூட்டிக் கொண்டாள்!

*****



அம்மாவின்
அன்புடன்
அம்மானை பிடிக்க
முயலும் அன்புச்
செல்வம்

அச் செல்வத்தை
ஊக்குவித்து வளமான
வாழ்வு அளிக்க
இன்றே போலியோ சொட்டு
மருந்து அளித்திடுங்கள்

உங்கள் குழந்தைக்கு போலியோ சொட்டு மருந்து
அளித்து இளம்பிள்ளை வாத நோயிலிருந்து
பாதுகாப்பு அளித்திடுங்கள்

எல்லா வார நாட்களிலும்
மாலை : 3 முதல் 6 வரை
ஞாயிறு : விடுமுறை

மருத்துவரின் மேற்பார்வையில் போலியோ சொட்டு மருந்து
டிரிபிளாண்டிஜென் மற்றும் மீஸில்ஸ் வாக்ஸின்
அளிக்கப்படும் இடம் :

தமிழ்நாடு தாதா பார்மஸூடிகல்ஸ் லிமிடெட்

10, பத்மாவதியார் சாலை, ஜெய்பூர் நகர், (ஆயிரம் விளக்கு மசூதி அருகில்)
சென்னை-600 086. தொலைபேசி : 470656 479603

சின்னச் சின்ன கனவுகள்

சுபா

1



இந்திரா கடைசியாக அந்த அலமாரியைத் திறந்தாள். பாச்சை உருண்டை வாசம். முதுகு சாய்த்து நின்றிருந்த சட்டம் போட்ட முருகன் படம். அதை எடுத்தாள். முந்தானையால், படிந்திருந்த ஒட்டடையைத் துடைத்தாள். துணிகள் அடைத்து, பிதுங்கிக் கொண்டிருந்த பையில் மேலாக அதையும் செருகினாள்.

'மேல்தட்டில் ஏதாவது மிச்சமிருக்கிறதா என்ன? ஸ்டூலை 'டர்ர்' என்று இழுத்துப் போட்டு ஏறிப் பார்த்தாள்.

பாச்சை உருண்டைகளுக்கு 'பெப்பே' காட்டிவிட்டு, இரண்டு மூன்று கரப்பான்கள் ஏரியல்களை ஆட்டிக் கொண்டு குழப்ப ஊர்வலமாய் ஓட, நான்கைந்து காகிதப் பொட்டலங்கள் இருந்தன. மடிக்கப்பட்டிருந்த காகிதத்தை மஞ்சளாக்கிக் கொண்டு அம்மன் குங்குமம். இனி இது தேவையில்லை. வெறுமையான நெற்றியில் அந்தக் குங்குமச் சுவடு கூட மறைய ஆரம்பித்து விட்டது. இருபது நாட்களுக்கு முன், சூரியன் வெகு கோபமாயிருந்த ஒரு பிற்பகலில், டீக்கடை ரேடியோவின் கீரத்த கிரிக்கெட் வர்ணனைக்கு நடுவில், ஏர் — ஹாரன்களின் அதட்டல்களுக்கு இடையில், பாபுவைச் செக்கச் செவேலென்று நடுச்சாலையில் தேய்த்த லாரி, அவளுடைய மஞ்சளையும், பூவையும் சேர்த்து நசுக்கி விட்டது.

பாபுவின் நினைவு இந்திராவின் கண்களில் வெம்மையைப் பரவச் செய்தது. அவனோடு இணைந்த, நடந்த, சிரித்த, அழுத, சில பல அந்தரங்கமான இரவுகளைக் கொண்ட பன்னிரண்டு ஆண்டுகள். அந்தப் பாதை ஒன்றும் ரோஜாக் கம்பளப் பாதை இல்லை. இருந்தும் சில்லறைகளைப் போட்டு வைக்கும் உண்டி போல், தன் சுக துக்கங்களைச் சேகரிக்க இருந்த ஒரு துணை அவன்.

'இந்து இங்கே வாயேன்.. வாம்மான்னு.'

'ஷ்... பையன் இன்னும் தூங்கலேங்க.'

'நான் ஒனக்கு என்ன வாங்கிட்டு வந்திருக்கேன்னு பார்க்க வேண்டாமா?'

'பொடவை! ஏதுங்க பணம்?'

'வெலே ஜாஸ்தியில்லம்மா... இருக்கிற ரெண்டு பொடவையும் அங்கங்க கிழி...'

'பணம் ஏதுங்க?'

'விடமாட்டியே... கடன் வாங்கித்தான்.'

'எத்தனை தடவை சொல்லியிருக்கேன். கடன் வாங்காதீங்கன்னு. நான் இந்தப் பொடவையைக் கட்ட மாட்டேன்.'

'இந்து.. இந்து.. கண்ணம்மா இல்ல நீ?'

'இல்லை.'

சதுர டிசைன் போட்ட அந்த காட்டன் ஸாரியை எடுத்து இப்போது நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். பாபுவின் வியர்வை வாசம் அதில் பொதிந்திருந்தது.

''அம்மா!''

வாசல் கதவைத் தடாலென்று திறந்து நந்தகுமார் நின்றான். அவன் கையைப் பிடித்துக் கொண்டு வீட்டின் சொந்தக்காரர்.


''கெளம்பிட்டியாம்மா?''

''ஆமாங்க.'' ஸாரியைப் பையில் திணித்தாள். அறையோரம் சேர்க்கப்பட்டிருந்த மூட்டை முடிச்சுக்களைப் பார்த்தாள். ''இனிமேல் இந்த ஊர்ல எனக்கு என்ன இருக்குங்க? மூஞ்சியைத் திருப்பிக்கிட்டாலும் ரத்த பந்தம் விட்டுப் போகாது. எங்க அண்ணன் வீட்ல, ஒரு மூலேல முடங்கிக்க வேண்டியதுதான்.

''இந்தாம்மா'' வீட்டுக்காரர் நீட்டிய பணத்தைத் தயக்கத்துடன் தொடாமல் பார்த்தாள். ''இது உன்னோட பணம் தாம்மா... இருநூத்தி அம்பது ரூபா. வாடகைக்குன்னு வந்தப்ப கொடுத்த அட்வான்ஸ் பணம்.''

வாங்கிக் கொண்டாள்.

''பணம் போதுமாம்மா?''



நன்றிக் கண்களுடன் அவரை ஏறிட்டான்.

''உண்டியில் போட்டு வச்சது நூத்தி அம்பது ரூபா இருக்கு. நாலு பவுனுக்குச் சங்கிலி இருக்கு. அவசரமா அரிசி வாங்கணும்னு கழற்றிக் கொடுக்கக் கால்ல கொலுசு இருக்கு. போற எடத்தில உழைச்சிச் சம்பாதிக்க முடியும்ங்கிற நம்பிக்கை இருக்கு. போதும்ங்க.''

''பத்திரம்மா... நான் வேணு பஸ் ஸ்டாண்ட் வரைக்கும் வரட்டுமா?''

இருளான தெருக்களில் நடந்த போது, கூடவே வரும் நிலாவைப் போல் பாபுவின் நினைவுகள் நிழலாய்த் தொடர்ந்தன.

''எங்கிட்டே கொடும்மா... உனக்கு கையை வலிக்கப் போகுது.''

நூறாவது முறையாக இந்திராவின் கையிலிருந்த பெட்டியைப் பிடுங்க நந்தகுமார் முயன்றான்.

''உன் டவுசரை மொதல்ல இடுப்புல நிக்க வெப்பியாம். அப்புறம் இந்தப் பெட்டியைத் தூக்குவியாம்'' என்று அவன் தலையில் கைவைத்து முடியை ஆதுரத்துடன் அளைந்து விட்டாள். அப்பாவைப் போல் இவனுக்கும் சுருள் முடி.

''கேக்கறேனேன்னு தப்பா நெனைக்காதேம்மா...'' வீட்டுக்காரர் தன் சுமையைக் கைமாற்றிக் கொண்டு தொடர்ந்தார். ''பாபுவோட சிநேகிதக்காரங்களுக்கெல்லாம் பதில் சொல்லிட்டல்ல?''

இந்திரா திடுக்கிட்டு நிமிர்ந்தாள். இவர் வரை விஷயம் எட்டிவிட்டதா என்ன?

''யார் சொல்றது நிஜம்? யார் சொல்றது பொய்ன்னே தெரியலீங்க. அவர் கண்ணை மூடின கையோட ஒவ்வொருத்தனு வீட்டுக்கு வர ஆரம்பிச்சிட்டான்.. 'பாபு எனக்கு நூறு தரணும், எனக்கு இருநூறு தரணும்'னு தினம் நாலஞ்சு பேரு... எங்கிட்ட ஏதுங்க அவ்வளவு பணம்? இன்னும் சொல்லப் போனா தனியா நின்னு அவங்களைச் சமாளிக்கமுடியாதுங்கிற பயத்திலதான் இப்படி இருட்டினப்புறம் நான் ஊரை விட்டே கௌம்பறேன்.''

''ஏம்மா பயப்படறே, நான்தான் இருக்கேனே?'' நந்தகுமார் குரலைக் கொஞ்சம் உயர்த்திக் கொண்டான். ''லெஃப்ட்ல ஒண்ணு, ரைட்ல ஒண்ணு கொடுத்து அவங்களைக் கவுத்துட மாட்டேன்.'' இறங்கியிருந்த ட்ராயரை மறுபடி மேலேற்றிக் கொண்டு அம்மாவைப் பார்த்தான் அவன். இந்திரா அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''இவனுக்கு இப்ப வயசு என்னம்மா?''

''ஐப்பசி வந்தா ஒன்பது முடியும்'' இந்திராவைப் போல் குரலை மாற்றிக் கொண்டு நந்தகுமார் பதில் சொன்னான்.

மூன்று பேரும் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பின் பின்னால், இந்திராவின் எதிர்கால பயம் கூடக் கொஞ்சம் ஒளிந்து கொண்டது.

பஸ் ஸ்டாண்டை நெருங்கியதும் சுதம்பமான வாசம் சூழ்ந்து கொண்டது. லாட்டரிச்சீட்டுக்கடையின்ஃப்ளோரசன்ட் ஒளியில், பிய்த்து எறிந்த ஆரஞ்சுத் தோல்கள், நசுங்கிப் போன வாழைப் பழங்கள், சேற்றில் படிந்திருந்த டயர் தடங்கள், யாரோ எடுத்த வாந்தி, குத்துக்காலிட்டு உட்கார்ந்த மனிதர்கள் துப்பிய சிவப்பு புளிச்.

'இந்த ஊர் உனக்குப் பிடிக்கலையா இந்து?'

'ம், பிடிச்சிருக்கே!'

'நானு?'

'இந்தக் கேள்விதான் புடிக்கலே.'

'இல்ல. உன்னை எப்படியாவது கழற்றி விடணும்னு உங்க அண்ணன் துடிச்சிட்டிருந்தான். சாதாரண சைக்கிள் கடைல ரொம்ப சாதாரணமா வேலை செய்யற என்னை உன் தலைல கட்டிட்டான் இல்ல?'

'உங்களுக்கென்ன கொறைச்சல்? ஜம்முனு ராஜா மாதிரி இருக்கீங்க. ஒரே ஒரு கெட்ட பழக்கந்தான்.'

'அப்படி இப்படி அதில கொண்டு வந்து நிறுத்திடுவியே?'

'நெஜமாத்தான் சொல்றேங்க. கண்டபடி வசதிக்கு மீறிக் கடன் வாங்காதீங்க.'

'நான் என்ன சீட்டாட்டத்திலயும், குதிரை ரேஸ்லயும்கொண்டுபோயா கொட்றேன்? நந்துவுக்குப் பெரிய ஸ்கூல் படிப்பு, கட்டிக்க நல்ல துணி, வீட்ல பொங்க சாமான் செட்டு... இதுக்கு என் மாசச் சம்பளம் போறலையே கண்ணம்மா.'

''என்னம்மா, பாபு ஞாபகமா?''

இந்திரா ஒரு குலுக்கலோடு நிகழ்காலத்திற்கு வந்தாள்.


''பசுபதி கோயிலுக்குக் கடைசி பஸ் கௌம்பப் போவுதாம். நீயும் தம்பியும் ஏறுங்க. நான் டிக்கெட் வாங்கறேன்.''

''அம்மா, ஜன்னல் பக்கம் நான் உக்காரேம்மா.''

இந்திரா அவனை ஜன்னலோரம் விட்டு, பக்கத்தில் அமர்ந்தாள். அவன் கைவிரல்களைப் பிரித்துத் தன் கையோடு கோத்துக் கொண்டாள். நெஞ்சு முழுக்க நிறைய படக், படக். பஸ் உடனே புறப்பட்டால் பரவாயில்லை. பாபுவின் நண்பர்கள் திடீரென்று முளைத்துவிட்டால்?


காலையில் வீட்டிற்கு வந்து கூச்சல் போட்ட கருப்பண்ணன் நினைவுக்கு வந்தான். முரட்டுத்தனமான அவன் மீசையும், சுருட்டிவிடப் பட்ட சட்டைக் கைகளும், புஜத்தில் தவித்த தாயத்தும்...

'எனக்குச் சேர வேண்டிய பணத்தை உன்கிட்டேர்ந்து கறக்கற வரைக்கும் நீ என் கண்லேர்ந்து தப்பிக்க முடியாது. நீ பொட்டை நாயி. நான் ஆம்பிளை சிங்கம். அதை ஞாபகத்தில வெச்சிக்க.'



தன் மகனை மனிதனாக்க இருபது ஆண்டுகள் பாடுபடுகிறாள் ஒரு தாய்; அந்த மனிதனை முட்டாளாக்க நினைக்கும் பெண்ணுக்கோ இருபது நிமிடங்களே போதும்.

— ராபர்ட் ஃப்ராஸ்ட்



துக்கம் தோய்ந்த தூங்காத இரவுகளை விட அவனுடைய மிரட்டல் அதிக வேதனையாய் இருந்தது. பஸ் புறப்பட்டு விட்டால் போதும். நிம்மதியாய் ஒரு பெருமூச்சை விடலாம்.

"இந்தாம்மா டிக்கெட்."

ஜன்னல் வழியே வீட்டுச் சொந்தக்காரர் நீட்டிய டிக்கெட்டுகளை வாங்கிக் கொண்டாள்.

"எவ்வளவுங்க?"

"ஒண்ணரை டிக்கெட்டுக்குக் கூட கணக்குப் பார்க்கிறவன் இல்லேம்மா நான். பணம் பத்திரம். ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் ஒரு கால் கடுதாசி போடு. போதும்."

பஸ் குலுக்கலுடன் டீஸல் புகையைக் கறுப்பாகப் பின்தள்ளிவிட்டுப் புறப்பட்டது. பார்வை மறையும் வரை கையை வீசி வழியனுப்பி விட்டு வீட்டுக்காரர் விலகினார். அவளுடைய பன்னிரண்டு ஆண்டு ஊரும் பின்னே பின்னே சென்று சின்னச் சின்ன ஒளிநட்சத்திரங்களாய் மின்னி மறைந்தது.

நந்தகுமார் மெல்லத் தலையை அம்மாவின் தோளில் சாய்த்துக் கொண்டான். பஸ்ஸின் குலுக்கலில் அவனுடைய இடது காது அதிர்வுகளோடு அவளுடைய தோளில் தாளமிட்ட போது சிலிர்ப்பாயிருந்தது.

"அம்மா."

"என்ன நந்து?"

"மாமா நல்லவராம்மா?"

ஜெயபால் நல்லவனா என்பது முக்கியமில்லை. இரக்கமுள்ளவனாய் இருந்தால் போதும் என்று நினைத்துக் கொண்டாள். பதில் சொல்லாமல் விட்டாள். மேலே நச்சரிக்காமல் நந்தகுமாரின் கண்கள் செருகிக் கொண்டன.

கடந்து போன வருடங்களை அசை போட்டுக் கொண்டு இந்திராவும் மெல்லக் கண்களை மூடினாள்.

சட்டென்று விழிப்பு வந்த போது பஸ் அடுத்த ஊரில் நின்றிருந்தது. டிரைவரும், கண்டக்டரும் டீக்கடைக்குள் நுழைந்திருந்தார்கள். பஸ்ஸின் முன் வழியே தடதடவென்று நான்கு பேர் ஏற, பஸ் மெலிதாகக் குலுங்கியது.

முதலில் ஏறியவனை இந்திராவிற்கு உடனே அடையாளம் புரிந்தது.

கருப்பண்ணன்!

"அதோ இருக்காளுடா... டேய்... ஏண்டி பணம் கொடுக்காம ஏமாத்திட்டு ஊரை விட்டே ஓடறியா?"

மூச்சில் சாராயம். பேச்சில் ஆவேசம். கருப்பண்ணன், இந்திராவை இரண்டே எட்டில் அண்டினான்!

(தொடரும்)




ஹூம்! நீங்க துணை முதலமைச்சர் ஆகணும்னு இத்தனை பேர் எனக்கு எழுதியிருக்காங்க. இது அந்த (இதய) தெய்வத்துக்குத் தெரியணுமே!



விஷயம் ஒண்ணுதான். நீங்க, போகட்டும்னு கவலைப்படாம சிரிச்சுகிட்டு இருக்கீங்க. ஆனா அவர் கவலைப்படறாரு.



ஏன் தயங்கறீங்கம்மா? இது ரேஷன் அரிசியிலேசெஞ்ச சாப்பாடு இல்லேம்மா. கல்லு மண்ணு இருக்காது.


கிளிக் கிண்டல்!
என்னம்மா இது? அவர் மன்ற மறவர் களுக்குத்தான் சொன்னரு....
ஐயோ! இனிமே சத்தியமா சினிமாவுல நடிக்க வரமாட்டேன், காதை விட்டுடு!
இது டான்ஸ் இல்லீங்க.... இரண்டு பேரும் 'லிஃப்ட்' கேட்கறோம்....



பிடி, உஷா!

ஜே.எஸ்.ராகவன்

மைதாஸின் மலிவுப் பதிப்புத்தான் கோலார் கோபாலசாமி. அவருடைய இதயத்தை ஒரு சர்ஜன் கத்தி போட்டுத் திறந்து பார்த்தால், நான்கு அறைகளிலும் ரத்தத்திற்குப் பதில் தங்கம் இருப்பதைப் பார்த்து, "சார் உங்க மனசு தங்கம்," என்று சர்டிபிகேட் கொடுத்து விடுவார் — அந்தத் தங்கத்தை ஃப்ரீஸாக எடுத்துக் கொண்டு.

கோலார் கோபாலசாமியின் சொந்த ஊர் பொன்னேரி. மனைவி பெயர் தங்கம். பிஸினஸ் பார்ட்னர் பங்காரு. செல்லமாக வளர்க்கும் நாய்க் குட்டியின் பெயர் கோல்டி. அவர் வீட்டில் விளையும் கீரை பொன்னாங்கண்ணி; சின்ன வீட்டுச் செல்லத்தின் பெயர் சொர்ணம்!

'இடுப்புக்குக் கீழே தங்கம் அணியக் கூடாது' என்ற சாஸ்திரத்தைப் பொன்னாக மதிக்கும் கோலார் கோபாலசாமி வாலிப வயதில், ஒயிலான பெண்களை விடுத்து, தாட்டியான தங்கத்தின் கையைப் பிடித்தது, அவளுடன் வந்த லார்ஜ் சைஸ் ஒட்டியாணத்தை முன்னிட்டுத்தான்.

உலகத்தை ஒரு தங்கச் சுரங்கமாகவும், தன்னை ஒரு ஹெல்மெட் அணியாத சுரங்கத் தொழிலாளியுமாகப் பாவித்துச் செயல்பட்டு வந்த வெறும் கோபாலசாமியை அன்பர்கள் கோலார் கோபாலசாமி என்று விசேஷமாகக் குறிப்பிட ஆரம்பிக்க, கேள்விப்பட்ட கோபாலசாமி கோபப்படவில்லை. பரவசத்துடன் அதை ஏற்றுக் கொண்டு, தந்திபேப்பரில் அறிவிப்பு வெளியிட்டுப் பின்னர் லெட்டர் ஹெட்டில் பதிப்பித்துக் கொண்டார் — தங்கக் கலர் எழுத்துக்களில்!

அன்று காலையில் கண் விழித்த கோலார் கோபாலசாமி, சூரியனின் பொற் கிரணங்களைப் பார்த்து, இந்தத் தங்கக் குழம்பை, பிஸ்கெட்டுகளாக மாற்றினால் எவ்வளவு கிலோ தேறும் என்று குத்து மதிப்பாகப் போட்டுக் குழம்பி, 'சே, இது நடக்காத காரியம்' என்று கைவிட்டு, முதல் நாள் வாங்கின காப்பிக் கொட்டைச் சங்கிலியை மறுபரிசீலனை செய்ய, ஆரம்பித்த போது, அவருடைய திருக்குமாரன் உள்ளே நுழைந்தான்.

"என்னடா, தங்கப்பா, என்ன வேணும்?"

"அப்பா! என்னைத் தங்கப்பன்னு கூப்பிடாதீங்கன்னு எத்தனை தட்வை சொல்றது. சுத்த கர்நாடகப் பெயர். என் பேர், நம்பி, நம்பி, நம்பி!"

"போடா, அதெல்லாம் பேரா? அது இருக்கட்டும் என்ன விஷயம்?"

"ஏம்ப்பா காலம் கெட்டுக் கிடக்கு. இந்த நகைகளையெல்லாம் வீட்டிலே வெச்சிருக்கீங்களே. ஏதாவது லாக்கரிலே வைக்கக் கூடாதா?"



"பைத்தியம். காலங்கார்த்தாலே எந்த பாங்க் ஏஜெண்ட்டுடா லாக்கரைத் திறந்து குடுப்பான்? நெனேச்ச போது ஒவ்வொரு நகையா எடுத்துப் பார்க்க முடியுமா? பாதி நாள் பாங்க் லீவு வேறே!"

"கொள்ளே போனத்தான் உங்களுக்குப் புத்தி வரும். அது போகட்டும். இதையெல்லாம் இன்ஷியூர் செஞ்சா என்ன?"

"அது வேணு செய்யலாம். ஏதாவது அரேஞ்ச் பண்றியா?"

"செய்யறேன். இன்னொரு விஷயம் அப்பா. என்னேட கல்யாணத்தைப் பத்தி அம்மாகிட்டே சொல்லியிருக்கேன். அப்புறம் சொல்லுவா."

"உங்கம்மாவா! ஹூம் எனக்குன்னு வந்து வாய்ச்சாளே. இப்படி நகையிலேயே நாட்டமில்லாத ஒரு பொம்பளேயா! அப்படி என்ன சொல்லப் போரு? 'நம்ம வீட்டுக்கு வரப் போற பொண்ணு நகையே இல்லாம வரணும்னு'. அப்படித்தானே. அது நடக்கவே நடக்காது!"

அம்மாகிட்டே சொல்லிப் பாருங்க. நான் மார்க்கெட் போகணும். அம்மாவுக்குக் காரெட் வேணுமாம்."

"காரெட்டா? எவ்வளவு வாங்கப் போறே?"

"ஹூம்...? இருபத்தி ரெண்டு!"

"பைத்தியம். இருபத்தி நாலா வாங்கு. அதுதான் சரியான கணக்கு!"

அன்று மாலே நம்பியும், உஷாவும் மெரீனு கடற்கரையில், 'நீண்ட நேரம் கைகளேக் கோத்துக் கொண்டு இருந்ததற்காக கின்னஸ் புத்தகத்தில் பெயர் வர முயற்சி செய்து கொண்டு இருந்த போது, திடீரென்று நம்பி கேட்டான்.

"என்ன உஷா யோசனே?"

"இந்த ஓடியினுலேதான்."

"புரியலேயே. நீ நன்னு ஓடி வரேன்னு தானே ஸ்போர்ட்ஸ்மென் கோட்டாவிலே உனக்கு வேலே கிடைச்சிருக்கு."

"ஓ. நோ. எங்கப்பாவைச் சொன்னேன்."

"என்ன? அவுரும் ஓடப் போருரா? இன்கிரெடிடபிள்!"

"நம்பி, ஸ்டாப் இட். நீங்க ஷைனி ஆப்ரகாம் மாதிரி டிராக் மாறி வர்றீங்க. 'ஓடி'ன்னு ஓவர் டிராப்ட். பாங்க் மானேஜர் அவர் மென்னியைப் பிடிக்கிருர். என் கல்யாணம் வேறே ஆகணும். என்கிட்டே இருக்கிற ஒரே நகை புன்னகைதான்."

"கவலேப்படாதே, உஷா. அதை நான் கவனிச்சுக்கறேன். ஆமா உன்னேட அப்பா பார்ட் டைம் இன்ஷூரன்ஸ் ஏஜெண்ட் இல்லே."

"ஆமாமா.. அதைத் தெரிஞ்சிண்டுதான் பாதிப் பேர் அவரைப் பார்த்தாலே வலசம்மா மாதிரி ஓடறுங்க...?"

"அவரை எங்கப்பாவை வந்து பார்க்கச் சொல்லு!"

"நம்ப கல்யாண விஷயமாகவா? அப்போ அவரை செமத்தியா இன்ஷூர் பண்ணிண்டுதான் போகச் சொல்லணும். உங்கப்பா கையிலே இருக்கிற தங்கத் துப்பாக்கியாலேயோ இல்லாட்டா தங்கவாளாலேயோ எங்கப்பாவை ஒரு வழியா தீர்த்துடுவார்."

"டோன்ட் பி சில்லி! சுண்டல் தின்னுண்டே என் திட்டத்தைச் சொல்றேன்... அடடா! சுண்டல் பையன் அவ்வளவு தூரம் போயிட்டானே."

"இதுவா ப்ராப்ளம். இதோ பாருங்க, உஷாவின் ஓட்டத்தை... ரெடி, ஸ்டெடி... கோ!"

பேய், பிசாசு, சிங்கம், புலி, அடங்கிய அதிரடிக் குழு ஒன்றிடமிருந்து மாறி மாறி அறை வாங்கியதைப் போன்று கோலார் கோபாலசாமி வீட்டில் இடிந்து போய் இருக்கிருர். விசிலடித்துக் கொண்டு நம்பி வருகிருன்.

"ஐயோ, நம்பி மோசம் போயிட்டேண்டா!"

"என்னப்பா ஆச்சு. ஏன் இப்படி இருக்கீங்க? உலக மார்க்கெட்டிலே தங்கம் விலே சரிஞ்சு போச்சா?"

"ஐயோ! நீ இன்ஷூரன்ஸ் கம்பெனியிலேந்து அனுப்பின அந்த லேடி ஆபீசர் நகைகளேச் செக் பண்ணிப் பார்க்கும் போது, திடீர்னு தாகமா இருக்குன்னு. தண்ணி கொண்டு வந்து பார்த்தா. அவளேயும் காணும், நகைகளேயும் காணும்."

"என்னப்பா சொல்றீங்க. லேடி ஆபீசரா நான் யாரையும் அனுப்பலியே."

"என்ன? நீ அனுப்பலேயா... ஐயோ என் தங்கம் போச்சே... ஐயோ..." கோலார் கோபாலசாமி 'கிர்' அடித்துக்

"தாம் சரித்திரத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ளவில்லை என்ற பாடத்தைத்தான் சரித்திரத்திலிருந்து கற்றுக் கொள்கிறோம்."

— ஹெகெல்

கீழே விழுகிறார்.

மறுநாள் காலை, கோலார் கோபாலசாமியின் வீட்டில் போலீஸ் கமிஷனர் திருவாசகம், கம்பீரமாக உட்கார்ந்து கொண்டு ஒரு சிறிய சொற்பொழிவு ஆற்றுகிறார்.

''மிஸ்டர் கோபாலசாமி! நீங்க பேப்பர்லே பொன், வெள்ளி விலையைத் தவிர வேறு எதையும் பார்க்கிறதில்லையா? ஒரு பெண் வீட்டுக்குள் நுழைந்து, ஏமாற்றி, நகைகளைக் கொள்ளை அடிக்கிற விஷயம் இந்த சிடி பூரா தெரியுமே!

''நகைகளை இன்ஷூர் பண்றதைப் பத்தி நீங்க நம்பியோட பேசியதை ஒட்டுக் கேட்ட அந்த லேடி நாகலட்சுமி, உங்க கிட்டே இன்ஷூரன்ஸ் கம்பெனி ஆபீசரா நடிச்சு, அபேஸ் பண்ணி வெளியே ஓடின போது, உஷாவும் அவங்கப்பாவும் உங்க வீட்டுக்கு வந்திருக்காங்க.

''நாகலட்சுமி திடீர்னு ஓட ஆரம்பிக்க, சந்தேகப்பட்ட உஷாவின் அப்பா அவளைப் ''பிடி, உஷா''ன்னு கோஷம் போட்டிருக்கிறார். அவ்வளவுதான், சும்மா சியோல் ஸ்பீட்லே ஓடி, திருடியைப் பிடிச்சுட்டாங்க. உங்க நகையும் கிடைச்சுது. நாங்க தேடின ஆளும் கிடைச்சாச்சு. டிபார்ட்மெண்ட்லே உஷாவுக்கு மெடல் குடுக்கப் போறோம்!''

கோலார் பேந்தப் பேந்த விழிக்க, தங்கம் கேட்கிறாள்: ''கேட்டீங்களா. இவ்வளவு செஞ்ச உஷாவுக்கு நீங்க என்ன செய்யப் போறீங்க?''

''நான்... நான்... இந்தப் பொண்ணு கிட்டேதான் நெறைய மெடல் இருக்கே. நாம வேற எதுக்கு? அதனாலே நம்ப நம்பியை விட்டு சிம்பிளா அவ கழுத்திலே ஒரு மஞ்சக் கயிறு கட்டச் சொல்லப் போறேன்.''


வீராங்கனை உஷாவின் முகம் குங்குமம் போல் சிவக்க, நம்பி அவள் காதில் கிசுகிசுக்கிறான். ''இனிமேல் நம்பி யார் உனக்கு?''

''நம்பி யாரா சொல்லட்டுமா? கோச்சும் இல்லே. வில்லனும் இல்லே. என்னோட கோல்ட் மெடல்!''

எம். எல். ஏ.: ''சார்! நீங்க மனசு வச்சு ஏதாவது செய்தாத்தான் அடுத்த தேர்தலில் நான் ஜெயிக்க முடியும்! என்னோட தொகுதியில் பஞ்சம், பட்டினி, சாவு, நோய், சுகாதாரக் கேடு, வறட்சி, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் இதெல்லாம் கொடி கட்டிப் பறக்குது!''

அமைச்சர்: ''அப்படியா! பலே, பலே! பாமர மக்களிடம் இதையே ஒரு சாதனையா போஸ்டர் அடிச்சு பிரசாரம் பண்ணி ஜெயிச்சுடலாம்! கவலைப் படாதே!''

— மணியன் தர்மலிங்கம்






'தினமும் ஒரே விதமான அயிட்டங்களைச் சாப்பிட்டுச் சாப்பிட்டுப் போர் அடிக்குது, தாயே...! இந்தப் புஸ்தகத்தில் இருக்கிற விதவிதமான சமையல் வகைகளைப் படிச்சுப் பார்த்து நாளுக்கொரு புது ரக சமையல் செய்தாயே!'

''சென்ற வாரம் கராத்தே பாடத்தில் செங்கல்லை ஒரே அடியில் உடைக்கும் வழியைக் கற்றுக் கொண்டீர்கள்....''

— பி.எஸ். ஆர்.



நண்பன் — உங்களைப் பத்தி எல்லாம் தெரிந்தும் உங்களை விரும்புபவன்.

— எல்பெர்ட் ஹப்பர்ட்



அதுவே தேவலாம்!

உத்தமசோழன்

போட்டிக்கதை — 8

'ஆனவது ஆகட்டும்! இதற்கு மேலும் என்னதான் செய்ய முடியும்! காலையிலேருந்து பார்க்காதவனையெல்லாம் பார்த்துக் கேட்காதவனையெல்லாம் கேட்டுப் பார்த்தாச்சு. பலன்தான் பூஜ்யம்.' ஏமாற்றத்தின் விளிம்பில் மனசும் உடம்பும் ஒரேயடியாகச் சோர்ந்து போய் வீடு திரும்பிக் கொண்டிருந்தேன்.

அப்போதே அம்மாவும், அப்பாவும் தலைதலையாய் அடிச்சிக்கிட்டாங்க. 'படிப்பு முடிஞ்சு போச்சு. இனிமேல் விவசாயமே லாயக்கில்லே. இருக்கிறதை வித்துட்டு, முடிஞ்சா உத்தியோகம் தேடிக்க, இல்லேன்னு இருக்கிற பணத்தை வட்டிக்குக் கொடுத்து வாங்கிக்கிட்டு ராஜாவாட்டம் இருடான்னுங்க.' கேட்டாத்தானே, நம்ப தலை எழுத்து இப்படி இருக்கே சாமி. அதை மாத்த முடியுமா?.

மே பிறந்துடிச்சின்னு மேட்டுரு, மேட்டுருன்னு புலம்ப வேண்டியது. ஜூலை மாத வாக்கில் சின்னப் பிள்ளைங்க ஒண்ணுக்குப் பேய்ஞ்ச மாதிரி காவிரி மடியில் தண்ணி வரும். அவனவனும் வாய்க்கால் மடையிலேயே மண்டையை உடைச்சிக்கிட்டு, விதை விடுவான். வளர்றதுக்குத் தண்ணி இல்லாம அது கருகிப் போகும். பிறகு எங்காவது ஒன்றுக்கு இரண்டா விலை கொடுத்து, நாத்து வாங்கி வந்து நட்டா பயிருலே பச்சை கெரன்னுமுந்தி, வருண பகவானுக்குக் கருணை பொங்கி வரப்பெல்லாம் முழுகிப் போகும்!

கலி முத்திப் போச்சு; காலங் கெட்டுப் போச்சு'ன்னு கிழங்கட்டையெல்லாம் புலம்பித் தீர்க்கும். எதனாலே எது கெட்டுச்சோ, நாங்க கெட்டுப் போனது மட்டும் நிச்சயம்.

பத்திரிகைகளிலே மாறி மாறி அறிக்கை வரும். வரிவஜா, கூட்டுறவுக் கடன் ஒத்தி வைப்பு, அது தள்ளுபடி, இது தள்ளுபடி, வறட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம் இன்னும் என்னென்னவோ. ஆனா இதப் பத்தியெல்லாம் பேப்பர்லே படிக்கிறதோட சரிதான்.

எல்லாம் முடிஞ்சு, கையிலே மடியிலே ஒண்ணுமில்லேங்கிற உச்ச கட்டம் வரும். கூட்டுறவு சங்கத்துக் காரங்களுக்கு முழிப்பு



சில சமயம் கடவுள் அற்புதங்கள் நிகழ்த்துகிறார்; ஆனால் இதோ ஒரு பெரும் பேசாத வகையில் இருக்கிறார்!

— பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்



வந்துடும்.

'என்னடா தொண தொணன்னு புலம்பிக்கிட்டே இருக்கிறனே, விஷயத்துக்கே வரமாட்டேங்குறனேன்னு பாக்குறீங்களா. இதோ சொல்லிடறேன்:

நேத்தே சொஸைட்டி செக்ரட்டரி தனியா என்னைக் கூப்பிட்டுச் சொல்லிட்டாரு. 'அண்ணே! உங்களுக்காக இதுக்கு மேலே என்னால் அணை போட முடியாது! நாளைக்குக் காலையிலே பதினொரு மணிக்குள்ளே பணத்தைக் கட்ற வழியைப் பாருங்க! இல்லேன்னு ஜப்தின்னு சேல் ஆபீஸர் கண்டிச்சுச் சொல்லிட்டாரு. அதனாலேதான் இன்றைக்குக்காலையிலேயே சொல்றேன்.'

ஆச்சு. இப்பவே ராத்திரி ஒம்பது மணி இருக்கும். காலையிலேயிருந்து நாயா சுத்தினதுதான் மிச்சம். பைசா பேரலை. இதுக்கு மேலே என்னதாங்க பண்றது? நடக்கிறது நடந்துட்டுப் போகட்டும்.

வீடு வந்துடுச்சி. முன் வராந்தாவிலேயே சரிந்து படுத்துவிட்டேன். கண்கள் தானாகவே சொருகிக் கொண்டன.

'என் வீட்டு முன்னாடி ரத, கஜ, துரக, பதாதிகள் சகிதம் சொஸைட்டிக்காரங்க. ஜப்தி. தெருவே கூடி வேடிக்கை பாக்குது. வாங்கின கடனை ஒழுங்கா கட்டினாத்தானேன்னு விதம் விதமா விமர்சனம் செய்யுது. எங்க வீட்டுக்காரி அழுது புலம்பறா. அம்மா மயக்கம் போட்டு விழுந்து கிடக்கிறாங்க. அப்பாவுக்குக் கைகால் பதறுது. கண்ணுலே தண்ணி கொட்டுது. புள்ளைங்க இரண்டும் பயந்து போய்க் கத்துதுங்க. எதுவுமே செய்யத் தோணாம வெட்டுப்பட்ட மாதிரி எந்தலை தொங்கிப் போயிருக்குது. என் குடும்பத்தோட மானம், மரியாதையெல்லாம், ஜாம் ஜாம்ன்னு ஜீப்லேயும் -கார்லேயும் ஏறிக்கிட்டுத் தெருவோட போகுது.'

'என்னங்க... என்னங்க... ஏங்க இப்படி இங்கேயே படுத்துட்டீங்க. எழுந்திரிச்சு உள்ளே வாங்க' என்ற என் மனைவி சிவகாமியின் பதறலில் எனக்கு விழிப்பு வந்து. 'ஓகோ, எல்லாம் மனசோட நினைப்புத் தானா'ன்னு கொஞ்சம் நிம்மதியும் பிறந்தது.

'நினைப்பு என்ன. இது நிஜமா நடக்க இன்னும் எவ்வளவு நாழி இருக்கு?' உள் மனசு கிண்டல் செய்ய, உடல் மீண்டும் துவண்டு சரிய, தவித்துப் போன சிவகாமி என்னைச் சேர்த்து அணைத்துப் படுக்கையில் சேர்த்தாள்.

''இதோ, சித்த நாழியிலே கொஞ்சம் பாலைக் காய்ச்சிக் கொண்டாறேன்'' உள்ளே சென்ற சிவகாமி நிமிஷத்தில் திரும்பினாள்.

எனக்கு எல்லாமே கசந்தது. மறுத்து விட்டேன்.

'ரொம்பக் களைச்சுப் போயிருக்கீங்க... கொஞ்சமா பாலைக் குடியுங்க.. அப்பத்தான் கொஞ்சம் தெம்பு வரும்' என் தலையை மெதுவாக அவள் மார்பில் சாய்த்து, தன் முந்தானையால் என் முகத்தை இதமாகத் துடைத்து விட்டாள்.

''நாளைக் காலையிலே நம்ப வீட்லே ஜப்தி நடக்கிறதைத் தவிர வேறு வழியில்லே சிவகாமி!''

''ஜப்தியா? நிச்சயம் நடக்காது'' — சிவகாமி பூடகமாய்ப் புன்னகை புரிந்தாள்.

நிமிஷத்தில் என் மனம் முழுதும் ஜில்லென்று சுகமாய் ஏதோ பரவியது. ஆர்வத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் ''அதெப்படி? கையிலே பைசா கூட இல்லியே?'' ஆச்சரியத்தில் சந்தேகமாய்க் கேட்டேன்.

''முதலில் பாலைக் குடியுங்க. பிறகு சொல்றேன்'' சிவகாமி பிடிவாதம் பிடிக்க, மளமளவென்று நான் பாலைக் குடித்து முடிக்கவும், என் கையில் ஒரு காகிதத்தை அவள் சொருகி விடவும், பரபரப்பாய்ப் பிரித்துப் பார்த்தேன்.

பார்த்தால் அது ஒரு செக். தொகை பன்னிரண்டாயிரத்திற்கு!

கண்கள் ஆச்சரியத்தைத் தாங்க முடியாமல் தெறித்து விடும் போலாகி விட்டது. குருகுருவென்று பரவிய சந்தோஷம் உடலெங்கும் சடுகுடு விளையாடியது. 'என் மானம் பிழைத்தது; மரியாதை பிழைத்தது' மனம் துள்ளிக் குதித்தது.

மகிழ்ச்சியால் பேசவே முடியவில்லை. அருகில் நின்ற சிவகாமியை இழுத்து அணைத்து, முகம், உடல் வேறுபாடின்றி முத்தமழை பொழிந்தேன்.

''சீச்சீ... விடுங்க... மாமா வர்றாங்க'' என்று விலகிக் கொண்ட அவள், ''இந்தச் செக்கை யாரு கொடுத்தான்னு கேக்கலியே? காலையிலே மாதவந்தம்பி சைக்கிள்லே போச்சு. அதுக்கிட்டதான் எப்பவும் பணப்புழக்கம் ஜாஸ்தியா இருக்குமே... தம்பீன்னு கூப்பிட்டதும், என்ன அண்ணீன்னு வந்துச்சு... விஷயத்தைச் சொன்னதுதான் தாமசம். ''இது தானே விஷயம். கவலையை விடுங்க.. இந்தாங்க செக்... பன்னிரண்டாயிரத்துக்கும் எழுதியிருக்கேன்... அண்ணனுக்கு ஒண்ணுன்னா அது எனக்கில்லையா...? நான் வரட்டுமா?'' ன்னுட்டுப் போயிடுச்சு. அப்ப

மற்றவர்: ''என் பையன் வளரவேயில்லே, இப்போ நிகர்னு வழக்கத்துக்கு அதிகமா 25 பாயிண்ட் துணி கேட்கிறீங்களே?''

டைலர்: ''என் பையன் வளர்ந்துட்டானே சார்.''

— இளை அ. கதிர்வேல்

லேயிருந்து உங்களைக் காணுமே காணுமேன்னு தவிச்சுக்கிட்டிருந்தா. நீங்க வராந்தாவிலே விழுந்து கிடக்கறீங்க''ன்னு சொல்லி முடித்தாள்.

சட்டென்று என்னுள் ஒரு பொறி தட்டிற்று. என்னுள் பொங்கிப் பூரித்த சந்தோஷமெல்லாம் தண்ணீர் பட்டது போல் புஸ் புஸ்வென அடங்க ஆரம்பித்தது.

''கொஞ்ச நேரம் படுத்துக்குங்க. தேங்காய் சட்னி அரைச்சுச் சூடாய் ரெண்டு தோசை ஊத்திக் கொண்டாறேன்!'' —சிவகாமி உள்ளே சென்று விட்டாள்.

மூடியிருந்த கண்களுக்குள் என் தங்கை கல்பனா வந்து நின்றாள்.

போன வருஷம் பேறு காலத்திற்கு என் வீட்டிற்கு வந்திருந்தாள். ஊருக்குப் போவதற்கு முதல் நாள் இரவு என்னைத் தனியாக மாடிக்கு அழைத்துச் சென்றாள்.

''நான் சொல்றதைத் தப்பாப் புரிஞ்சுக்காதே. நான் ஏதாவது சொன்னா அது உன்னோட நல்லதுக்காகத்தான் இருக்கும்னு உனக்கே தெரியும். உனக்கு நல்லதுன்னா அண்ணிக்கும் அப்படித்தான் இருக்கும். விஷயம் வேறே ஒண்ணுமில்லே. நம்ப வீட்டுக்கு வருது பாரு மாதவன் அண்ணே. அதுவும் ரொம்ப நல்ல மாதிரிதான். நம்ப அண்ணியும் ரொம்பவும் நல்லவங்கதான். நமக்குத் தெரியுது இவுங்க பேர்ல தப்பு சொல்ல எதுவுமில்லேன்னு. ஆனா ஊரு ஜனங்களுக்குத் தெரியுமா? மாதவண்ணே அடிக்கடி சாதாரணமா இங்கே வந்துட்டுப் போறது ஊராருக்கு அல்வா சாப்பிடுகிற மாதிரி இருக்கு... ஏன் முகம் ஒரு மாதிரி போவுது...? நீ ஏதாவது நினைச்சுக் குழப்பிக்காதே...! ஒண்ணும் ஆயிடலே... நாம எதுக்கு ஊர் வாய்க்கு இடம் கொடுக்கணும்...? அதனால இனிமேல் அந்த அண்ணன் வர்றப்போ தனியா கூட்டிக்கிட்டுப் போயி, 'தம்பி, உனக்கு ஏதாவது வேலை இருந்தா சொல்லி அனுப்பறேன். அப்போ மட்டும் வந்தாப் போதும்'னு நாசூக்காச் சொல்லி அனுப்பிடு... சரி... கீழே போவோமா..?''

மறுநாள் காலையில் தங்கை ஊருக்குப் போய் விட்டாள் குழந்தையுடன். அம்மாவும் துணை போயாகி விட்டது.

அன்று மாலையில் மாதவன் வந்திருந்தான். சிவகாமி கொடுத்த காப்பியைக் குடித்துக் கொண்டிருந்தான். அவள் எதிரே நின்று ஏதோ சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

தங்கை கல்பனா சொன்ன பிறகு மாதவனின் முன் நிற்கும் சிவகாமியை முதன் முதலாகப் பார்த்தேன். அவளின் கண்களுக்குள் ஏதோ ஓர் ஆர்வ மின்னல் பதுங்கி இருப்பது தெரிந்தது. முகம் எங்கும் ஒரு சந்தோஷம் புதிதாய்ப் படர்ந்திருப்பதாய்த் தோன்றியது. என் மனத்தில் தோன்றிய ஆச்சரியங்களைப் பற்றி மேலும் ஆராய்ச்சி செய்யத் தோன்றவில்லை.

கல்பனா சொல்லித் தந்த பாங்கில் மாதவனிடம் தனியாகச் சொல்லி முடித்தேன். வருஷம் ஒன்றாகி விட்டது. நான் சொன்னபடி அவன் வரவேயில்லை.

இந்த ஒரு வருஷத்திலும் முன் போல் சிவகாமியிடம் மனத்தால் என்னால் ஒட்டிக் கொள்ள முடியவில்லை. வசந்த காலத்தின் முன் நிலவுக் காலங்களில் ஜன்னல் வழியாக விழும் நிலவொளியில், வாஞ்சையுடன் என் முகத்தை அவள் மார்பில் சேர்த்து, முடியை இதமாய்க் கோதி விடும்போது, நான் உருகிப் போவதற்குப் பதில் ஜடமாகவே இருந்திருக்கிறேன். கிருத்திகைகளில் விடிகாலையில் எட்டுக்குடிக்குப் போகும் போதும் சிந்து பைரவியையும், முதல் மரியாதையையும் பார்க்கும் போதும் என்னருகில் சிவகாமி இல்லை.

இன்று அவன் வந்திருக்கிறான். என் மானம் காக்க அவன் கொடுத்த செக்கையில்...

ச்சே.. நான் ஏன் குழம்பிக் கொள்கிறேன்? நாயாய் அலைந்தோமே? ஒரு ரூபாய் கிடைத்ததா? எதற்காக இவ்வளவு தொகை அவன் கொடுக்க வேண்டும். நம்ம புத்தி எப்பவுமே தப்பாத்தானே போகும்?'

மனம் அலை பாய்ந்தது.

'இந்த செக்கை அவன் உனக்காகத்தான் கொடுத்தானா!' — மனத்தில் எழுந்த கேள்விக்கு, தயக்கமாய் மனசே இடமும் வலமுமாய்த் தலையாட்டியது.

கல்பனாவின் முகம் அடி மனத்துக்குள் எட்டிப் பார்த்தது. 'ஜப்தி உன் வீட்டில் மட்டுமல்ல, அதை எல்லாரும் புரிந்து கொள்வார்கள், தவறு உன் மீது இல்லேன்னு... ஆனால்... ஆனால்...'

கையிலிருந்த செக் படாரென்று சுக்கு நூறாகியது.

முகத்தை அழுந்தத் தேய்த்துக் கொண்டு வெளியில் வந்து பார்த்தேன். எங்கும் பால் வெணுப்பாய் நிலவு — என் மனத்திலும் தான்.



புத்தகங்களை இரவல் கொடுக்காதீர்கள். அவற்றை யாரும் திருப்பித் தருவதில்லை. என்னிடம் இருக்கும் புத்தகங்கள் எல்லாம் மற்றவர்கள் இரவல் கொடுத்தவைதான்.

— அனடோல் ஃப்ரான்ஸ்



தலைதீபாவளிக்கு வந்துள்ள மாப்பிள்ளை: ''ஏன் மாமா இப்படி உம்முன்னு இருக்கீங்க. நாலு வார்த்தை பேசுங்களேன்!''

மாமனார்: ''எப்போ ஊருக்குப் போறதா உத்தேசம்!''

— கீழை அ. கதிர்வேல்

சிங்காரத்துக்குச் சிலை

சாவி

"அண்ணே.... அதெப்படிங்க நீங்க சொன்னு ஒத்துக்கிட முடியும். உங்களாலே எங்க கிராமத்துக்கே பெருமை. இன்னிக்கு நீங்க பிரபலமாயிட்டதை நாங்க கொண்டாடணும்...."

"அட வுடுங்கய்யா..... சும்மா தொண தொணன்னு, ஏம்பா, நடராசு.... இதெல்லாம் நீ பண்ற வேலைதானே? எனக்கு எதுக்கப்பா இந்த மாதிரி விழா, மாலை மரியாதி எல்லாம்...."

"இல்லே..... சிங்காரண்ணே.... உங்க கலைத் திறமைக்கும், இன்னி தேதிக்கு உங்களை காமெடி வேஷத்திலே பீட் அடிக்க முடியாத அளவு ஸ்ட்ராம்மா ஓஹோன்னு இருக்கிறதுக்கும் (பின்னணி சௌண்ட் எஃபக்ட் ஜிங் சிக்) இதையெல்லாம்விட பெரிய விழா நடத்தணும். நம்ப எம்.எல்.ஏ. கூடச் 'செய்ய வேண்டியதுதாம்பா'ன்னு சொன்னாரு....."

"ஆமாங்க..... ஆமாங்க....." என்று சில குரல்கள் ஒருமுகமாகக் கூறின.

"இப்படி எல்லாம் செஞ்சா கண்ணுதான் படும். ஏதோ கூத்து, கீத்துன்னு இருந்தவனுக்கு இப்போ யோகம் அடிச்சிருக்கு. இது எத்தினி நாளு நெலைச்சிருக்கும்னு தெரியாது....."

"அந்தத் தத்துவங்கள்ளாம் எங்களுக்குத் தெரியாதா?"

"அதானே.... நம்ப மச்சரய்யா சரீட்டா கேட்டாரு...."

"இல்லே, நீங்க என்ன செய்யணும்னு சொல்றீங்க?"

"அப்படிக் கேளுங்க. நம்ப திருநகரியிலே சந்தைத் திடல்லே, உங்க சிலையை வெக்கணும்.

"என்னது சிலையா? நமக்கு நாமே சிலை வெச்சுக்கறதா? நான் இன்னப்பா மகாத்மா காந்தியா, நேருவா....."

"அடேடே, நம்ம ஊருக்கு நீங்கதான் காந்தி நேரு எல்லாம்...."

அடுத்த அரை மணி நடந்த விவாதத்திற்குப் பிறகு, தமிழ்த் திரை உலகில் திடீர் காமெடியனுகிப் புகழில் இருக்கும் திருநகரி சிங்காரம், தன் பிறந்த நாளை ஒட்டி, திருநகரியில் தன் சிலை எம்.எல்.ஏ. மூலம் திறக்கச் செய்வதற்குச் சம்மதம் தெரிவித்தார். கிராமத்திலிருந்து வந்திருந்தவர்களுக்கு சாப்பாடு போட்டு, வேஷ்டி சட்டை கொடுத்து ஒரு ஷூட்டிங்கையும் காட்டி ஊருக்கு அனுப்பி வைத்தார்.



கிராமத்தில் எண்ணெய் செக்கு ஓட்டிக் கொண்டிருந்ததுடன் இரவு நேரங்களில் தெருக்கூத்துகளிலும் பங்கெடுத்துக் கொண்டிருந்த சிங்காரத்திற்கு ஒரு மத்திய அமைச்சர் உருவில் அதிர்ஷ்டம் வந்தது.

குடியரசு தின விழாவில் நாட்டுப்புறக் கலைஞர்கள் கலைநிகழ்ச்சி ஒன்று நடந்தது. அதில் பங்கு கொள்ள சிங்காரம் சென்றிருந்தார். நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த அமைச்சர், சிங்காரத்தைப் பாராட்ட, அமைச்சரிடம் காரியம் ஆக வேண்டிய ஒருவர், தான் சிங்காரத்தை வைத்துப் படம் எடுப்பதாகச் சொன்னதுடன் அதன் படியே எடுக்க, படம் எக்கச்சக்கமாக ஓடி ஒரே தினத்தில் சிரிப்புக் கலைஞர் சிங்காரம் உருவாகிவிட்டார். அதன்பிறகு தொடர்ந்து பல படங்கள் கார், பங்களா, ரசிகர் மன்றம் என்று ஏதேதோ அவரையறியாமலேயே வந்துவிட்டன. இப்போது சிலை வைக்கற அளவுக்கு உயர்ந்துவிட்டார்!

ஏதோ ஒரு வாரியத்தின் தலைமைப் பதவிக்காக 'வேலை' செய்து கொண்டிருந்த ஒரு எம்.எல்.ஏ. முக்கிய மந்திரிக்கு சோப்பு போட சிங்காரம் சிலைத் திறப்பு விழாவிற்கு தலைமை வகிக்க ஏற்பாடு செய்தார்.

விழாவிற்கு ஒரு வாரத்திற்கு முன்பு மாண்புமிகு அமைச்சர், தம் தொகுதியில் உள்ள ஒரு பிரமுகரின் பேரனின் காதணி விழாவிற்குச் சென்று, எதிர்க் கட்சிகளையும் ஜெயவர்த்தனாவையும் சாடிவிட்டு, குழந்தையை வாழ்த்த வேண்டியிருந்ததால், விழாவிற்கு வர இயலாது என்று தெரிவித்தார்.

விடுவாரா எம்.எல்.ஏ? வாரியப் பதவி என்றால் மெய்வருத்தம் பார்க்கலாமா? கண் துஞ்சலாமா? ஆகவே விடிகாலை ஐந்து மணிக்குச் சிலையைத் திறந்துவிட்டு,காதணி விழாவிற்குச் செல்லும்படி மந்திரியை மசிய வைத்துவிட்டார்!

திருநகர் கிராமமே திருவிழாக் கோலம் பூண்டது. ஊரெல்லாம் செம்மண் போட்டு ரோடு என்ஜின் ஓட்டியது, பொதுப் பணித் துறை அமைச்சர் என்பதால்! டூரிங் டாக்கிசில் 'டெய்லிசேன்ஜ்' என்று போட்டு தினமும் சிங்காரம் படம் ஒன்றைப் போட்டார்கள். போதாதற்கு கு.க துறையினர் பந்தல் போட்டு இலவச படக் காட்சிகளையும் பிரசுரங்களையும் தந்தார்கள். இரட்டை அர்த்த வசனங்களால் பிரபலமாகியிருக்கும் பொள்ளாச்சி பரிமளா வருவதாகவேறு போஸ்டரில் போட்டு இருந்தார்கள்.

ஊர் மைதானத்தின் நடுவே மேடை போட்டு இரண்டு தினங்களுக்கு முன்பே 'ரிகார்டு' போட ஆரம்பித்துவிட்டார்கள்.

சிலைக்காக மேடை தயாரிக்கப்பட்டு சிலைக்குத் திருஷ்டி விழாமல் இருக்க சுற்றி தார்ப்பாய்களால் திரை போட்டிருந்தார்கள்.

சிலை இன்னும் முடிந்தபாடில்லை. சிலை செய்யும் சிற்பி அவ்வப்போது காணமல் போய் விடுவார். அவர் என்ன செய்வார்? அவருடைய சின்ன வீடு ஆந்திராவில் ஒரு கிராமத்தில் இருந்தது.

சிங்காரம்தினமும்போய்,துரிதப்படுத்தினார்.

''கவலையை வுடு சார். சிலை கரீக்டா ரெடியாயிடும். லாரி ஏற்பாடு பண்ணி

நீங்கள் சொல்வதற்கெல்லாம் அவன் சிரிப்பான். ஏன்? அவன் பல் வரிசை அழகாய் இருப்பதால்.

— பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்



அனுப்பு. ஏத்தி அனுப்பிடறேன். வெசாழக்கிழமை பூஜை பண்ணிட்டு கண்ணு தொறந்துட்டா.... ரெடி'' என்ருர். சிலே திருப்திகரமாகத்தான் உருவாகியிருந்தது. பூஜைக்கு என்று சில்லறை கேட்டார் சிற்பி.

சிலே திறப்பு விழாவிற்கு முன்தினம் லாரியில் சிலேயை ஏற்றிவிட்டு சிங்காரம் தன் கிராமத்திற்குச் சென்ருர்.

தாரை, தப்பட்டை, மேள, தாளம் வாண வேடிக்கையுடன் வரவேற்பு அளித்தார்கள்!

தன் பழைய கிராம வீட்டில் தங்கினர்.

இரவெல்லாம் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

இரவு இரண்டு மணியாகியும் சிலே வந்து சேரவில்லே.

''அண்ணே.... கருக்கல்லே மந்திரி வந்துடுவாரு. சிலே வந்து தூக்கி நிறுத்தி வைக்கணும். ஏன் லாரி இன்னும் வந்து சேரலே?'' என்று சிலேக் குழு தலேவர் சின்னசாமி கேட்டார்.

சிங்காரத்திற்கு லேசாக கவலே ஏற்பட ஆரம்பித்தது.

''யாருப்பா.... மைனர் சபாபதியை மோட்டார் பைக்கோட வரச் சொல்லு.''

யாரோ ஓடி சபாபதியை அழைத்து வந்தார்கள். சபாபதி வீட்டில்தான் பொன்னாச்சி பரிமளா தங்குகிருள். ஆகவே சபாபதி இரவு, பகலாக சிலேத் திறப்பு விழாவிற்கு தன் மோட்டார் பைக்கில் ஓடியாடி வேலே செய்து வருகிருன்.

''அப்பா.... சபாபதி.... நேரே டிரங்க் ரோடுலே ஒரு பத்து இருபது மைல் போய்ப் பாரு. சிலே லாரி வருதான்னு'' என்று சிங்காரம் சொன்னதும் வேஷ்டியை மடித்துக் கொண்டு வண்டியை ஓர் உதை உதைத்து, படக் படக்கென்று பறந்தான்!

அந்தக் கூட்டத்தில் யாரும் பேசவில்லே. எல்லாரும் சிங்காரம் என்ன சொல்லப் போகிருர் என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''எல்லாரும் இடி வுழுந்தாப்பிலே இருந்தா ஆயிடுச்சா... இப்ப மேல் கொண்டு இன்ன செய்யணும். சிலே வந்தாவனும். மணி மூணவது. மந்திரி வந்துடுவார். இப்ப வந்தாலே மேல ஏத்தி நிக்க வைக்க அரை அவுரு ஆவும்...

''ஏங்க.... லாரி ரிப்பேர் பண்ண முடியாதா? இல்லாட்டி இன்னெரு லாரியாலே கவுறு கட்டி இஸ்தாறது....

''போய்யா.... போய்யா.... ஏதாவது சொல்லப் போறேன். ஆக்சில் ஒடஞ்சு போய் லாரி சாய்ஞ்சு கிடக்கு. இஸ்தாவறதாம், ஒண்ணும்....''

அப்போது சபாபதி, 'அண்ணே.... எனக்கு ஒரு யோசனே.... வண்டியிலே குந்துங்க. ரோடுலே போய் ஏதாவது லாரியை நிறுத்தி தூக்கி வெச்சுக்கிட்டு வரலாம். லாரியிலே ஆளுங்க இருக்காங்க. யோசிக்காதீங்க. நீங்க கையை காட்டினு லாரிக்காரங்க நிறுத்துவாங்க....'' என்ருன் சபாபதி. அத்துடன் சிங்காரத்தைப் பார்த்து கண்ணுல் சமிக்ஞை செய்தான். சிங்காரம் அவனுடன் கிளம்பினர்.

''அல்லாரும் மைதானத்திற்குப் போங்க. நாங்க பாத்துக்கிறேம், எல்லா வேலேயும்....'' என்று சொல்லி, சப்பாதி தன் மோட்டார் சைக்கிளில் சிங்காரத்தை ஏற்றிக் கொண்டு பறந்தான்.

பொழுது இன்னும் விடியவில்லே. மாண்புமிகு அமைச்சர், எம்.எல்.ஏ., முதலிய்வர்கள் முன்னிலேயில் சிலே திறப்பு விழா நடந்தது. அலுமினிய பெயின்ட் அடிக்கப்பட்ட தத்ரூபமான சிங்காரத்தின் சிலே நின்று கொண்டிருந்தது.

''ஆமாம் — எங்கேய்யா நடிகர் தீபம் சிங்காரம்....'' என்று அமைச்சர் கேட்டார். (விழாவில் அப்படி ஒரு பட்டத்தை அவர் அளித்துவிட்டிருந்தார்!)

''அண்ணே.... அவருக்கு திடீர்னு மலேரியா காய்ச்சல்.... வூட்லே இருக்காரு. இவ்வளவு பெரிய விழா நமக்கு நடக்குது. நாம பாக்கக் கொடுத்து வைக்கலேயேன்னு வருத்தப்படருர். டாக்டர் பாத்தாரு. ஜுரம் 106 மேலே போய்ட்டுது. யாருப்பா சிலேயைச் சுற்றி திரை போடுங்கப்பா. இன்னும் கொஞ்சம் வேலே இருக்கு..... திருஷ்டி சுத்திப் போட்ட பிறகு காலேலே திறக்கலாம்'' என்ருன் சபாபதி.

சிங்காரம் வராததைப் பற்றி அமைச்சர் கவலேப்படவில்லே. அவருக்கு அடுத்த காதணி விழாவிற்குச் செல்ல வேண்டிய அவசரம். ஆகவே புறப்பட்டுப் போய்விட்டார்.

''சபாபதி நீ பெயின்ட் வியாபாரம் பண்றது பெரிசில்லப்பா.... சடாரென்று ஐடியாத் தோணி விழாவை நடத்தி முடிச்சியே அதுதான் பிரமாதம்....''


''சிங்காரம் அண்ணே, இதென்னங்க பெரிய விஷயம். பாவம் உடம்பு பூரா அலுமினிய பெயின்டை அடிச்சுகிட்டு சும்மா ஆடாமல் அசங்காமல் நின்னீங்களே சிலே மேடையிலே.... அந்த நடிப்புக்குக் கிட்ட யாரும் வர முடியாது....



மூன்று பேரால் ஒரு ரகசியத்தைக் காப்பாற்ற முடியும், அவர்களில் இருவர் இறந்துவிட்டால்....

— பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்





''ஆட்டோ! ஸ்டேஷனுக்கு வரியா?''

''வரேன். மழை பெய்யுது.... மீட்டர் மேலே ஏதாவது போட்டுக் கொடுங்க....''

''அப்படியா?-இந்தா டவல்....! மீட்டர் மேல் போடு!''

கேரளத்தில் 'ஈநாடு' படத்திற்குப் பிறகு கடந்த ஓணத்திற்கு ரிலீஸாகிப் பரபரப்பாய் ஓடிக் கொண்டிருக்கிறது 'ஆவநாழி'. போலீஸ் மற்றும் சமுதாயக் கரண்டல் பேர்வழிகளின் அக்கிரமங்களை வெளிப்படுத்தும் இது சாஜ் மூவிஸ் தயாரிப்பு. அந்தப் படத்திலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

குறிப்பு : இக்கதை யாரையும், எவரையும் குறிப்பது இல்லை. முழுக்க முழுக்க கற்பனையே.

முக்கியமான பாத்திரங்கள்

பலராம்: கதாநாயகன், போலீஸ் இன்ஸ்பெக்டர். நேர்மை, நியாயத்திற்காகப் போராடும் அபூர்வப் பிறவி. யாருக்கும் பயப்படாமல்செயல்படுவான். எதற்கும்தயங்காதமுரட்டன். அதனாலேயே அல்லல்படுபவன்.

சத்யராஜ்: கடத்தல்காரர்களின் ஏஜெண்ட். இண்டர்நேஷனல் க்ரைம் மன்னன்! குற்றங்களுக்கு இவன் மட்டும் காரணமில்லை. இவனுக்குப் பின்னால், திரை மறைவில் பலரும் உண்டு. ஆனால் போலீஸில் அகப்பட்டால் இவன் மட்டும்தான் தண்டனை பெறுவான். திரை மறைவு ஆசாமிகள் பாதுகாப்பாய் மறைவிலேயே இருப்பார்கள்.



என் குறி தப்பாது!

தமிழ் வடிவம்:
என். சி. மோகன்தாஸ்

அவர்கள் எய்பவர்கள்: இவன் அம்பு. பின்வரும் மூவரும் இவனை எய்பவர்கள்.

வின்ஸெண்ட்: பழுத்த பிஸினெஸ்மேன். நியாயம், நீதி இவற்றிற்கு அப்பாற்பட்ட ஐம்பது வயதுப் பெருச்சாளி. கடத்தல், பிளாக் மார்க்கெட் பேர்வழி.

ஜெயன்: வக்கீல், அநீதிக்கும் அக்கிரமத்திற்கும் வாதாடுகிறவன். பணக்காரர்களின் அரிய நண்பன். நாயகன் பலராமின் மாஜி காதலியை மணந்து துன்புறுத்தி வருபவன்.

சந்திரஹாசன்: அரசியல்வாதி — அரசியல் வியாதி என்றும் சொல்லலாம். அரசியல்வாதிகளைக் கைகொடுத்துத் தூக்கி விடுகிற, பொலிட்டிக்கல் கிங். இவனது கையசைவுக்குக் காத்திருக்கும் மந்திரிகள் பலர்.

(சிமெண்ட் கடத்தல் சம்பந்தமாக வின்ஸெண்ட், சந்திரஹாசன், ஜெயன் ஆகிய மூவரிடமும் சாக்கோ என்ற அரசாங்க அதிகாரி தகராறு செய்கிறான். நிறையப் பணம் லஞ்சமாய்க் கேட்கிறான். அதனால் இவர்கள் சத்யராஜை அனுப்பிச் சாக்கோவைக் கொல்கிறார்கள். இது சம்பந்தமாக போலீஸ் ஸ்டேஷனில் ஒரே பரபரப்பு....)

டி.ஐ.ஜி: இது என்ன அநியாயம்? வர வர.... கொலைகள் அதிகமாகிகிட்டேயிருக்கு. நாயைச் சுடற மாதிரிச் சுட்டுட்டுப் போயிருக்கான். அவனைப் பிடிக்க முடியாம நமக் கெதுக்குத் தொப்பி — ஷேம்!

கமிஷனர்: கொலையாளி இம்முறை தப்பிக்க முடியாது சார். இன்ஸ்பெக்டர் பலராம் அவனைத் தேடிப் போயிருக்கான். அதான் பயமாயிருக்கு.

டி.ஐ.ஜி: பலராமா....? அவன் முரடனுச்சே! கொலைகாரனைப் பிடிச்சுக் குடுக்கறதுக்குப் பதில் அவனே தண்டனை குடுத்துடுவானே....!

கமி: ஆமாம் சார். முன்பு பாலக்காட்லே உன்னி'ங்கற ஸ்டுடண்டை அடிச்சே கொன்னவனுச்சே.... (இருவரும் ரகசியப் பார்வைகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள்)

குற்றவாளியை நம்மகிட்டே ஒப்படைக்காம இவனே எப்படி தண்டனை தரலாம். ஒரு முறை சஸ்பெண்ட் ஆனப்புறமும் புத்தி வரலையே இவனுக்கு!

டி.ஐ.ஜி: இப்போ குற்றவாளியைக் கண்டு பிடிக்கிறதைவிட அவனுக்குப் பாதுகாப்பு கொடுக்கறதுதான் முக்கியம். அதுக்கான எல்லா ஏற்பாடுகளும் பண்ணுங்க.

கமி: ஓ.கே. சார்.

*****

(பலராம் சத்யராஜைப் பிடிக்க, ஒரு சக இன்ஸ்பெக்டர் அவனைத் தன் பொறுப்பில் அரெஸ்ட் செய்து கேஸ் பதிவு செய்கிறார். பணம் புகுந்து விளையாடுகிறது. சாட்சிகள் கட்சி மாறுகிறார்கள். கேஸ் தோற்க, சத்யராஜுக்கு விடுதலை என்றாலும் வேறு பல குற்றங்களுக்காக அவனை ரிமாண்டில் வைக்க கோர்ட் உத்தரவிடுகிறது.

கோர்ட்டை விட்டு வெளியே வரும் போது அந்தச் சக இன்ஸ்பெக்டருக்கும் பலராமிற்கும் சச்சரவு வந்து, பலராம் அவரை அறைந்து விடுகிறான். அதைத்



• ''என்ன காரியம் செஞ்சுட்டீங்க பலராம்!''



• "எங்க வீட்டு வசந்தத்தை அழிச்சது போதாதா?"

தொடர்ந்து பலராமை ஸ்டேஷனில் விசாரிக்கிறார் டி.ஐ.ஜி.)

டி.ஐ.ஜி: மிஸ்டர் பலராம். என்ன காரியம் செய்துட்டீங்க. ஒரு சக இன்ஸ்பெக்டரை, கோர்ட் வாசலில் வைச்சு எப்படி நீங்க அறையலாம்? நிருபர்கள் எல்லாம் இருந் தாங்க. பத்திரிகைகள்ல என்ன கிழிகிழிக் கப் போறாங்களோ....

பலராம்: ஒரு குற்றவாளியை அதுவும் இன்டர்நேஷனல் குற்றவாளியைக் கஷ்டப் பட்டுப் பிடிச்சுக் கொடுத்தும், சாட்சிகளைப் பல்மாற விடுறானுங்கன்னா.... இவனுங்கள் லாம் எதுக்கு போலீஸான்னு....

சுமி: உஷ்ஷ்.... சத்யராஜ் நிரபராதின்னு கோர்ட் சொன்னதுக்கப்புறம் அதைப் பத்தி நீங்க பேச வேண்டாம். இன்ஸ்பெக்டரை அறைந்ததுக்குப் பதில் சொல்லுங்க.

பல: நான் அறையலே! என்னை அறைய வைச்சான் அந்த ஆள்....! (கோபத்துடன் வெளியேறுகிறான்.)

சுமி: இவன் இப்படித்தான் சார், திமிராப் பேசுவான். இந்த ஆளால நமக்கு என்னைக் கும் தலைவலிதான். பேசாம இவனை டிரான்ஸ் பர் பண்ணிடுங்க...!

டி.ஐ.ஜி.: உம்.... நீங்க சொல்றதும் நல்ல யோசனைதான்.

*****

(பலராம் புது இடத்தில் வீடு பார்த்துத் தங்குகிறான். பக்கத்து வீட்டிலிருந்து. "ஐயோ, என் மகனைக் கொல்லாதே... கொல்லாதே....." என்ற அலறலைக் கேட்டு ஓடுகிறான். அங்கே.....)

ராதா: ஆ! இன்ஸ்பெக்டர் பலராம்! நீயா....? அன்னைக்கு என் தம்பி உன்னியை அரெஸ்ட் பண்ணிக் கொண்டு போய் கொன்னு போட்டியே! பாவி! உன்னி போனதுக்கப்புறம் அவனை நினைச்சு நினைச்சு எங்க அம்மா பயித்யமாயிட்டா! எங்க வீட்டு வசந்தத்தை அழிச்சது போதாதா.... இப்ப எதுக்குத் திரும்பவும் வந்திருக்கே? யாரைக் கொல்ல வந்திருக்கே?

(ராதாவின் அப்பா வருகிறார்.)

அப்பா: சொல்லுங்க. ஏன் என் மகனைக் கொன்னீங்க. அவனை எங்கே புதைச்சிருக் கீங்க....?

பல: நான் அவனைக் கொல்லலே. சத்யமா எனக்கு எதுவும் தெரியாது.

அப்பா: நீங்க போலீஸ்.... எது வேணும்னா லும் செய்வீங்க. கேட்க நாதி இல்லே. இனி போன உயிர் திரும்பவாப் போகுது. அவனோட சாம்பல் ஒரு பிடி குடுங்க. போதும். பூஜை செய்யறோம். அவன் ஆத்மா சாந்தியடையத் தான் கேட்கிறோம்.

பல: என்னை நம்புங்க. நான் அவனைக் கொல்லலே. அவன் எப்படிச் செத்தான்னு எனக்குத் தெரியாது. எங்கே கொண்டு போனாங்கன்னும் தெரியாது.

ராதா: (ஆவேசத்துடன்) கெட் அவுட்! எங்க கண் முன்னால வராதே. தொலைஞ்சு போ!

(பலராம் வெளியேறுகிறான்.)

*****

(ராதா பலராம் பேரில் கேஸ் போடு கிறாள். எப்படியாவது அவனுக்குத் தண்டனை வாங்கித் தந்துவிட வேண் டும் என்ற துடிப்பில் இருக்கிறாள். அவள் வக்கீல்.... ஜெயன்!)

*****

(வீண் பழி சுமத்தப்பட்ட பலராம் வருத் தத்துடன் உட்கார்ந்து பழைய நினைவு களில் மூழ்குகிறான். அவன் மனத்திரை யில் ஓடும் காட்சி. ஸ்டேஷனில்.....)

டி.ஐ.ஜி: என்ன காரியம் செய்தீங்க பலராம். அடிச்சு அடிச்சே உன்னியைக்

கொன்னுட்டீங்களே.... போலீசுக்கு உங்களால எத்தனை கெட்ட பேர்....!

பல: நான் லேசாதான் சார் அடிச்சேன். சத்யமா என் அடியால் அவன் இறந்திருக்க முடியாது. இதுல ஏதோ மர்மம்....

டி.ஐ.ஜி: ஷட் அப்! கொன்னதும் கொன்னுட்டு மர்மம் அதுஇதுன்னு தப்பிக்கப் பார்க்கறீங்களா.... இவனை இப்போ என்ன செய்யறது....?

பல: பாடியை அவங்க வீட்டிலே சேர்த்துடலாம் சார்.

டி.ஐ.ஜி.: நோ. அது நமக்குக் கெட்ட பேர். பேசாம இவனைக் கட்டிக் கடல்லே போட்டுடுவோம். காணாமல் போன மாதிரி இருக்கட்டும்.

பல: நான் அவனை அரெஸ்ட் பண்ணிக்கிட்டு வந்தது எல்லோருக்கும் தெரியும் சார். இப்போ இவனைக் காணோம்னு என் மேலே தான் சந்தேகப்படுவாங்க.

டி.ஐ.ஜி: அதனால பரவாயில்லே பலராம். நீங்க குற்றத்தை ஒப்புக்குங்க. உங்களை வெளியே கொண்டு வர வேண்டியது என் பொறுப்பு.

(பலராம் மேல் கேஸ் போடுகிறார்கள். அவனுக்குத் தண்டனை கிடைக்கிறது. தண்டனை முடிந்து இரும்பும் அவனை டிரான்ஸ்ஃபர் செய்கிறார்கள். ஆனால் வின்ஸெண்ட் மற்றும் சத்யராஜின் தூண்டுதலால் விஷம் கலந்த சாக்லேட்டை உன்னிக்குக் கொடுத்து அவனைக் கொலை செய்த உண்மைக் குற்றவாளியான எஸ்.பி. பிரமோஷனில் டி.ஐ.ஜி. யாகியிருக்கிறார்! பலராம் கொலையாளி என தீர்ப்பானதால் அவன் காதலி உஷாவை அவள் அப்பா, வக்கீல் ஜெயனுக்குக் கல்யாணம் பண்ணி வைத்து விடுகிறார்.)

*****

(புது ஸ்டேஷனில்)

போலீஸ்காரர்: இன்ஸ்பெக்டர் பலராமை நம்ம ஸ்டேஷனுக்கு மாத்தியிருக்காங்களாமே.... ஆள் எப்படி....?

அடுத்த போலீஸ்: அந்த ஆள் கோபக்காரன். ரொம்ப ஸ்ட்ரிக்ட். யாருக்கும் பயப்படாதவன்.

போலீ: அப்போ இனி நம்ம பர்ஸ் காலின்னு சொல்லு! சம்திங் வாங்கற விஷயத்துல ஆளு எப்படி.....?

அ. போலீ: கவலைப்படாதே.... அந்த ஆள் வாங்க மாட்டான். ஆனால் நாம் வாங்கினால் கண்டுக்கமாட்டான்.

*****

(சிறைச்சாலை. வக்கீல் ஜெயன் லாபிக்கு சத்யராஜை வரவழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறான்.)

சத்யராஜ்: மிஸ்டர் ஜெயன்! என்னை எப்போ வெளியே கொண்டு வரப் போறீங்க?

ஜெயன்: அவசரப்பட்டா எப்படி.... உன் மேலே ஒரு கேஸா.... ரெண்டு கேஸா... இன்டர்நேஷனல் அளவுல பல குற்றங்கள் செஞ்சிருக்கே. நாங்க முயற்சி செய்யாமலா இருக்கோம்?

சத்ய: எத்தனை நாளா முயற்சி செய்வீங்க? உங்களுக்காகத்தானே அந்தச் சாக்கோவைக் கொன்னேன்? நீங்க எப்போ கேஸ் ஜெயிச்சு எப்போ என்னை விடுவிக்கிறது.... ஜெயிக்காட்டியும் பரவாயில்லே, ஜெயில்லேருந்து தப்பிக்க உதவினாப் போதும்.

ஜெயன்: மெதுவாப் பேசு. அதுவும் அவ்ளோ ஈஸியா என்ன.... யோசிச்சுத் தான் செய்யணும். உன்னைத் தப்பிக்க வைக்கறது பெரிசில்லே. வெளியே வந்தின்னா எங்கே தங்குவே? போலீசு கண்ணுல விளக்கெண்ணெய் ஊத்திக்கிட்டு தேடுமே..... யோசிக்கணும்.

• "நீ கேஸை வாபஸ் வாங்க வருவேன்னு தெரியும்..."






ஒருத்தரைப் போல் ஒருத்தர் நிறம் இருத்தல் இல்லை.

பொருத்தமளிக்க உமக்கென்றே 3 வித வண்ணச் சாயல்களில் வருவது லக்மே காலமைன் ஒன்றே.

நேச்சுரல் —மாநிற மேனியருக்கு

லைட் —சிகப்பு மேனியருக்கு

கோல்டு —கருவண்ண மேனியருக்கு



லக்மே காலமைன் ஒன்றுதான்
மூவித வண்ணச் சாயல்களில்
மோகனமாய் வருகுது:
நேச்சுரல், லைட், கோல்டு, இதில்
உமக்கொன்று சேர்த்தி,
ஒருங்கிணைய நேர்த்தி-எண்ணிலா
வண்ண மேனியரை இனம்பிரித்து
உணருதே லக்மே. இன்மணமுடன்
மேனிமீது இலகுவாய் இழையும்
லக்மே காலமைன் —தனிநிற
உரிமையைத் தருகுது உமக்கு.
பரிட்சார்த்தப் பேக்காகவும்
கிடைக்குது பதம்பார்க்க வசதியாக

லக்மே காலமைன்

சரும வண்ணம் எவ்வண்ணம்
சாயலுண்டு அவ் வண்ணம்.

TS

"வாடிக்கையாளர் புகார் பிரிவு"
என்ற அமைப்பை
கரூர் வைஸ்யா வங்கியில்
நீங்கள் காணமாட்டீர்கள்

காரணம்: எமது கிளை ஒவ்வொன்றிலும் மேனேஜர் தலைமையில் பணிபுரியும் ஊழியர் குழாம், நடவடிக்கை எடுக்க தேவைப்படும் புகார் எதற்கும் இடமளிப்பதில்லை.

அவர்கள் உணர்ந்துள்ளார்கள், நீங்கள் நல்லதோர் வாடிக்கையாளர் என்றும், உங்கள் நேரம் பொன்னான நேரம் என்றும்.

எனவே அவர்கள் உங்கள் தேவைகளுக்கு உடனடி கவனம் அளிக்கிறார்கள்; நீங்கள் காத்திருக்க வைக்கப்பட்டால் அது மிக அவசியமான குறைந்தபட்ச நேரத்திற்கே இருக்கும்.

நீங்கள் எமது வழக்கம்போலான இதமும் கனிவும் நிறைந்த சேவை பெறுகிறீர்கள்—அதில் எமது அறிவு முதிர்ந்த சேவை அடங்கியிருப்பதையும் காண்பீர்கள்.

இவ்வளவு இருந்தும் உங்களுக்கு ஏதோவொரு புகார் இருக்குமானால், எமது கிளை மேனேஜர் அதற்கு உடனடித் தீர்வுகாண துவங்குவார்;

இம்முயற்சியில் அவருக்கு எமது ஊழியர்களின் ஒத்துழைப்பு மனப்பான்மை பெருந்துணை புரியும்.

வாருங்கள், எமது 149 கிளைகள் மூலம் KVB வாடிக்கையாளராகி பயன்பெறுங்கள்.

*சென்னையிலுள்ள எமது ''இன்டர்நேஷனல் டிவிஷன்'' அளிக்கும் அன்னியச் செலாவணி தொழில்நுட்பம் *கரூர் நகரிலுள்ள எமது ''இண்டஸ்ட்ரியல் ஃபைனான்ஸ் செல்'' முதலியவற்றின் நன்மைகளையும் வசதிகளையும் பெற்று பயனடையுங்கள்.

நினைவிருக்கட்டும்: எமது வங்கியிலுள்ள உங்கள் சேமிப்பு கணக்குகள் மற்றும் லாக்கர்களில் உள்ள பொருட்கள் தொடர்பாக வேறு நபரை 'நாமினேஷன்' செய்திடும் வசதியை நீங்கள் இப்போது பயன்படுத்தலாம்.



மக்கள் சேவையில்
70 ஆண்டுகள்

கரூர் வைஸ்யா பாங்க் லிமிடெட்

பதிவு & மத்திய அலுவலகம்:
ஈரோடு ரோடு, கரூர்-639 002
சேர்மன்: K.N. புஜங்க ராவ்

பெருமை மிகு மரபு - அத்துடன் புதுமை மிகு கண்ணோட்டம்

M-86 50 Tm.

சத்ய: தோ பார்.... யோசிக்கணும்... யோசிக்கணும்னு தெரியும் சேதி! என்னை உந்திவிட்டுக் காரியம் சாதிக்கக்கிற உங்க எல்லாத்தையும் முச்சந்திக்குக் கொண்டு வந்துருவேன், ஜாக்கிரதை! சிமெண்ட் மட்டுமில்லே, தங்கம், சாராயம், அரிசின்னு நீங்க செய்யற எல்லா கடத்தலோட ஆதாரமும் எங்கிட்டே இருக்கு. எல்லாத்தையும் வெளியே விட்டேன்னு.... பெரிய மனுஷங்களோட குட்டெல்லாம் வெளிப்பட்டுடும்.

ஜெயன்: டோன்ட் பி ஸில்லி! நாங்க உன்னே இப்படியேவா விட்டுருவோம்.... கூடிய சீக்கிரம் நீ ஜெயில்லேருந்து தப்பிக்க வழி பண்றோம்.

*****

(சில போலீஸ்காரர்கள் ரோடில் லாரிகளை மறித்துப் பணம் வசூல் செய்ததைப் பார்த்து பலராம் அவர்களை அழைக்கிறான்.)

பலராம்: போலீஸ்காரனுக்கு எப்பவுமே கை அரிக்குமில்லே..... கவர்மெண்ட் குடுக்கற சம்பளம் போதாது இல்லே.... என்ன பெரிய சம்பளம் குடுத்துடறானுங்க! குடும்பம் குழந்தை, குட்டின்னு பெருகிடுச்சன்னு நிச்சயமா போதாதுதான். அதுவும் மாசக் கடைசி வேறே. லஞ்சம் வாங்கித்தான் ஆகணும். அப்படி ஒரு தலையெழுத்து நமக்கு.

போலீஸ்கள்: சார்.....

பலரா: இன்னைக்கு, எவ்ளோ வசூல் — எடுங்க பார்ப்போம்?

(எடுத்து வைக்கிறார்கள்.)

பல: இன்னைக்கு விடறேன். இனி இது கூடாது.

போலீ: சார்.... இதுல உங்க பங்கு....

பல: சீ! எடுத்துப் போங்கடா

*****

(கல்லூரியில் பரீட்சை நடக்கிறது. பேராசிரியையாகப்பணியாற்றும்உஷா (பலராமின் மாஜிக் காதலி) மேற்பார்வையிட்டுக் கொண்டிருக்கும் போது அரசியல்வாதியின் மகன் நிர்மல் புத்தகத்தை மறைத்து வைத்து எழுதுவதைப் பார்த்துவிடுகிறாள்.)

உஷா: நிர்மல்.... என்ன அது.... எடு வெளியே!

நிர்மல்: (மறைத்தபடி) இது ஒண்ணுமில்லே சும்மா....

உஷா: என்ன சும்மா.... வெளியே எடு!

நிர்மல்: (விசில் அடித்து) என்னம்மாக் கண்ணு.... என்ன வேணும் உனக்கு?

உஷா: என்ன மரியாதை குறையுது. ஒழுங்கா குடுத்துடு இல்லாட்டி ரிப்போர்ட் பண்ணிடுவேன்! (அவனிடம் புத்தகத்தைப் பறிக்க நெருங்குகிறாள்.)

நிர்மல்: ஏய்.... குட்டி... கிட்டே வராதே... வந்தே.... முகத்துல ஆஸிட் ஊத்திடுவேன்!

உஷா: உனக்கு அவ்ளோ திமிரா.... அந்தப் புஸ்தகத்தைக் குடு இப்படி!

(உஷா கையை நீட்ட அவன் பிளேடு எடுத்துக் கையில் ஆழமாய்க் கீறி விடுகிறான். அவள் கையிலிருந்து ரத்தம் கொட்டுகிறது.)

*****

(நிர்மலின் நடத்தை பற்றிப் போலீசுக்கு கம்ப்ளெயின்ட் கொடுக்கிறாள் உஷா. பலராம் நிர்மலின் வீட்டிற்குப் போகிறான். அங்கே நிர்மலின் அப்பா அரசியல்வாதி சந்திரஹாசன்....)

சந்திரஹாசன்: வாங்க மிஸ்டர் பலராம்... புதுசா டிரான்ஸ்பர் ஆகி வந்திருக்கிறதாக் கேள்விப்பட்டேன். நானே உங்களைக் கூப்பிட்டு விருந்து வைக்கணும்னு நினைச்சேன். நீங்களாவே வந்துட்டீங்க. சந்தோஷம். எந்தப் போலீஸ்காரனு இருந்தாலும் என் வீடு தேடி வராமல் இருந்ததில்லே. ஏன் நிக்கறீங்க.... உட்காருங்க!

பல: பரவாயில்லே.

சந்தி: இப்படித்தான் என் முன்னால உட்காரவே எல்லோரும் தயங்குவாங்க. எம் மேலே அத்தனை மரியாதை.... ஆமா என்ன

"அந்த பலராம், இவளோட மாஜிக் காதலன்..."





'இண்டர்நேஷனல் க்ரைம் மன்னன்!'

விஷயம், என் உதவி ஏதாச்சும் தேவையா?

பலராம்: நான் உங்களைப் பார்க்க வரலே, உங்க மகனைத் தேடித்தான் வந்தேன்.

சந்தி: என் மகனையா.... ஏன்?

பலரா: கூப்பிடுங்க, சொல்றேன்.

(நிர்மல் வருகிறான். பலராம் அவன் கையைப் பிடித்துக் கொள்கிறான்.)

பல: பரீட்சை ஹால்ல காப்பியடிச்சாலும் உங்க மகன். கண்டிச்ச டீச்சரை பிளேடால கீறியிருக்கான். மூகத்துல ஆஸிட் ஊத்திடுவேன்னும் மிரட்டியிருக்கான். அதனால உங்க மகனைக் கைது பண்ணிக் கொண்டு போக வந்தேன்.

சந்தி: கைது பண்ண வந்தாயா.... எம் மகனையா.... நான் யார்ன்னு தெரியுமில்லே. வெளியே யாரை வேணுமானாலும் கேட்டுப் பார். இந்த சந்திரஹாசன் யார்ன்னு புரியும் உனக்கு. அரசியல் கிங். பெரும் பணக்காரன். நான் கைதட்டினா மந்திரிங்க ஓடி வருவாங்க. நான் கொடி காட்டினா மந்திரி சபையே ஆட்டம் காணும்.... தெரியுமில்லே....

பல: தெரியும். அது மட்டுமில்லே. ஊருல இருக்கிற நல்ல பொண்ணுங்களையெல்லாம் மந்திரிக்குக் கூட்டிக் கொடுக்கிற மாமா நீங்கன்னும்கூட தெரியும். அப்போ நிர்மல் போகலாமா கண்ணு....

சந்தி: அவனை நான் விட மாட்டேன். மந்திரிக்கு போன் பண்ணுவேன்.

பல: ஓயெஸ். தாராளமா பண்ணுங்க. ஆட்சேபனை இல்லே. இவனை நல்லபடியா அழைச்சுகிட்டுப் போகணுமா.... இல்லே! நாலு தாங்கு தாங்கிக் கொண்டு போகணுமா..... சொல்லுங்க!

(நிர்மலைப் போலீஸ் வேனில் ஏற்றிக் கொண்டு கிளம்புகிறார்கள்.)

*****

(போலீஸ் வேனிற்குள் நிர்மலை பலராம் அடி அடியென்று அடிக்கிறான்.)

பல: ஏண்டா.... டீச்சர் மேலே ஆஸிட் ஊத்துவியா நீ....

நிர்: இல்லே..... இல்லே.... என்னை விட்டுடுங்கோ, ஐயோ.....!

பல: நீ பெரிய அரசியல் கிங்கோட மகனா இருக்கலாம். ஆனா எங்ககிட்டே உங்கப்பன் பப்பு வேகாது. இங்கே என்ன நடந்ததுன்னு வெளியே சொல்லுவியா....

நிர்: ஐயோ.... அம்மா இல்லே என்னை அடிக்காதீங்க....

(வேன் போலீஸ் ஸ்டேஷனை அடையும் முன் அங்கு சந்திரஹாசன் வக்கீல் ஜெயனுடன் தயாராய் நிற்கிறார். நிர்மல் முகம் அடிபட்ட நிலையில், சோர்ந்து போய் இறங்குகிறான்.)

சந்தி: ஐயோ.... எம் மகன் மூஞ்சியெல்லாம்.... வீங்கிப் போயிருக்கே. என்ன பண்ணினீங்க அவனை?

பல: நிர்மல்.... அப்பா கேட்கறாரில்லே... என்ன விஷயம்னு சொல்லும்மா....

நிர்: அது வந்து வேறே ஒண்ணுமில்லே... வேனிலிருந்து குதிச்சுத் தப்பிக்கப் பார்த்தேன். அப்போ அடிபட்டுருச்சு.

ஜெயன்: நிர்மலை ஜாமீன்ல எடுக்க வந்திருக்கோம்.

பல: நீங்க யாரு?

ஜெயன்: இவரோட வக்கீல்.

பல: வக்கீலுக்கு போலீஸ் ஸ்டேஷன்ல என்ன வேலை.... கோர்டுல சந்திப்போம். கேஸ் பைல் பண்ணிட்டு நானே இந்தக் கழுதையை வெளியே விட்டுடறேன்.

போலீஸ் ஒருவர்: (ஓடி வந்து) இன்ஸ்பெக்டர். உங்களை மந்திரி போன்லே கூப்பிடறார்.

பல: நான் இல்லேன்னு சொல்லு. பண முதலையோட புள்ளையப் பிடிச்சுக் கொண்டு வந்தா, மந்திரிதான் கூப்பிடுவார்னு தெரியும்.

*****

(ஜெமனின் வீடு. உஷா கொடுத்த கம்ப்ளெயிண்டை வாபஸ் வாங்கச் சொல்கிறான் ஜெயன்.)

உஷா: அதெப்படி வாபஸ் வாங்க முடி



UIPC : KS.86

இன்ட்டர்நேஷனல்

மிஞ்சமுடியாதது   தகர்க்க முடியாதது



LINTAS BPL IT 4 2025 TM

டூரிஸ்ட்டர்

ஈ-டு இணையற்றது



இன்ட்டர்னேஷனல் டூரிஸ்ட்டர். பரவச-மூட்டும் சூட்கேஸ் வரிசை. பலித்தது இதிலே உங்கள் பலகாலக் கனவு...மகத்தான ஒரு மவுல்டெட் லக்கேஜ்...உங்கள் மனம் நாடிய பெருமைகள் அனைத்துக்கும் பெட்டகம். நீடித்த உழைப்பு, ஸ்டைல் வனப்பு, பணத்திற்குப் பெருமதிப்பு.


திகைப்பூட்டும் வகைக் களஞ்சியமாக வருகுது இன்ட்டர்னேஷனல் டூரிஸ்ட்டர்: பலரகவாரி...விலையோ ரூ. 200 முதல். மனமயக்கும் விதவித சைஸ்கள், வர்ணங்கள், வகை விரிவான டிசைன்கள். ஒவ்வொரு சூட்கேசும் சாகசம் பூரிக்கும் திக்விஜய வாழ்வைத் துணிந்தேற்க வல்லதாக திடமுடன் கட்டமைந்தது. தரமான சூட்கேஸ் விற்கப்படும் எவ்விடத்-திலும் கிடைக்குது...தட்டிக்கொண்டு போங்கள் பெட்டி வடிவிலே ஒரு 'சூறாவளி'.



INTERNATIONAL
TOURISTER

மகிழ்ச்சித் துள்ளல் இதன் விலையே மலைக்கும் "த்ரில்"

வி.ஐ.பி. யின் தரமான தயாரிப்பு



BD/336/TAM

சேஸாரி

க லெ க் ஷ னி ன் சூ ட் டி ங் ஸ்

பாலியெஸ்டர் வூல் ப்ளெண்டட் மற்றும் பாலியெஸ்டர் ப்ளெண்டட் சூட்டிங்குகள்

பாம்பே டையிங்

யும்.

ஜெயன்: நீ வாபஸ் வாங்கித்தான் ஆகணும். இந்த கேஸ் எனக்கு மானப் பிரச்சனையாயிருக்கு. அந்த இன்ஸ்பெக்டர் பெரிய இவனாட்டம் நடந்துக்கறான். அவனுக்கு ஒரு பாடம் புகட்டியேயாகணும்.

உஷா: அதுக்கு நான்தான் கிடைச்சேனா... காலேஜ்ல எல்லார் முன்னாடியும்தான் என் கையைக் கீறியிருக்கான். கம்ப்ளெயின்ட் கொடுத்தேன். இப்போ போய் அவன் என் கையைக் கீறலேன்னு எந்த மூஞ்சியை வச்சுகிட்டுச் சொல்வேன்? என்னால முடியாது!

ஜெய: முடியாதா.....? தெரியும்டி.... நீ ஏன் வாபஸ் வாங்க மறுக்கறேன்னு! அந்த இன்ஸ்பெக்டர் வெறும் இன்ஸ்பெக்டர் மட்டுமில்லையே.... உன் மாஜிக் காதலனாச்சே. மாஜிக் காதலனை எப்படி விட்டுக் குடுப்பே நீ.

உஷா: அத்தான்!

ஜெய: ஏன்டி கத்தறே..... இன்னைக்கு ரெண்டுல ஒண்ணு தெரிஞ்சாகணும். நான் வேணும்னா கம்ப்ளெயின்டை வாபஸ் வாங்கு. அவன்தான் வேணும்னா உன் இஷ்டப்படி நட.

★★★★★

(உஷா வேறு வழியில்லாமல் பலராமைச் சந்தித்து கம்ப்ளெய்ன்டை வாபஸ் பெறக் கோருகிறாள்.)

பலராம்: நீ வாபஸ் வாங்க வருவேன்னு தெரியும். கொலை செய்யப்பட்டவனே பிழைச்சு வந்து என்னை யாரும் கொல்லலேன்னு சொல்ற காலம் இது. நீ என்ன பண்ணுவே பாவம். அதுவும் ஓர் அயோக்கிய வக்கீலோட மனைவி வேறே!

★★★★★

(பலராமின் வீடு. ஒரு பத்திரிகை நிருபர் வருகிறார்.)

நிரு: வணக்கம். நான் 'கலை' வார இதழின் நிருபர்.

பல: கலையா..... ஹாஹ்ஹா... ஊருலே நடக்கிற — நடக்காத 'கொலை' பத்திதானே நிறைய வெளியிடறீங்க நீங்க! பேசாம 'கொலை' வார இதழ்னு பேர் வச்சுடுங்க.

நிரு: ஹி....ஹி.... அது வந்து ஜனங்க அதைத் தானே த்ரில்லாய்ப் படிக்கிறாங்க. அதனாலதான். நான் இப்போ வந்தது எதுக்குன்னா.... இன்டர்நேஷனல் கிரிமினலான சத்யராஜை நீங்கதானே பிடிச்சீங்க... அதனால்....

பல: அதனால எனக்கு மெடல் கொடுக்கப் போறீங்களா? உங்களை மாதிரி உருப்படாத பத்திரிகைகளோட மெடல் எனக்கொண்ணும் வேண்டாம்.

நிரு: ஐயோ, நீங்க தப்பாப் புரிஞ்சுக்கிட்டீங்க. அந்த சத்யராஜ் பற்றி அவனோட பயோகிராபியை எங்க பத்திரிகையில வெளியிடலாம்னு இருக்கோம். அதனால....

பல: எந்திரிய்யா!

நிரு: என்ன....?

பல: முதல்ல எந்திரிய்யா. இடத்தைக் காலி பண்ணு. அந்தச் சத்யராஜ் மட்டும் கிரிமினல் இல்லை. உன்னைப் போன்ற பத்திரிகைகாரங்களும்தான் நாட்டைக் குட்டிச் சுவர் ஆக்குறீங்க. அவன் கொலை பண்றான், கொள்ளையடிக்கிறான். அவனைப் பற்றி பயோகிராபி எழுத வந்திருக்கான். பயோகிராபி! போய்யா! எதுக்கு அவனோட பயோகிராபி. அவனைப் பல பேரும் கடைப்பிடிக்கணும்னா?

(பத்திரிகை நிருபர் ஏமாற்றத்துடன் வெளியேறுகிறார்.)

(வின்ஸென்ட், சந்திரஹாசன், வக்கீல் ஜெயன் இவர்கள் மூவரும் திட்டமிட்டு, ஜெயில் சூப்பரின்டென்ட், டி.ஐ.ஜி., கமிஷனர் உதவியுடன் சத்யராஜை ஜெயிலிலிருந்து தப்பிக்க வைக்கிறார்கள். ஜெயில் சூப்பரின்டென்ட்தான் சத்யராஜ் தப்பிக்கக் காரணம் என அறிந்து பலராம் ஓர் அப்ளிகேஷன் தயாரித்து கமிஷனரைப் போய்ச் சந்திக்கிறான். கமிஷனர் கிளப்பில் சீட்டு



* கொலையாளியைத் தேடி இன்ஸ்பெக்டர் பலராம்!

(பணம் வைத்து) விளையாடிக் கொண்டிருக்கிறார்.)

பலராம்: சார்.... சத்யராஜ் ஜெயில்லேருந்து தப்பிக்கிறதுக்கு சூப்பரிண்டெண்ட்டும் காரணம்னு விசாரணையில் தெரிய வருது. இந்தச் சம்பவத்துக்குப் பின்னால் பெரிய சதியே இருக்கிறதாகச் சந்தேகப்படறேன். அது பத்தின டிடெயில்ஸ்லாம் இதுல இருக்கு. இதை மேலிடத்துக்கு நீங்க பாஸ் பண்ணி வைக்கணும். (சில காகிதங்களைத் தருகிறான்.)

கமிஷனர்: (அதை வாங்கிப் பார்த்து) சத்யராஜ் தப்பிச்சது தப்பிச்சுட்டான். நீங்க உங்க வேலையைப் பாருங்களேன். எதுக்கு வீணா ஸ்ட்ரெயின் எடுக்கறீங்க....?

பல: இதுல ஸ்ட்ரெயின் என்ன சார் இருக்கு. அவனைப் போன்ற கிரிமினல்களைச் சும்மாவே விடக்கூடாது.

கமி: அது போகட்டும் பலராம். (பாக்கெட்டிலிருந்து ஒரு புக் எடுத்துத் தந்து) இது புட்பால் கேமோட டிக்கெட் புக். இதுல, பத்து டிக்கெட் இருக்கு. எல்லாமே ஐயாயிரம் ரூபாய் டிக்கெட். இதை வித்து இரண்டு நாள்ல பணத்தைக் கொண்டு வந்து குடுங்க.

பல: ஸாரி சார்.... என்னால அது முடியாது!

கமி: முடியாதுன்னு எதுக்குய்யா உனக்கெல்லாம் இன்ஸ்பெக்டர் வேஷம்?

பல: இந்த இன்ஸ்பெக்டர் வேஷத்தோட போனா ஐயாயிரம் என்ன, ஐம்பதாயிரம் ரூபா டிக்கெட்னாலும் விக்க முடியும். அப்படி வித்தேன்னா அப்புறம் அவனுங்களுக்கு நான் மணியடிக்க வேண்டியிருக்கும். அதனால தான் முடியாதுன்னு சொல்றேன்.

கமி: அப்போ நீர் போகலாம்.

பல: சார் இந்த அப்ளிகேஷன்...?

கமி: லெட் யுவர் அப்ளிகேஷன் கோ டு ஹெல்!

*****

(தெருவில் சூதாடினார்கள் என்பதற்காகச் சில ரௌடிகளைப் போலீஸ்காரர்கள் பிடித்து வந்து ஸ்டேஷனில் வைத்து அடிக்கிறார்கள். அப்போது உள்ளே வருகிறான் பலராம்.)

பலராம்: கான்ஸ்டபிள், என்ன இங்கே ரகளை....?

போலீ: ரகளை இல்லே சார். இந்தத் தடிப் பசங்க தெருவில சூதாடறானுங்க. இவனுங்களைச் சும்மா விடக் கூடாது. அடிச்சுக் கொல்லணும்.

பலராம்: ஸ்டாபிட்! அவங்களை விட்டுடுங்க. போனாப் போறாங்க. இல்லாத கொடுமையினால, ஏதோ நாலு காசு கிடைக்குமேன்னு சூதாடிட்டாங்க.

போலீ: சார்.... அப்போ சூதாடறது சரிங்கறீங்களா....

பல (கோபமாக): தப்புத்தான். சூதாட்டத்தை ஒழிக்கணும்னு நிஜமாலுமே எண்ணமிருந்தா தெருவிலே பிடிக்காதீங்க. பெரிய பெரிய ஆபீசிலும், போலீஸ் கிளப்பிலும், மந்திரிங்களோட கோட்டையிலும் ஆயிரம் ஆயிரமா வைச்சுச் சூதாடறானுங்களே, அவனுங்களைப் போய் முடிஞ்சாப் பிடியுங்க. இந்தப் பரிதாப கேஸ்களைப் பிடிச்சு இனி வதைக்காதீங்க.

*****

(சத்யராஜ் தப்பித்தது பற்றி பலராம் கம்ப்ளெயின்ட் கொடுக்கப் போக டி.ஐ.ஜி. அவனை அழைக்கிறார்.)

டி.ஐ.ஜி: மிஸ்டர் பலராம், உங்களை இன்னையிலிருந்து டிராஃபிக் கண்ட்ரோலுக்கு டிரான்ஸ்பர் செஞ்சிருக்கோம்.

பல: என்ன அநியாயம் சார் இது. ஏன் இந்த டிரான்ஸ்பர்....? ஜெயில் சூப்பரிண்



* "ஐயோ! அவன் இண்டர்நேஷனல் குற்றவாளியாச்சே!"

டென்ட் பேர்ல கம்ப்ளெயிண்ட் கொடுத்த தாலேயா....

டி-ஐ-ஜி: நோ.... நோ! வீ.... வர வர நகரத்துல டிராபிக் கூடிகிட்டே வருது. உங்களை மாதிரி சுறுசுறுப்பான ஆட்கள் டிராபிக்குக்குப் போனால்தான் வாகனங்களைக் கண்ட்ரோல் பண்ண முடியும். அதனாலதான்.

பல: சார்.... எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுத்தீங்கன்னா அந்த சத்யராஜைப் பிடிச்சுக் குடுத்துட்டு அப்புறமா டிராஃபிக்குக்குப் போறேன்.

டி-ஐ-ஜி: நோ. அதை நாங்க பாத்துக்கிறோம். யு கான் கோ நவ்!

★★★★★

(ராதா கேஸ் பற்றிப் பேச ஜெயனின் வீட்டிற்கு வருகிறாள். அங்கே உஷா வரவேற்கிறாள்.)

உஷா: வாங்க. உங்க தம்பிக்காக நீங்களும் எவ்வளவோ முயன்று கேஸ் நடத்திட்டு தான் இருக்கீங்க. அதனால் என்ன பிரயோஜனம்.... இந்த வக்கீல்கள், கேஸ் ஜெயிக்கிறதோ இல்லையோ.... பணம் பிடுங்கறதுல ஜெயிச்சுடறாங்க....

ராதா: உங்க கணவரே, ஒரு வக்கீல். நீங்க இப்படிப் பேசறீங்க....!

உஷா: என் கணவர் உங்க கேஸை நடத்தறதுனாலதான் சொல்றேன். தயவு செஞ்சு அவர் பேச்சை நம்பாதீங்க. அவர் மோசடி பேர்வழி. தம்பியை இழந்த நீங்க இருக்கிற பணத்தையெல்லாம் இழக்கிறவரைக்கும் விடமாட்டார்.

ராதா (கோபத்துடன்): உஷா. உங்க அட்வைஸ் எனக்கு ஒண்ணும் வேணாம். அயோக்கிய போலீஸ்காரங்க என் தம்பியை நாயை அடிக்கிறது போல அடிச்சுக் கொன்னிருக்கானுங்க. அந்தப் பலராமை நான் சும்மாவிட மாட்டேன்.

உஷா: நான் சொல்றதைக் கேளுங்க. உங்க தம்பியின் முடிவு துயரமானதுதான். ஆனால் அவனைக் கொன்றது பலராமில்லை.

ராதா: அது எப்படி உங்களுக்குத் தெரியும்....

(அப்போது ஜெயன் வருகிறான்.)

ஜெயன்: அப்படிக் கேளுங்கள் ராதா. நான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு தானிருந்தேன். பலராம் கொல்லலேன்னு ஏன் அத்தனை உறுதியா சொல்றாத் தெரியுமா.. ஏன்னா அந்த பலராம் இவளோட மாஜிக் காதலன். அந்தத் தொடர்பு அறுந்து போச்சுன்னு நினைச்சேன். ஆனால் அது தொடருதுன்னு இப்போதானே தெரிய வருது....

உஷா: அத்தான்....!

ஜெயன்: சீ, வாயை மூடுடி. ராதா, நீங்க வாங்க. உள்ளே போய்ப் பேசுவோம். (வேறு அறைக்குப் போகிறார்கள்.)

ஜெய: உங்க தம்பியைக் கொன்னதை நேரில் பார்த்து படம்கூட எடுத்திருக்கான்

* "...பெரிய சதி இருக்கிறதாகச் சந்தேகப்படறேன்."



சத்யராஜ். அவனை ஜெயில்லேருந்து தப்பிக்க வைச்சுட்டோம். அவனை மறைவா எங்காச்சும் ஒளிச்சு வச்சாகணும். உங்க வீடுதான் அதுக்கு வசதின்னு நினைக்கிறேன். என்ன சொல்றீங்க?

ராதா: ஐயோ! அவன் இன்டர்நேஷனல் குற்றவாளியாச்சே!

ஜெய: இருக்கலாம். ஆனா நம்ம கேஸுக்கு உதவுகிற மாதிரி எவிடென்ஸ் அவன் கையில தான் இருக்கு. அதை உத்தேசிச்சு நீங்க இந்த உதவியைப் பண்ணணும்.

ராதா: சரி, என் தம்பிக்காக இதைச் செய்யுறேன். எப்படியாவது அந்த பலராமைத் தண்டித்தால் போதும்.

★★★★★

(டிராஃபிக்கிற்கு மாற்றப்பட்ட பலராம் ஒரு சிமெண்ட் கடத்தல் லாரியைத் துரத்திப் பிடிக்கிறான். அந்த லாரி வக்கீல் ஜெயனுக்குச் சொந்தமானது என்று தெரிய வர, அவன் வீட்டிற்குச் சென்று, ஆராய்ந்து சில பைல்களைக் கைப்பற்றுகிறான் பலராம். அவற்றை டி-ஐ-ஜி.யிடம் கொடுக்கிறான்.)

பலராம்: சார்.... இந்த பைல்கள் முக்கியமானவை. இதையெல்லாம் பார்த்தால் சாக்கோவைக் கொன்ற விஷயம் வெளிப்படுகிறது. சுமார் இரண்டரை கோடி மதிப்புள்ள சிமெண்ட் கடத்தலும் புலப்படறது.

டி-ஐ-ஜி: அப்படியா.... (புரட்டிப் பார்க்கிறார்.)

பல: இவங்க மேலே உடனே நீங்க ஆக்ஷன் எடுக்கணும் சார். இல்லாட்டி தப்

ஒவ்வொருவர் உடலுக்கும் ஒப்பற்ற பொருத்தம்

டான்டெக்ஸ்®

பரீஃபஸ்

வெஸ்டடஸ்

காஷுவெல்ஸ்

சிறுவர்களுக்கான ரகங்கள்



TTK தயாரிப்பு

Imageads 2221 Tam

பிச்சுடுவாங்க...

டி.ஐ.ஜி: நோ மிஸ்டர் பலராம். இந்த விஷயத்துல நாம அவசரப்படக்கூடாது. எதிரிங்க பலசாலிங்க. தந்திரசாலிங்களும் கூட. அதனால சின்ன ஓட்டை கிடைச்சாக் கூட தப்பிச்சுடுவாங்க. அதனால கேர்ஃபுலாத் தான் இதை டீல் செய்யணும். இந்த பைலே வேறே யார்கிட்டேயும் காட்டலேயே நீங்க.

பல: இல்லே சார்....

டி.ஐ.ஜி: வெரிகுட். இந்த விஷயம் நம்ம ரெண்டு பேரோடயே இருக்கட்டும். நான் ஆராய்ஞ்சு முடிவெடுக்கிறேன். அதுவரை நீலும் இந்த பைல் பத்தின விஷயத்தை மறந்துடுங்க. என்ன....

பல: சரி சார்....

டி.ஐ.ஜி: எனிவே யு ஹாவ் டன் எ பியூட்டிஃபுல் ஜாப். கீப் இட் அப்!

பல: தாங்க்யூ சார்!

*****

(பலராம் போலீஸ் ஜீப்பில் இருக்கும் போது, வயர்லெஸ் செய்தி வருகிறது. ஒரு மந்திரியின் கார் ஓர் ஆளை இடித்து விட்டுப் போவதாய்ச் சொல்கிறது. உடன் மந்திரியின் காரைப் போய் மறிக்கிறான்.)

பலராம்: (மந்திரியிடம்) சார். உங்க கார் ஓர் ஆளை இடிச்சுட்டு வந்திருச்சாம்.

மந்திரி: ஓ.... ஐஸீ....' அதனால....?

பல: அந்த ஆளுக்கு ஸீரியஸாம்...

மந்திரி: அப்போ ஹாஸ்பிடல்ல சேர்த்துடுங்க. நான் வரட்டா....?

பல: ஒன் மினிட் சார். கொஞ்சம் கீழே இறங்குறீங்களா?

மந்: ஏன்?

பல: இந்தக் காரை கஸ்டடில எடுக்கணும்...

மந்: என்னது....?

பல: ஆமாம் சார். அதுதான் சட்டம்.

மந்: அப்போ நான் எதுல போவேன்.

பல: போலீஸ் ஜீப் இருக்கு சார்.

மந்: ஜீப்லேயா.....!

*****

(கமிஷனர் அறையில்)

கமிஷனர்: மிஸ்டர் பலராம்.... திரும்பவும் உங்க புத்தியைக் காமிச்சுட்டீங்களே!

• "என் குறி தப்பாது!"



* "போலீஸ்காரனுக்கு எப்பவுமே கை அரிக்கு மில்லே... கவர்ன்மெண்ட் குடுக்கற சம்பளம் போதாது இல்லே...!"



மந்திரி காரை கஸ்டடில எடுத்தீங்களாமே... என்ன நினைச்சுக்கிட்டிருக்கீங்க உங்க மனசுல.

பல: என் மனசுலே எதுவும் நினைச்சுக் கல சார். ஆனா இடிச்சுட்டுப் பறந்து போனா எவன் பார்த்துட்டுச் சும்மா இருப் பான்.

கமி: நீங்க சும்மா இருக்க வேணும்! இந்தப் போக்குல போனீங்கன்னா அப்புறம், தெரியும் சேதி....! இந்த நிமிஷத்திலே யிருந்து உம்மை டிராஃபிக்கிலிருந்து ஸ்பெஷல் பிராஞ்சிற்கு மாற்றியிருக்கோம். யு கான் கோ.

*****

(அன்று பலராம் கொடுத்த பைல்களை டி.ஐ.ஜி. இரகசியமாய் வின்ஸெண்ட், சந்திரஹாசன், ஜெயனிடமே திருப்பிக் கொடுத்து விடுகிறார். பைல் விஷய மாகப் பலராம் இப்போது டி.ஐ.ஜி. யைப் பார்க்க வருகிறான்.)

பல: சார்.... அன்னைக்கு ஜெயன் வீட்டுல கைப்பற்றின பைல்களைக் கொடுத்தேனே... ஆக்ஷன் எதுவும் எடுத்தீங்களா சார்.

டி.ஐ.ஜி: மிஸ்டர் பலராம். நீர் உம்ம பொசிஷனுக்கு மேல் அதிகப்பிரசங்கித் தனமாய் நடந்துக்குறீங்க. அந்த பைல்களை நான் மேலே அனுப்பியிருக்கேன். அதோட முடிவு பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம். இட் ஈஸ் நன் ஆஃப் யுவர் பிஸினஸ்.

(அப்போது மறைவிலிருந்து சி.பி.ஐ. அதிகாரிகள் வந்து டி.ஐ.ஜி.யை அரெஸ்ட் செய்கிறார்கள்.)

பலராம்: என்ன சார் முழிக்கறீங்க. உங்க மேலே நம்பிக்கை இல்லாம அன்னைக்கே பைலோட போட்டோஸ்டேட் காப்பியை செண்டருக்கு அனுப்பியிருந்தேன்.

*****

(இதற்குப் பிறகு சந்திரஹாசன் வின் ஸெண்ட், வக்கீல் ஜெயன் ஆகியோர் கைது செய்யப்படுகின்றனர்.)

(சத்யராஜ், வெளிநாட்டிற்கு சென்று விடும் முயற்சியில் ராதாவின் வீட்டிலிருந்து வெளியேறுகிறான். பலராம் அவனைத் துரத் திப் பிடிக்கிறான்.)


பலராம்: ஏய் சத்யராஜ்! இதுவரை பல முறை உன்னைப் பிடித்துக் கொடுத்தேன். ஒவ்வொரு முறையும் போலீசும் சேர்ந்து உன்னைத் தப்பிக்க விட்டுவிடுவார்கள். போலீஸ் மேல் எனக்கே நம்பிக்கை இல்லை. அதனால் இம்முறை உன்னை அவர்களிடம் ஒப்படைக்கப் போவதில்லை. என் குறி தப் பாது! நானே உன்னை.... (சுட்டுத் தள்ளு கிறான்.)

— முற்றும் —

கவனித்தீர்களா—இந்த ஸீஸனில் சுனில் கவாஸ்கர் எப்படி, இளமை மிகுந்து விளங்குகிறார்?



சேப்பாக்கம் '84



அடிலெய்டு-ஆஸ்திரேலியா '85

"நான் கோத்ரெஜ் பவுடர் ஹேர் டைய் உபயோகிக்கத் தொடங்கியிருக்கிறேன்"

சுனில் கவாஸ்கர்

சுனில் கவாஸ்கர் முன்னிலும் இளமையாகத் தென்படுவதாக திடீரென உங்களுக்குத் தோன்றினால், நீங்கள் நினைப்பது சரியே. கேசச் சாயம் தீட்டிக் கொள்ளத் தீர்மானித்ததுமே சுனில் தேர்ந்தெடுத்தது கோத்ரெஜ் பவுடர் ஹேர் டைய்.

"காரணம், இது பாதுகாப்பானது, தானாகவே பாவிக்கொள்வது. ஆகவே அப்பி பண்ணிக்கொள்ள இலகு. கேசமுழுதுமே இது சரிசமமாகப் பரவியமையும். அதுவுமென்ன, விரைவிலே. நான் என்னவோ, எனது நேரத்தை வெகுவாக மைதானத்தில்தான் செலவிட விரும்புவேன்".

சுனில் அறிவார்: இயற்கையான தோற்றம் தருகிறது கோத்ரெஜ் பவுடர் ஹேர் டைய்.

"என் கேசம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு இயற்கையாக விளங்க வேண்டும்—இதைத்தான் விரும்புவேன்: என்ன இருந்தாலும் அதிக இளமையோடு நான் தோற்றமளிக்க வேண்டும்—இயல்பாக".

இப்போது 25% அதிகம் புதிய பேக்கில்



Godrej
பவுடர்
ஹேர் டைய்

உங்களால் ஊகிக்கவே முடியாது...
அவர் சொல்லும் வரை...
இவ்வளவு இயற்கையான தோற்றம்.

Mudra:B:GHD:2679 TM

என் அருமைக் கணவர்

—'[illegible]' பற்றி கமலா

'என்னைப் பற்றி என் அருமைக் கணவர் நிறைய எழுதியிருக்கிறார். பதிலுக்கு நான் அவரது குணங்களை விளக்கிப் பாராட்டி ஓர் அறுவைக் கட்டுரையாவது எழுதாவிட்டால் என்னைப் பண்பாடு அறியாதவள் என்று நீங்கள் கூறுவீர்கள். ஆகவே அவரைப் பற்றி சில நல்ல விஷயங்களைத் தருகிறேன்.

''கமலா..... ஒரு முட்டாள் செய்யற வேலையை இன்னொரு முட்டாள் செய்ய முடியாதா? இதுதான் என் லைஃப் பிரின்சிபிள்'' என்பார். கடிகாரம் கெட்டுவிட்டால் முதலில் கழற்றி விடுவார். இதில் என்ன பிரம்ம சூத்திரம் இருக்கு? கழற்றி ஆயில் போட்டால் தானாக ஓடறது பார் என்பார். கழற்றுவார். 'கமலா இதைப் பிடி.... அதை அமுக்கு..... கீழ் வீட்டிலே அமுக்கு....' என்று என்னை உதவிக்குக் கூப்பிட்டு ஏதோ ஒரு 'நட்'டைப் பலம் கொண்டு கழற்றுவார். சடாரென்று அது கழண்டு வெளியே வர, சில பல ஸ்பிரிங்குகள் பூவாணமாய்ப் பறக்கும். வீடு முழுவதும் தவழ்ந்து போய்த் தேடித் திரட்டி வந்து கொடுக்க வேண்டும். இந்த மாதிரி சமயத்தில் நான் சிரித்தால் கொலையே விழுந்து விடும்! அவ்வளவு பொறுமைசாலி!' எல்லாவற்றையும் கிளீன் பண்ணிப் போட்டால் 'மாடு மாதிரி உழைக்கும்' என்று எண்ணெய் போட்டு (மாட்டுக்கு புண்ணாக்கு போட வேண்டாமோ!) மறுபடியும் நான்கு கைகள், இரண்டு கால், கட்டை விரல்களால் பலவற்றை அழுத்திப் பிடித்துக் கொண்டு





மறைகளைப் போடும் சமயத்தில் நிச்சயமாக அவருக்கு நடு முதுகில் தினவு எடுக்கும். சிறிது நேரம் உட்கார்ந்த இடத்திலேயே டிஸ்கோ மாதிரி நெளிந்துவிட்டு, 'கமலா.... நான் பிடிச்சுண்டு இழுக்கிறேன். கொஞ்சம் சொறிஞ்சு விடு' என்பார்!

இந்த ஸ்பிரிங் எங்க இருந்ததுன்னு தெரியலையே.... சட்டுனு தெறிச்சு விழுந்துட்டதால முதலிலே எங்கே இருந்ததுன்னு




போய் நோஸ்—ப்ளேயர் வாங்கிக் கொண்டு வா' என்பார். நோஸ்—ப்ளேயர் மட்டுமல்ல, எது கேட்டாலும் 'நோ' சொல்லும். கீழ் வீட்டுக்காரர்கள் வழக்கமான பல்லவியைப் பாடுவார்கள். 'அப்படியா ஒரு பதினஞ்சு ரூபாயை வீசியெறிஞ்சா ப்ளேயர்' என்று சொல்லி ஒரு ப்ளேயரை வாங்கி விடுவார். 'இந்தக் கையால் அதைப் பிடிச்சுக்கோ, அந்தக் கையாலே இதை



மனிதன் புலியைக் கொலை செய்ய நினைத்தால் அது வீர விளையாட்டு; புலி மனிதனைக் கொலை செய்ய முயன்றால் அது கொடூரம்.





"என்னா, குறுக்கேயும் வந்துட்டு, 'ஓட்டத் தெரியுமா'ன்னு' என்னைப் பார்த்துக் கேட்கறேயே? நான் முப்பது வருஷமா கார் ஓட்டறேன்..."

"நான் அப்பாது வருஷமா நடக்கிறேன், தம்பி!"

— பி.எஸ். ஆர்.

அதிர்ஷ்டத்தில் எனக்கு நிறைய நம்பிக்கை உண்டு. நான் உழைக்க உழைக்க என் அதிர்ஷ்டமும் அதிகரிக்கிறது.

— ஸ்டீவன் லீகாக்.

பார்க்க முடியலே. இந்த ஜப்பான்காரன் சரியான ஃபூல். இப்படிக் கழண்டு போற ஸ்பிரிங்காவா வைப்பான்! ஜப்பான்காரனை இவர் திட்டுகிறார்! இந்த மாதிரி சமயத்தில் நானும் சேர்ந்து திட்டுவேன். இல்லாவிட்டால் என்னை அல்லவா திட்டுவார்!

எல்லாம் போட்டு மூடிய பிறகு எவ்வளவு தட்டினாலும் அல்லது அதட்டினாலும் கடிகாரம் ஓடாது. பேசாமல் கடிகார ரிப்பேர் ஷாப்பில் சென்று கொடுப்பார். 'யாரோ கழற்றி இருக்காங்க. ரொம்ப வேலை வாங்கும்.... ஏன் சார் கண்ட கஸ்மால ரிப்பேரர் கிட்டே கொடுக்கறீங்க' என்று கடைக்காரர் கேட்கும்போது நான் இயற்கைக் காட்சிகளை ரசிக்க ஆரம்பித்து விடுவேன். இன்று தமிழகத்தில் அதிக அளவில் இயற்கைக் காட்சிகளை ரசித்தவள் என்ற பெயர் எனக்குக் கிடைத்திருப்பதற்கு என் அருமைக் கணவருக்கல்லவா நன்றி சொல்ல வேண்டும்!

ஒரு ரப்பர் ஸ்டாம்பைத் தயாரிக்க எவ்வளவு செலவாகும். 170 ரூபாயில் மிகவும் நயமாகத் தயாரித்தவர் என் கணவர். இல்லே, இல்லே என் அருமைக் கணவர்!

ஏதோ ஒரு ஜலந்தர் கம்பெனி, வீட்டிலிருந்தே ரப்பர் ஸ்டாம்ப் தயாரித்து முப்பதாயிரம் சம்பாதியுங்கள் என்று விளம்பரப்படுத்தி இருந்தது. அதை அரசாங்க உத்தரவு போல் கருதி இவர் முப்பதாயிரம் சம்பாதிக்கமுனைந்தார்! 'இதெல்லாம்வீண் வேலே' என்று நான் சொன்னேன்.

'ஆரம்பிக்கும்போதே தடங்கல்.... ஹூம், உருப்பட்டால் போல்தான்..... ஏன், முப்பதாயிரம் ரூபாய் வந்தால் மாமிக்குக் கசக்குமோ?' என்று ஆசையாக எரிந்து விழுந்தார்.

'இல்லே இந்த மாதிரி விளம்பரங்களில் ரொம்ப மிகைப்படுத்திச் சொல்வான்.'

'அது எனக்குத் தெரியாதா? முப்பதாயிரம் இல்லாவிட்டால் 25 ஆயிரம்.....'

'கரெக்ட்.... முதலில் மெஷினை எல்லாம் வரவழியுங்க.... எனக்குச் சொல்லிக் கொடுத்துடுங்க. நான் செய்து கொடுக்கிறேன்' என்றேன் பொய்யான உற்சாகத்துடன்.

நூறு ரூபாய் மணியார்டர் அனுப்பிவிட்டு நான்கு ரிஜிஸ்டர் தபாலில் ரிமைண்டர் அனுப்பிய பிறகு வி.பி.பி.யில் வந்தன ரப்பர் ஸ்டாம்ப் உபகரணங்கள். பார்சலே உற்சாகமாகப் பிரித்துச் செய்முறைக் குறிப்புகளைப் பார்த்து, ரப்பர் ஸ்டாம்ப் செய்ய முனைந்தார். 'அகஸ்தியன்' என்று செய்யட்டுமா?' என்று என்னைக் கேட்டார். அரை நாள் மன்றுடி ஒரு மாதிரியாக ஸ்டாம்பை உருவாக்கி கட்டையில் ஒட்டி, ஸ்டாம்ப் பேடில் ஒத்தி, காகிதத்தில் அழுத்தினார். எதிரே காட்சியளித்தது:

அகஸ் ஈதீன்

அந்த எரிச்சலில் எல்லாவற்றையும் பரணில் தூக்கி எறிந்தார். இது போன்று பல பொருள்கள் பரணில் இருந்தன. பார்க்கப் போனால், எங்கள் வீட்டில் உள்ள மொத்த சாமான்களில் எழுபது சதம் பரணில்தான் உள்ளன! '

யாரோ இவரை ஜோக் மன்னன் என்று சொல்லிவிட்டார்கள். அதனால் இவர் எங்கு போனாலும் ஜோக் அடிக்க ஆரம்பித்துவிடுவார். நான் நாலைந்து தடவை இம்மாதிரி சந்தர்ப்பங்களில் சிரித்து வைத்தேன். ஒரே ஜோக்கை, அதுவும் மட்டமான ஒரே ஜோக்கை எத்தனை தடவை கேட்பது? எத்தனை தடவை சிரிப்பது?

அதனால் நான் சிரிப்பதை நிறுத்திக் கொண்டேன்.

'உனக்கெல்லாம் கற்பூர வாசனை எங்கே தெரியப் போறது? இந்த ஜோக்கைச் சொன்னதும் எங்க அக்கா எப்படி சிரிப்பா தெரியுமா?' என்றார். (சிரிக்க மாட்டாளா என்ன, சிரித்தால் உடம்புக்கு டானிக் என்பார்கள். அக்கா சிரித்தால் இவர் பர்ஸ் அல்லவா இளைக்கிறது!)

'இல்லே எத்தனை தடவை ஒரே ஜோக்கை....' என்று நான் ஆரம்பித்ததும், 'உனக்குப் பழசாக இருக்கலாம். அவங்களுக்குப் புதுசுதானே? அதனால் அப்பதான் முதல் தடவையாகக் கேட்கிற மாதிரி நீ சிரிக்கணும்' என்று பற்களைச் சிக்கி முக்கிக் கற்களாக ஆக்கிக் கொண்டு கொஞ்சிச் சொன்னார்.

இப்போது புரிகிறதா இவர் ஜோக் சொன்னதும் நான் அரை மணி நேரம் விடாமல் சிரிப்பதன் ரகசியம்? ஹூம், இப்படி சிரிக்க வேண்டியிருக்கிறதே, என்பதை நினைக்கும்போது அழுகைதான் வருகிறது!

இவரைப் பற்றி ஒரு சோறு பதம் தான் இவை. இந்த ஒரு சோறு பதமே உங்களுக்குப் போறும் போறும் என்று ஆகியிருக்கும். ஆகவே இப்போதைக்கு நிறுத்திக் கொள்கிறேன்.

— கமலா ரங்கநாதன்






உண்மையான காதல் என்பது பேய் மாதிரி. எல்லோரும் அதைப் பற்றிப் பேசுவார்கள். ஆனால் வெகு சிலரே அதைப் பார்த்திருக்கிறார்கள்.

— La Rochefoucauld





மோகம் என்பது இதுதானே

உஷா சுப்பிரமணிய

1

வாயிற் கதவின் உட்புறமாக மாட்டியிருந்த தாழ்ப்பாளை நீக்கிய சுந்தரம், கதவைத் திறந்தவுடன், சில் என்ற விடியற்காலைத் தென்றல் அவர் மார்பைத் தழுவி, ஓர் இன்பமான உணர்வைத் தோற்றுவித்தது. வெளியே இன்னும் பனிமூட்டம் விலகவில்லை. சன்னமான பனிப்படலத்தின் பின்னணியில், இயற்கை எழில் கொஞ்சும் அந்தச் சின்ன ஊர் மெல்லக் கண்சிமிட்டி விழிக்கத் துவங்கியது. பழக்கமான அந்த நேரம், காட்சி, நாசியை வருடும் மணம் இவற்றுடன் சள் சள் என்ற நீர் தெளிக்கும் ஓசையும் கலந்தது.

அவர் கவனம் வேறெங்கோ இருந்த போது, அவரைக் கடந்து சென்றிருக்கிறாள் புவனா. இழுத்து மேலே சொருகிய பாவாடையின் கீழே கொலுசு மினுமினுத்தது. அந்தப் பாதங்களைப் பார்த்தபோது சின்னக் கண்ணன் நினைவு சம்பந்தமில்லாமல் வந்தது. கீத கோவிந்தத்தின் முதல் ஸ்லோகத்தை வாய் முணுமுணுத்தது... கிருஷ்ணன் என்னும் சின்னக் குழந்தை இருட்டில் தனியே செல்லப் பயந்து நிற்க அவனுக்கு வழித்துணையாகிறாளாம் ராதை. இந்தச் சின்னப் பாதம் கண்ணனை நினைவூட்டினாலும் இருட்டில் தனியே நீர் தெறிக்கும் இந்தப் பெண்மை ராதையுடையது தான்....

இப்போது புவனா தெளித்த நீரை விளக்குமாற்றால் பரத்தி, நீண்ட விரல்களை மாவில் துவைத்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் தந்தையின் முகத்தை வெட்கத்துடன் நிமிர்ந்து பார்த்துச் சிரித்தாள்.

"என்னப்பா பார்க்கறீங்க. கோலம் நல்லா இருக்கா?"

"புவனாக்குட்டி போடற கோலம், பாடற பாட்டு, பேசற பேச்சு எல்லாமே நல்லாத்தான் இருக்கும்..." மகளைக் கனிவுடன் பார்த்தார். "இத்தனை சீக்கிரம் ஏம்மா எந்திரிச்சே? பொழுது விடிஞ்ச பிறகு எழுந்து கோலம் போட்டாப் போறாதா?"

"நீங்க வாசக் கதவு தாழ்ப்பாள் நீக்கற சத்தம் கேட்டாலே முழிப்புக் குடுத்துடுதுப்பா.... அதுவும் இந்த விடியற்காலை வேளையிலே கோலம் போட எனக்கு ரொம்பப் பிடிக்கும். மெல்லிசா ஊதக் காத்து. அதோடு தென்னங்குருத்து மணம்... பொழுது விடிஞ்ச பிறகு டீக்கடையிலிருந்து வரும் கிறல் விழுந்த ரிகார்டு சத்தத்திலே கோலம் தப்பாப் போயிடுது..."

"ம்.... கோலம்தான் போட்டாச்சே. இனிமேல் அரை மணி போய்ப் படுத்துக்க...."

"ஊகூம்... தூக்கம் கலைஞ்சிடுச்சு. முன்னை மாதிரியானு உங்ககூட ஆத்தங்கரை வரை நடந்து வருவேன்."

உண்மைதான்... போன மாதம்வரை, தாவணி என்னும் அநாவசியத் தடை பிரிக்கும்வரை, விடியற்காலையில் இருவரும் சேர்ந்தேதான் நடப்பார்கள். பித்தாகுரஸ் தியரம் முதல் பாரதி பாட்டுவரை எல்லா விஷயமும் அலசுவார்கள்.

ஆறு வயதில், அப்பா பின் நடக்க எல்.ஓ.என்.டீ.ஓ.என். லண்டன் என்று உரக்கக் கத்தியபடி அவள் குதித்து முன்னே நடப்பாள்.

எட்டு வயதில் சில்லாக்குத் தூக்கி எறிந்து, அதை நொண்டித் தள்ளி முன்னேறுவாள். "ரைட்டா, ரைட்டா" என்று கண் மூடி நடப்பாள்.

பத்து வயதில் அப்பா, ஆற்று மணற் படுக்கையில் ஆரோகணம், அவரோகணம் சொல்லித் தந்தார். "அம்மா புவனேஸ்வரி, நம்ம குடும்பங்களிலே ஆண் பிள்ளைகளுக்குத்தான் சங்கீத ஞானம், சாரீர வளம் எல்லாமே.... ஓதுவார்கள் மேடை ஏறிப் பாடறதில்லை. ஆனா, எங்க சங்கீதம் எல்லாம்



அம்பிகைக்குத்தான் அர்ப்பணம்....''

''நீங்க கோவில் ஓதுவார் என்றால் ஏன் கோயில்ல பாடறதில்லே?''

''சின்ன வயசிலே பாடிட்டுத்தான் இருந்தேன். உங்க தாத்தாவுக்கு நாங்க எட்டு பசங்க. அதிலே நான் ஏழாவது.... அத்தனை பேரும் பாடறதுன்னு, கோவிலுக்கு எங்கே போறது? ஓதுவார்களுக்குக் கோவில் மான்யம் தரணும், நெல்லு தரணும். நம்ம கோவில்களிலெல்லாம் வர வர, சாமிக்கே சாப்பாட்டுக்கு வழியில்லே. உங்க மூத்த பெரியப்பாக்களிலே ஒருத்தர் நம்ம ஊர் லோகேச்வரி கோவிலிலும், மற்றவர் அடுத்த ஊர் புவனேஸ்வரி கோவிலிலும்ஓதுவாராக இருக்காங்க.நான் பொழைப்புக்கு வழி தேடிக் காலேஜுக்குப் போய்ப் படிச்சேன்'. டீச்சர் ட்ரெயினிங் எடுத்தேன். ஆனாலும், சின்ன வயசிலே

மனப்பாடம்செய்த தேவாரமும், திருவாசகமும், ஸம்ஸ்க்ருதஸ்லோகங்களும்மறக்குமா என்ன? சங்கீத அப்பியாசமும் கொஞ்சமாகவா செய்திருக்கோம்? உன் குரலைக் கேட்கிறபோதுதான் உனக்காவது அந்தச் சொல்லித் தரலாம்னு நெனைச்சேன்.''

''அப்பா நான் நல்லாப் பாட்டுப் பாடம் பண்ணினா கோவில் ஓதுவாராக முடியுமா? பெரியப்பா பசங்கதான் பட்டணத்துக்குப் போயிட்டாங்களே....''

சுந்தரம் சிரித்தார். ''அது என்னவோம்மா, பொம்பளையை நாட்டை ஆள அனுமதிச்சும், கோவில்லே பூஜை செய்யவும், மறை ஓதவும் நாம் இன்னும் அனுமதிக்கல்லே. நீ பாடு. கோவில்ல அம்பாள் முன்னாடி பாடு. திருப்பள்ளி எழுச்சி பாடறவங்கதான் பாடக் கத்துக்கணும்னு அவசியமில்லே.''

''சரிப்பா.... பாவாடையைத் தொடை வரை வழித்துக் கொண்டு சப்பணமிட்டு உட்கார்ந்தாள். சுந்தரம் ஸ, பா, ஸ என்று சுருதிப் பெட்டி இல்லாமலே துவங்கினார்.

பாட்டு தொடங்கிய முப்பதாவது நாள், 'ஏரிக் கரையின் மேலே போறவளே, பெண் மயிலே' என்று டீக்கடை ரேடியோ அலறிய போது, ''ஏன்பா இது ஆரபி ராகம்தானே?'' என்று புவனா கேட்டபோது, சுந்தரம் திகைத்து நின்றுவிட்டார்.

ஆண்கள் படித்துறையில் அவர் குளிக்கும்போது புவனா மரத்தடியில் உட்கார்ந்திருப்பாள். திடீரென ''அப்பா இது சட்ஜமமா?'' என்று கத்துவாள், இல்லாவிட்டால் ஆங்கிலத்தில் ஏதாவது பதம் சொல்லி அர்த்தம் கேட்பாள் அல்லது லுஸாகா ஆப்பிரிக்காவில் எங்கே இருக்கிறது என்று குரல் எழுப்புவாள். சுந்தரமும் பொறுமையாகப் பதில் கூறுவார்.

திரும்பும்போது பிழிந்த துணிகளை அவள் தான் ஏந்தி வருவாள்... முந்தைய தினம் பள்ளியில் நடந்த விஷயங்களை ஒன்றுவிடாமல் சொல்லுவாள். கமலஹாசன் இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டது சரியா என்று விசாரிப்பாள். மயில் இறக்கை நிஜமாகவே குட்டி போடுமா என்று கேட்பாள்.

அவரும் யோசித்துப் பார்க்கிறார். 'பெரியவள் லோகேசுவரியும்தான் வளர்ந்தாள். பன்னிரண்டாவது முடித்துவிட்டு இப்போது வீட்டோடு இருக்கிறாள். அவளுக்கு இருந்திராத ஆசையும், பிணைப்பும் ஆர்வமும் ஐந்து வயது சிறியவளான இவளுக்கு மட்டும் ஏன் வந்தது? அப்பா என்ற பயம் இல்லாத பாசம், நட்பு, மரியாதை....

அத்தனைக்கும் கடந்த ஒரு மாதமாக முற்றுப் புள்ளி. ''ஞானம், பெண்கள் பருவமடையறதுங்கறது இயற்கையான ஒரு விஷயம். அதை ஊரைக் கூட்டித் தெரிவிச்சு வெளிச்சம் போடறது அனாவசியம். புவனா இன்னும் குழந்தை. இந்தச் சடங்கெல்லாம் வேண்டாம்....'' அவரும் எடுத்துச் சொல்லிப் பார்த்தார்.

''நல்லாயிருக்கு. லோகுக்குச் சடங்கு செய்யறபோது சும்மாப் பார்த்துட்டுத்தானே இருந்தீங்க. இப்போ என்ன புதிசாப் போச்சு. இதுகூடச் செய்யல்லேன்னா, உங்க அக்காக்காரிங்களே வம்பு பேசுவாங்க....''

ஒல்லியான புவனாவின் உடம்பில் தாவணி சுற்றி அவளை நாள் கணக்கில் தென்னங்கீற்றுடன் ஒதுக்கி வைத்து, ஊர் கூட்டியதை அவரால் ஏற்கவேமுடியவில்லை. அதோடு நின்னாலும் தேவலையே....

கருக்கலில் தந்தையுடன் கிளம்பிய வளை ஞானம் ஆக்ரோஷத்துடன் தடுத்தாள். ''நல்லாயிருக்கு. நம்ம ஊரில் நல்ல குடும்பத்துப் பொம்பளைங்க படித்துறையிலே குளிக்கிறதே பழக்கமில்லே. சடங்கெடுத்த பெண் ஆண்பிள்ளைப் படித்துறைக்குக் காவல் காக்கப் போறியா... போடீ உள்ளே....''

புவனா தந்தையைப் பரிதாபமாகப் பார்த்தாள். அவர்கள் உலகத்தின் மிக இனிமையான பாகம் அபகரிக்கப்பட்டது இருவருக்கும் புரிந்தது. மனம் திறந்த பேச்சு, விஞ்ஞான விளக்கம், சங்கீத சாதகம் எல்லாமே முடிந்து போய்விட்டது. அப்பாவானாலும் இனிமேல் ஆண்தான். கதவிடுக்கில் நின்று வேற்று மனிதன் போல் நிதானமாகத்தான் பேச வேண்டும்.

''அம்மா சொல்றதைக் கேட்டு உள்ளே போம்மா....'' மெல்ல அவள் முடியை வருடினார். அந்த இதமே அவள் நெஞ்சை அடைத்தது. கண்களில் நீர் தளும்பியது. ''ட்யூஷன், பாட்டெல்லாம் இனிமேல் வீட்டிலேயே வச்சிக்கலாம்.''

தனியே ஆற்றங்கரைக்குச் செல்லும் அப்பாவின் உருவம் புள்ளியாக மறையும் வரை புவனா பார்த்தபடி நின்றாள்.

தினமும் அவர் பார்வையிலிருந்து மறைந்த பிறகுதான் பெருமூச்சுடன் திரும்பி உள்ளே நடக்கிறாள். பள்ளிப்பாடங்களில் சந்தேகமிருந்தால் விளக்கு வைத்த பின், முற்றத்தில் அமர்ந்து அவர் சொல்லித் தருகிறார். ஆனால் அந்த இளங்காலையின் சுகந்தம், தென்றலின் சுகம், காட்சியின் புல்லரிப்பு எல்லாம் தூரத்து விஷயமாயிற்று.

மெல்ல பூபாள ராகத்தை முணுமுணுத்தபடி அவள் உள்ளே திரும்பும்போது, அம்மா எழுந்திருந்தாள். அதன் பிறகு காலைப் பொழுதின் வழக்கமான வேலைகள் துரித கதியில் துவங்கின. லோகேஸ்வரி அரிசி களைந்து அம்மா உலை ஏற்றினாள். புவனா கிணற்றில் தண்ணீர் சேந்தி பாத்திரங்களில் நிரப்பினாள். அவசரமாகக் குளித்துவிட்டுப் பள்ளிச் சீருடை அணிந்து கொண்டாள். முந்தைய நாள் செய்திருந்த வீட்டு பாடத்தைச் சரி பார்த்தாள். அம்மாவுக்கு மசாலா அரைத்துத் தந்தாள். சுந்தரம் ஆற்றங் கரையில் துவைத்துப் பிழிந்து எடுத்து வந்திருந்த துணிகளை உதறி உலர்த்தினாள்.

அவசர அவசரமாகத் தனக்கும் தந்தைக்



ஓர் ஆணின் மனத்தைவிட ஒரு பெண்ணின் மனம் சுத்தமாக இருக்கிறது. அவள் அதை அடிக்கடி மாற்றிக் கொள்வதால்.

— ஆலிவர் ஹெர்ஃபோர்ட்



கும் தட்டு வைக்கும்போது வாசலில் குரல் கேட்டது.

''ஸார்.... ஸார்....''

சுந்தரம்எட்டிப்பார்த்தார்.பரமசிவமும், தமிழ்ச் செல்வனும் நின்றிருந்தார்கள். வெள்ளை வேஷ்டி பளிச்சிட்டதிலிருந்தும், தோள் துண்டு கரை தெரிய மடிக்கப்பட்டுத் தொங்கியதிலிருந்தும் விஷயம் சொல்லாமலே புரிந்தது. ஏதோ கட்சிக் கூட்டம். வெளியூரிலிருந்து பெரிய புள்ளி வருகிறார். இந்தச் சமயங்களில் மட்டுமே இந்தக் கட்சிக்காரர்களுக்கு 'மடித்துக் கட்டிய லுங்கியிலிருந்தும் முண்டா பனியனிலிருந்தும் விடுதலை கிடைக்கும். செய்யும் அதிகார ஆட்சிக்கு'மாறாக, அந்தத் தலைவருக்கு வணங்கி வணங்கிக் கூழை கும்பிடு போடுவார்கள்.

''என்ன தம்பி?'' தமிழ்ச் செல்வனைப் பார்க்கும்போதே நான்காண்டுகளுக்குமுன் அவன் பள்ளியிலிருந்து கட்டாயமாகவிலக்கப்பட நேர்ந்த சம்பவம் நினைவுக்கு வந்தது. இன்று அவன் வளரும் அரசியல் தலைவன்.

''வாத்யாரையா, ரெண்டு மணிக்குப் பக்கத்து ஊரிலே வறட்சித் திட்டங்களைப் பார்வையிட மந்திரி வரார். ப்ரேயர் பாட பாப்பா வரணும்...''

''பாப்பாவா....'' மெல்ல இழுத்தார். ''இனிமே அவ வரமுடியுமா... தெரியல்லையே...''

ஞானம் அவசரமாக வெளியே வந்தாள். சமையலறைக்'கரி பூசியிருந்த கையைக் கூப்பி வணங்கினாள். ''வாங்க.. வாங்க. பாப்பாவைத் தயார் பண்ணிடறேங்க. எத்தனை மணிக்கு வண்டி அனுப்பறீங்க?''

''ஞானம் அவளுக்கு அரைப் பரீட்சைக்கு அதிகம் நாளில்லை.'' — சுந்தரம் சொன்னார்.

ஞானம் அவரைக் கண்களை விழித்து உருட்டிப் பார்த்தாள். மறுவினாடியே, தாழ்ந்த பார்வையுடன் வந்தவரிடம், ''பரவாயில்லைங்க. படிப்பு, பரீட்சை எல்லாம் எங்கே போவுது. மந்திரியைப் பார்க்கிற வாய்ப்புக் கிடைக்குமா?'' என்றாள்.

''சரிங்க. பதினொரு மணிக்கு வண்டி வரும். நாலைஞ்சு பாட்டு தயார் பண்ணிக்கச் சொல்லுங்க. 'தனிஒருவனுக்குஉணவில்லை' அப்படின்னு ஏதோ பாரதி பாடியிருக்காரே. அந்தப் பாட்டையும் படிச்சிட்டு வரட்டும். வரட்சி நிவாரணத்துக்குப் பொருந்தும். நல்லா 'பளிச்'சுன்னு ட்ரெஸ் போட்டுக் கூட்டியாங்க. வரேங்கம்மா...''

சுந்தரத்தைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் நகர்ந்தார்கள்.

''ஞானம்....''

என்னவாம் என்பதுபோல் பார்த்தாள்.

''புவனாவை இனிமேலும் பளிச்சுன்னு ட்ரெஸ் போட்டு மேடை மேடையா ஏத்தி, கடவுள் நம்பிக்கையில்லாத கட்சிக்காரங்க கூட்டத்துக்குக் கடவுள் வணக்கம் பாட அனுமதிக்கணுமா?''

''ஆமாம்.... கையா நூறு ரூபாயும், கார் சவாரியும் பெரிய மனுஷங்க பார்வையும் கிடைக்கும்னா அனுமதிச்சுத்தான் ஆகணும். ஞானம் அலட்சியமாகச் சொன்னாள். ''இதிலெல்லாம் நீங்க தலையிடாதீங்க...''

சுந்தரம் பெருமூச்சுடன் தளர்ந்து திண்ணையில் உட்கார்ந்தார்.

(தொடரும்)



உழைப்பை நான் மிகவும் விரும்புகிறேன். அது என்னைக் கவர்கிறது; பிறர் உழைப்பதை மணிக் கணக்கில் கூட உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்கலாம்.


— ஜெரோம் கே. ஜெரோம்



அவன்: "டாக்டர் தினம் என்னை ஆப்பிள் சாப்பிடச் சொல்லியிருக்கார் ஸார்!"

மானேஜர்: "அதுக்காகக் காஷ்மீர் பிராஞ்சுக்கு உடனே டிரான்ஸ்ஃபர் கேட்கிறதா?"

— உ. ராஜாஜி





ஒருத்தி: "நீ மட்டும் குறைந்த விலையில் இவ்வளவு அழகான துணிமணி வாங்கி இருக்கிறியே, எப்படி?"

மற்றொருத்தி: "நான் ரேடியோ விளம்பரத்தைத்தான் கேட்கிறதில்லையே!"


— சடுவை கோபால்சாமி

ஸாரி! தீபாவளி ஜோக்ஸ் இல்லை...

நீதிபதி: "உன் மீது பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் திருடியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது, நீ எப்படி ஐயாயிரம் ரூபாய் துணிகள்தான் என்கிறாய்?"

திருடன்: "அம்பது சதம் ரிபேட்டுன்னு போட்டிருந்தாங்களே!"

— கதிர்வேல்



பத்திரிகை ஆசிரியர்: "சிறுகதை கொண்டு வந்திருக்கிறதா சொன்னீங்களே! எடுங்க பார்ப்போம்!"

எழுத்தாளர்: "வெயிட் பண்ணுங்க சார்! இப்பத்தான் லாரியிலிருந்து ஆளுங்க இறக்கிக்கிட்டு இருக்காங்க!"

— மணியன் தர்மலிங்கம்



''தலைவரே, அன்னதானம்'னு அடிக்கடி கட்சிக் கணக்கில் செலவு எழுதியிருக்கீங்களே. என்னங்க அது?''

''புரியலே? என் சின்ன வீடு பேரு அன்னம்'னு தெரியாதா உனக்கு?''

— என். வி. ரமணி.

''என்னய்யா இது... மெடிக்கல் சர்ட்டிபிகேட்டுக்குக் கீழே 'கைநாட்டு' வைச்சிருக்கு?''

''இந்தத் தடவை பாட்டி வைத்தியம் செஞ்சுக்கிட்டேன் சார்!''

— ஆர். ஸ்ரீவெங்கடேஷ்



ஒரு மந்திரி: நமது மன்னனைப் புகழ்ந்து பாட இப்போது எந்தப் புலவரும் வருவதில்லையே... ஏன்?

மற்றொரு மந்திரி: கஜானா காலியான விஷயம் அவர்களுக்குத் தெரிந்திருக்கும்...''

— ராஜேஸ்வரி.



''அரசியல் வாழ்க்கை மேடும் பள்ளமும் உடையது' ன்னு நம்ம தலைவர் சொன்னாரே, எப்படி இந்த ஞானோதயம் ஏற்பட்டது?''

''அவர் பதவிக்கு வரும் முன் வறுமைப் பள்ளத்தில் இருந்தார்; இப்போ பணமேட்டில் இருக்கிறாரே, அதுதான்!''

— கலைப்பிரியன்

9 பேர் சொல்லும் ஹ...ஹ்...ஹ...



பாண்டியராஜன்

'ஆண் பாவம்' படத்துல கொல்லங்குடி கருப்பாயியை நடிக்க வைத்ததே ஒரு பெரியநகைச்சுவைதான். கள்ளங்கபடமில்லாத கிராமப்புறப் பெண்மணி. ஷூட்டிங் ஆரம்பிக்கும் போது கருப்பாயி பாட்டியிடம், 'இத பார் பாட்டி; நான் எப்படிச் செய்யறேனோ, அதுமாதிரியே செய்யணும்' என்று சொல்ல, பாட்டியும் சரி; சரி என்று தலையை ஆட்டினார். காமிரா, சவுண்ட், லைட்டிங் எல்லாம் சரி செய்துவிட்டு 'சைலன்ஸ்' என்று சொன்னேன். அப்படிச் சொன்னதுதான் தாமதம் பாட்டியும் 'சைலன்ஸ்' என்று உரத்த குரலில் சொல்லவே, எங்களுக்கு குபீர்ச் சிரிப்பு.

'படத்தில் ஒரு கட்டத்தில் நான் பாட்டியிடம் பேச வேண்டிய ஒரு வசனம்: 'என்னய்யா இது! எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க மாட்டாங்களா? போற போக்கைப் பார்த்தால் பாட்டியைத்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் போலிருக்கிறது.'

இந்த வசனத்தை ரிகர்சலில் நான் பாட்டியைப் பார்த்துச் சொல்லவும், பாட்டி கோபித்துக் கொண்டு செட்டிற்கு வெளியே சென்று விட்டார். பாட்டி, பாட்டி என்று கூப்பிட்டுக் கொண்டு பின்னால் போய் ''ஏன் கோபித்துக் கொள்கிறாய்?'' என்று கேட்டபோது, ''பின்னே என்னப்பா; இந்த மாதிரி வசனம் பேசறே; எங்கவீட்டுக்காரரு என்னை வீட்டை விட்டே துரத்திடுவார்''ன்னு வருத்தப்பட ஆரம்பித்துவிட்டார். அப்புறம் பாட்டியைத் தாஜா பண்ணிக் காட்சியை எடுப்பதற்குள் போதும், போதும் என்றாகி விட்டது. ஆண் பாவம் படத்தில் நடிக்கும் போது அப்படி அப்பாவியாக இருந்த கொல்லங்குடி பாட்டி இப்போது என்னடாவென்றால், 'என்ன தம்பி; ஒரு வருடத்துக்கு ஒரு படம் எடுத்தா எப்படி நாங்க பிழைக்கிறது?' என்று ஒரு தொழில் நடிகை போல் சொல்லும் போது நான் அசடு வழிய வேண்டியுள்ளது.



சுந்தர்குமார் (உபந்யாஸகர்)

'க்ருஷ்ண கர்ணாம்ருதம்' என்னும் புராணத்திலிருந்து ஒரு ஹாஸ்யமான கட்டம். இது மிதமான ஹாஸ்ய ரகம்..

இரண்டு அல்லது மூன்று வயது கிருஷ்ணன் அடிக்கடி பால் கேட்டுக் கொண்டே இருந்ததால், யசோதை பாலுக்கு 'ரேஷன்' விதித்துவிட்டாள் அப்போது, கிருஷ்ணன்,

''அம்மா! எனக்கு ஒரு கிண்ணம் வேணும்'' என்ருன்.

''எதற்கு?'' — யசோதா.

''பின்னே! அதில்தானே நான் நீ கொடுக்கும் பாலை விட்டுக் குடிக்க முடியும்?'' —

''ஓஹோ! சரி. பால் குடிக்கும் போது கிண்ணம் தருகிறேன்!'' — சமாளித்து விட்டாள்.

''எப்போது தருவாய்?'' — விடவில்லை கிருஷ்ணன்.

''ராத்திரி தருகிறேன்!''

''ராத்திரி எப்போ வரும்?''

''இருட்டானல் வரும்.''

''இருட்டு எப்படி வரும்?'' — ம்ஹூம். விடுவதாகவேயில்லை, அவன்.

யசோதையும் பொறுமையாக, ''மகனே! நீ கண்ணைத் திறந்து வைத்திருந்தாலும், எதிரே இருப்பது எதுவுமே தெரியாது'' என்ருள்.

உடனே கிருஷ்ணன், ஒரு கையால் கெட்டியாக அவள் 'முந்தானையைப் பிடித்துக் கொண்டு இன்னொரு கையால், கண்களை மூடிக் கொண்டான்.

''அம்மா! எனக்கு இருட்டு வந்துடுத்து! ராத்திரியாயிடுத்து. எதிரிலே யாருமே தெரியல; என் பாலைக் கொண்டா!'' என்ருன்.

பாலகனின் சாதுர்யமான மழலையைக் கேட்டுக் குபீரென்று சிரித்தாள் யசோதை. நயமான நகைச்சுவை அவள் மனத்தை உருக்கவும் செய்தது. ரேஷனை ரத்து செய்தாள். அவன் கேட்டபோதெல்லாம் பால் கொடுத்தாள்.



பாரதிராஜா

மண் வாசனை படத்தில் ஒரு காட்சியை நினைத்தால் எனக்குச் சிரிப்பு வரும். எழுதிப் படிக்கும் போது சிரிப்பு வருமா என்று தெரியாது. ஆனல் படத்தில் பார்க்கும் போது ரசிகர்கள் சிரித்தார்கள். அந்தக் காட்சி...

மூக்கையா தேவர் (விஜயன்) 'என் மாட்டை அடக்கறவனுக்கு என் பெண்ணைக் கட்டித் தருவேன்'னு சவால் விடுவார். அவரது சவாலை ஏற்று ஒருவன் மாட்டை அடக்கி விடுவான். மூக்கையா தேவருக்கு வேறு வழி இல்லை. தமது பெண்ணைக் கல்யாணம் செய்து தர வேண்டிய நிலை. பஞ்சாயத்து கூடும். பஞ்சாயத்து நடக்கும்போது ஜனகராஜ் எழுந்து நின்று ஏதோ சொல்ல முயற்சி செய்வார். ஆனல் அவரைப் பேச அனுமதிக்க மாட்டார்கள். மூக்கையா தேவரின் பெண்டாட்டி வெளியே வந்து 'சரி, என் பெண்ணை (ரேவதி)க் கல்யாணம் செஞ்சுக்கோ' என்று சொன்னதும் பஞ்சாயத்து கலைந்து விடும். ஜனகராஜ் தனியாய்ப் புலம்புவார். 'என்னய்யா புலம்பறே' என்று இருவர் அவரைக் கேட்டதும், 'பின்னே என்னய்யா இது. பஞ்சாயத்துல என்னைப் பேசவே விடல. பேச விட்டிருந்தா மூக்கையா தேவருக்கு ஓர் அட்வைஸ் பண்ணியிருப்பேன்.'

'அப்படி என்னய்யா நீ சொல்லித் தந்திருப்பே?''

''அது ஒண்ணுமில்லேய்யா. மூக்கையா தேவர் சம்சாரம் பஞ்சாயத்துல 'முத்துப் பேச்சி (ரேவதி) என் பொண்ணு இல்லே' ன்னு சொல்லிட்டா விஷயமே மாறிடும். கல்யாணம் செய்து தர வேண்டியது இல்லே, பாரு...'' என்றதும் ''டேய், நல்ல ஐடியாதான்'' என்று ஜனகராஜைத் தட்டிக் கொடுப்பார்கள். இந்தக் காட்சியில் வசனத்தைச் சொல்லும் விதத்திலும், முக பாவத்தைக் காண்பிக்கும் விதத்திலும் ஜனகராஜ் தூள் பண்ணிவிடுவார். தியேட்டரே சிரிப்பில் ஆழ்ந்து விடும்.

சே. முருகன் (இணை செயலாளர் இந்தியன் ஒலிம்பிக்ஸ் சங்கம்)

இப்போதுதான் சியோலிலிருந்து திரும்பி வந்தேன். கொரியர்கள் எல்லா விஷயங்களிலும் அமெரிக்கர்களையும் மிஞ்சி விட்டனர். ஜோக் அடிப்பது உட்பட்தான். ஒரு முறை ஹோட்டல் ரிஸப்ஷனில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். என்னுடன் கொரிய வீரர்கள், ரெஃப்ரீக்கள், கோச்சுகள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு போட்டியில் கொரியப் பெண்மணி வெற்றி பெற்று விட்டுத் தங்கப் பதக்கத்துடன் ஹோட்டலை நோக்கி ஓடி வரவும் அதைப் பார்த்த அவளது நண்பர்(?) ஒருவர் உள்ளிருந்து வெகுவேகமாக அவளை





ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் உண்மையாக உழைப்பதால் நீங்கள் முதலாளி ஆகி, பன்னிரண்டு மணி நேரம் உழைக்க ஆரம்பித்துவிடுவீர்கள்!

— ராபர்ட் ஃப்ராஸ்ட்



நோக்கி ஓடவும் இருவரும் கண்ணாடித் தடுப்புக்கு அருகில் நெருங்கி வந்ததும் முத்தமிட்டுக் கொண்டார்கள். 'என்னடா இது, கண்ணாடி நடுவில் இருக்கிறது; இவர்கள் பாட்டுக்கு முத்தம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களே என்று நாங்கள் வியந்து கொண்டிருந்த போது அரை நிமிடம் அவர்கள் அப்படியே முத்தமிட்டுக் கொண்டு இருந்தார்கள். பின்னர் இன்னொரு கொரியர் போய் இடையில் கண்ணாடி இருப்பதை ஞாபகப்படுத்தவே, 'ஓ, கண்ணாடி?' 'என்று சொல்லிவிட்டு, கதவைத் திறந்து கொண்டு போய் மறுபுறம் முத்தத்தைத் தொடர்ந்தனர்!



ராதிகா

சமீபத்தில் நான் படித்த ஜோக் இது: இந்தி தெரியாத பட்டிக்காட்டான் ஒருவன் தில்லிக்கு முதன் முறையாகச் சென்றானாம். அப்போது, முதலில் குதுப்மினாருக்குப் போனானாம். அதன் வாசலில் ஒரு பிச்சைக்காரனிடம் போய், ''இதைக் கட்டியது யார்?'' என்றான். அவன் இந்தியில் ''பதா நஹி சாஹிப்'' (தெரியாது சார்) என்றான். ''ஓஹோ! இவர் பெரிய ஆள் போலும்'' என்றபடி, அடுத்தடுத்து, பிர்லா மந்திர், ரெட் ஃபோர்ட் என்று எல்லா இடத்துக்கும் போய், இதேபோல் பிச்சைக்காரர்களுக்கு பத்து பைசா கொடுத்து, அதே கேள்வியைக் கேட்டு அதே பதிலைப் பெற்றுக் கொண்டான். கடைசியாக, மிகப் பெரிதான ஒரு மாளிகை போன்ற வீட்டைப் பார்த்தான்.

அப்போதும், ஒரு பிச்சைக்காரனிடம், ''இது யார் வீடு?'' என்றான். அவனும் வழக்கம் போல, ''பதா நஹி சாஹிப்'' என்றதுதான் தாமதம், பரபரவென்று அந்த வீட்டின் கூர்க்காவிடம் சென்று,

''அரே! நான் உன் சாஹிப்பை இன்று கட்டாயம் பார்க்க வேண்டும். இன்று சாயங்காலம் ஆறு மணிக்கு வருவதாக அவரிடம் சொல்'' என்றான்.

சொன்னபடியே ஆறு மணிக்கு அந்த ரோடுக்கு வந்த போது, ஒரு சவ ஊர்வலம் எதிர்ப்பட்டது. அப்போதும் ஒரு பிச்சைக்காரனிடம் சென்று, ''செத்துப் போனது யார்?'' என்று கேட்டதற்கு, அதே வழக்கமான, ''பதா நஹி சாஹிப்'' என்ற பதில் வந்தது.

உடனே அங்கேயே 'ஓ'வென்று அழுதே விட்டான், அந்தப் பட்டிக்காட்டான். ''ஹா! உங்களைப் பார்க்கணும்னு எவ்வளவு ஆசையா வந்தேன். ஐயோ! அதுக்குள்ளே போய்ட்டீங்களே'' என்று 'ஓ'வென்று கதறி அழுதானாம்.

கிரேஸி மோகன்

ஒரு முறை எங்கள் நாடகக் குழு பம்பாய் செல்லும் போது, தவிர்க்க முடியாத காரணத்தால் உன்னி கிருஷ்ணன் என்பவர் வர முடியாமல் போனதால் எங்கள் காஸ்ட்யூம் பையன் மாலி என்ற மகாலிங்கம், உன்னிகிருஷ்ணன் என்ற பெயரில் பயணம் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. மாலியிடம் பல முறை செக்கிங் இன்ஸ்பெக்டர் பெயரைக் கேட்டால் உன்னி



கிருஷ்ணன் என்று சொல்ல வேண்டும் என்று சொல்லியிருந்தோம். வண்டி கிளம்பிப் போய்க் கொண்டிருந்தது. எங்கள் குழுவில் மாலி உட்படப் பெரும்பாலோர் தூங்கி விட்டார்கள்.

திடீரென்று செக்கிங். எல்லோர் பெயரையும் கேட்டுக் கொண்டு டிக்கெட்டை செக் செய்து கொண்டு வந்தார்கள். எங்கள் குழுவில் எல்லோர் டிக்கெட்டையும் செக் செய்தாகி விட்டது. மாலி மட்டும்தான் பாக்கி. செக்கிங் இன்ஸ்பெக்டர் மாலியைத் தட்டி எழுப்பினார். இனி அவர்களுக்குள் நடந்த உரையாடல்.

செ. இ.: உன் பெயர்?

மாலி: (மலங்க மலங்க விழித்தபடி) தெரியாது.

செ. இ. என்னது? பெயர் தெரியாதா?

மாலி: ஆமாம் ஸார்! எப்போ பொறந்தது! இப்போ நடுராத்திரியிலே தட்டி எழுப்பிக் கேட்டா எப்படி? ஞாபகப் படுத்தித்தான் சொல்லணும்.

இதற்குள் இந்த உரையாடலைக் கேட்ட



"மாப்பிள்ளே நீங்க அரசியல்வாதியா இருக்கலாம். அதுக்காக இப்படியா எடைக்கு எடை பட்டாசு கேட்கிறது?"
— கிளை ஆ. கதிர்வேல்



நாங்கள் அவன் 'உன்னி கிருஷ்ணன்' என்று பெயரைச் சொல்ல வேண்டும் என்பதற்காக கிருஷ்ணன் புல்லாங்குழல் வாசிப்பது போல் அபிநயம்பிடித்துக் காண்பித்தோம். உடனே மாலி செக்கிங் இன்ஸ்பெக்டரிடம் 'என் பெயர் புல்லாங்குழல்' என்று சொல்லவும், எங்களுக்கு குபீர்ச் சிரிப்பு வர, கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டோம். இதற்குள் செ. இ. ''என்ன, புல்லாங்குழல் வாசிக்கத் தெரியுமா?'' என்று கேட்க அவரும் ஜோவியலாக ஆகி விட்டார் என்பதைப் புரிந்து கொண்டோம். எங்கள் நிலைமையை விளக்கியதும் புரிந்து கொண்டு போகும் போது, ''வித்தவுட் டிக்கெட் போகிறவனைத்தான் பார்த்திருக்கேன், 'வித்தவுட் நேம்' கூடப் போகறுங்களே' என்று விட்டடித்து விட்டுப் போனார். செ. இ. போனவுடன் மாலிக்கு நல்ல அர்ச்சனை. இதற்குப் பரிகாரமாகத்தானோ என்னவோ, பம்பாயிலிருந்து திரும்பி வரும் போது சம்பந்தம் இல்லாதவர்களிடத்தில் கூட, 'என் பெயர் உன்னிகிருஷ்ணன்' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.



டி. டி. வாசு

ஃபாதர் மர்ஃபி பல தலைமுறை மாணவர்களை உருவாக்கிய பேராசிரியர். அவர் ஒரு முறை திருத்திய விடைத்தாள்களை வகுப்பில் மாணவர்களிடம் திருப்பித் தந்து கொண்டிருந்தார். அப்போது ஒரு மாணவனை அழைத்து, அவன் விடைத் தாளை நீட்டியபடி சொன்னார்: ''ஷேக்ஸ்பியர் நாடகத்தில் இடம் சுட்டிப் பொருள் கூறும் விடையை நான்கு பக்கங்களுக்கு அற்புதமான ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறாய். ஆனால், நீ சரியான நாடகத்தைத்தான் படிக்கவில்லை... ஷேக்ஸ்பியரே இந்தக் கேள்விக்கு விடை எழுதினால் கூட நாடகத்தைப் படிக்காமல் நான்கு பக்கங்கள் எழுத மாட்டார்...'' இப்படிச் சொல்லிவிட்டு, ஃபாதர் மர்ஃபி சர்வ சாதாரணமாக அடுத்த மாணவனின் பெயரை அழைக்க, வகுப்பறையே சிரிப்பில் அதிர்ந்தது!



ரகுமான்கான்

சட்டசபையில் ரோஷமான பேச்சுக்களுக்கு இடையில் ஜோக்குகளுக்குப் பஞ்சமில்லை. ராசாராம் சபாநாயகராக இருக்கும் போது நகைச்சுவை அதிகமாக இருக்கும். ஒருமுறை குமரி அனந்தன் பேசிக் கொண்டிருந்தார். சபை நடந்த நேரமோ மாலை நேரம். பேசுவது இலக்கியச் செல்வராயிற்றே. பால்வளத் துறை மான்யக் கோரிக்கை பற்றிப் பேசிக் கொண்டிருந்ததால் கிருஷ்ணரைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். ''கண்ணன் குழலூதுகின்ற மாலை நேரம். மாடுகள் வீடு திரும்பிக் கொண்டிருக்கின்றன...'' என்று குமரி அனந்தன் பேசிக் கொண்டிருந்த போதே, இடையில் ராசாராம் புகுந்து, ''ஆமாம் அனந்தன், நேரம் மாலை நேரம்தான். இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியுள்ளது. சீக்கிரம் மாட்டை ஓட்டிக் கொண்டு செல்லுங்கள்'' என்று சொன்னதும் சட்டசபையே சிரிப்பில் மூழ்கியது.

சோ

நகைச்சுவையின் எதிரில், திமிர் சரணாகதி அடைந்த சம்பவம் இது...

ஒரு நாடகாசிரியர், நடிகர் — எழுதிய முதல் நாடகம் வெற்றிகரமாகப் பல முறை நடத்தப்பட்டது. ஒருமுறை, அப்போதைய சென்னை போலீஸ் கமிஷனர் பார்த்தசாரதி ஐயங்கார் அந்த நாடகத்திற்குத் தலைமை தாங்கினார். நாடகத்தின் இடைவேளையில், மேடையில் அவர் பேசும் போது, ''இந்த நாடகத்தில், போலீஸ்காரர்களை மிகவும் கிண்டல் செய்திருக்கிறார்கள். நாடகம் என்பதற்காகவும்,

மழை பெய்யாத சமயத்தில் உங்களிடம் குடையைக் கொடுத்துவிட்டு மழை பெய்கிறபோது அதைத் திருப்பிக் கேட்கும் நிறுவனம்தான் வங்கி.

— ராபர்ட் ஃப்ராஸ்ட்





நகைச்சுவை என்பதற்காகவும் என்ன வேண்டுமானாலும் எழுதி விடுவதா? இந்த நாடகத்தில் வருவது போன்ற மடத்தனமான போலீஸ்காரர்களை என் சர்வீஸில் நான் பார்த்ததே கிடையாது. ரொம்ப அபத்தமான கற்பனை'' என்று பேசினார்.

நாடகாசிரியர், இளைஞர். முதல் நாடகம். அவருக்குப் பொத்துக் கொண்டு வந்தது ரோஷம். எழுந்து மைக்கைப் பிடித்துக் கொண்டு பதில் பேசினார். ''என்னுடைய நாடகத்தை நான் போலீஸ் கமிஷனருக்காக எழுதவில்லை. ரஸிகர்களுக்காகத்தான் எழுதியிருக்கிறேன். ரஸிகர்களான நீங்கள் ரஸிக்கிறீர்கள். ஆனால் கமிஷனரால் ரஸிக்க முடியவில்லை. அதுபற்றி எனக்குக் கவலையில்லை. ஐ டோன்ட் கேர் எபௌட் ஹிஸ் ஒபீனியன்ஸ்'' — என்று கூறி அமர்ந்தார் நாடகாசிரியர்.

கமிஷனர் பதில் பேசவில்லை.. அதன் பிறகு ஒரு சில வருடங்கள் கழித்து. அதே நாடகாசிரியரின் மற்றொரு நாடகம் நடந்தது. அதேபார்த்தசாரதி ஐயங்கார் தலைமை!

பேசுவதற்கு மேடையேறிய பார்த்தசாரதி ஐயங்கார் புன்சிரிப்புடன் ஆரம்பித்தார். ''இந்த நாடகத்தைப் பற்றி நிறைய பேச விரும்புகிறேன். ஆனால் என்ன பயன்? திஸ் ரைட்டர் (நாடகாசிரியரைச் சுட்டிக் காண்பித்து) டஸ் நாட் கேர் எபௌட் மை ஒபீனியன்ஸ்... இதில் வரும் கதையம்சத்தை நான் பாராட்ட விரும்புகிறேன். ஆனால் என்ன பிரயோஜனம்? திஸ் ரைட்டர் டஸ் நாட் கேர் எபௌட் மை ஒபீனியன்ஸ்... இதில் அவருடைய நடிப்பைப் பாராட்ட எனக்கு ஆசைதான். ஆனால் ஹி டஸ் நாட் கேர் எபௌட் மை ஒபீனியன்ஸ்...'' என்று பேசி, சில ஆண்டுகளுக்கு முன், திமிருடன் பேசிய அந்த நாடகாசிரியரை, தமது கிண்டலால் குத்தித் துளைத்துவிட்டார்.

அந்த நாடகாசிரியருக்கு ஒரே தலைகிறக்கமாகப் போய்விட்டது. பதிலே பேசவில்லை. வாயடைத்தது. பிறகு, முந்தைய நிகழ்ச்சிக்கு, வருத்தம் தெரிவித்து, பார்த்தசாரதி ஐயங்காரிடம் மன்னிப்புக் கேட்டார் அந்த நாடகாசிரியர்.

திமிர் பிடித்துப் பேசி, கமிஷனர் பார்த்தசாரதி ஐயங்காரின் நகைச்சுவை உணர்வினால், வாயடைக்கப்பட்ட அந்த நாடகாசிரியர் — அடியேன்தான்!

அதன் பிறகு, பார்த்தசாரதி ஐயங்கார் எங்கள் நாடகங்கள் பலவற்றைப் பார்த்து ரஸித்தார். ஒருமுறை 'மனம் ஒரு குரங்கு' என்ற எங்கள் நாடகத்திற்கு அவரை அழைத்தேன். அப்போதும் அதே கிண்டல்தான்.

''நிச்சயமா வரேன். உன்னுடைய மத்த குரங்கெல்லாம் நான் பார்த்தாச்சு. இந்தக் குரங்கை இன்னும் பார்க்கலே. நிச்சயமா வந்து பார்க்கிறேன்'' என்றார் அவர்! வந்து பார்த்துப் பாராட்டிவிட்டு, ''அடுத்த குரங்கு எப்போ? எனக்குச் சொல்லியனுப்பு!'' என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

அந்தப் போலீஸ் அதிகாரியின் நகைச்சுவை உணர்வு என்னால் மறக்க முடியாதது.

தொகுப்பு:

கௌசல்யா, எஸ். லட்சுமி



இரண்டு பழைய பேப்பர் காரர்கள் நடிகை வீட்டு வாசலில்...

''பாவம், நடிகை ஜிகினுஸ்ரீக்கு மவுசு குறைஞ்சுக்கிட்டே வருதுப்பா!''

''எப்படி சொல்றே?''

''போன மாசம் அஞ்சு கிலோ காதல் கடிதாசு போட்டாங்க; இந்த மாசம் மூணு கிலோதான்!''

— சரஸ்வதி பஞ்சு.

நாற்பதாயிரம் வருஷங்களுக்கு முந்திய கதை.

கதை? ஸாரி, ஒரு ஃப்ளாஷ்பேக் என்று சொல்வதே சரி. கூர் ஆயுதங்களின் உதவியை அறிந்து விட்ட காலம். நெருப்பைப் பாதுகாக்க மட்டும் தெரிந்த, ஆனால் உருவாக்கத் திறனில்லாத ஒரு கூட்டம். இன்னொரு கும்பல் வந்து சண்டையிட்ட போது இந்த நெருப்பைப் பாதுகாக்க முனைந்து, தோற்று, நெருப்பைத் தேடிப் புறப்படும் ஆண்களைப் பற்றியது படம்.

தேடலின்போதுநரமாமிசம்சாப்பிடும்இன்னொரு பகுதியினரிடமிருந்து மீட்கப்படும் ஒரு பெண். அவள் சார்ந்துள்ள குழுவுக்கு நெருப்பை உண்டாக்கத் தெரியும்; சிரிக்கத் தெரியும்; கொஞ்சம் கொஞ்சம் சைகை செய்யக் கூடத் தெரியும்.

ஆதி மனிதனின் மிருகத்தனமான காம இச்சை, எப்படி காதல் உணர்வாய் மென்மையாய் மாற்றம் காண்கிறது என்பதற்கு ஓர் அழுத்தமான காட்சி: அந்தப் பெண் படுத்திருந்த வைக்கோல் குப்பையை ஆனந்த ஏக்கத்தோடு அணைத்துக் கொள்கிறான். அவளைத் தேடிப் புறப்படும் மனிதன்.

" ஒப்பனை! அரை நிர்வாணமாய் ஆண்கள், பெண்கள், நடமாடும் காலம் என்பதால் மொழு மொழுவென்ற ஆட்களைக் காட்டிப் பணம் பண்ணாமல், அழுக்கும், சுந்தலும், நிமிரா நடையும், குரங்கின் வெகு அருகாமை முகங்களுமாய், கற்காலத்தின் உண்மையான சூழலைக் கொண்டு வர முயன்றிருக்கும் நேர்மைக்கு ஒரு பெரிய சபாஷ்!

" எதேச்சையான உடலுறவுக் காட்சிகளைக் கூட ஆபாசமில்லாமல் எடுத்திருக்கும் அழகு.

இந்த ஃப்ரெஞ்ச் தயாரிப்பில் சிறந்த டைரக்டராக Jean Jacques Annaud (ஜீன் ஜேக்வஸ் அனுடு) நம்மிடம் பாராட்டுப் பெறுகிறார்.



மொழியின் அவசியம் இல்லாமல், எல்லாத் தரப்பினருக்கும் பொது வாய்ப் புரியக் கூடிய அரை ஊமைப் படம் இது.



உன்னை ஒன்று கேட்பேன்

ஆரம்பம் படு விறுவிறுப்பு. பெரிய விஷ்ணு வெடியின் திரியைத் தான் கொளுத்திவிட்டார்கள் என்ற நப்பாசையுடன் உட்கார்ந்திருந்தால், ஈர 'கேப்'பை வெடித்த மாதிரி கதை.

வெளிர் நிற முக்கால் நிறந்த முதுகுடன், வர்ண வர்ண டிரெஸ்ஸைப் போட்டுக் கொண்டு தகதக வென்று 'லம்பாடிக் கூட்டத்தில் அமலா. அந்த நாடோடிக் கூட்டம் இளர்த் தெலுங்கு, இடீர் ஹிந்தி என்று பேசிக் குழப்பும் கூட்டம். பணக்கார மோகன் அமலாவைப் பிரியப்பட, மோகனை ஏற்கெனவே பிரியப்படும் முறைப் பெண் மாதுரி குறுக்கில் விழுந்து மறிக்கிறார். மோகனை நேசிக்கிற மாதிரி ஸாஃப்ட்டாக பேசுகிறார். அமலா பேச்சு வந்ததும் தடாலென்று முறைப்பான குரலில் 'பார்த்து விடுகிறேன் ஒரு கை' என்று சீறுகிறார். மாதுரியின் பாத்திரம் காரமா, கசப்பா என்றே தெளிவில்லை.

ஏக கெடுபிடியாகக் கட்டுப்பாடுகள் பற்றிப் பேசும் நாடோடிக் கூட்டம் அமலாவை அம்போ வென்று விட்டு விட்டுக் கூடாரத்தைக் காலி பண்ண, மாட்டு வண்டியில் ஊரை விட்டு ஓடும் மோகனையும், அமலாவையும் வழிமறித்து நெருப்புப் பந்தங்களால் மிரட்டி..... ஒரு பெண்ணு இத்தனை கொடூரம்? நம்புவது கஷ்டம்.

கதையோட்டத்தில் ஒட்டாமல் குழந்தை சீதா பாத்திரம். அதற்கு இருதயத்தில் ஆபரேஷன். மோகன் குண்டடிபட்டுப் பணத்தோடு ஆஸ்பத்திரி வந்து கடைசி மூச்சு விடுகிறார். கடைசி பரபரப்புகளும் அபத்தம். குழந்தையின் அப்பா செந்தில், கோவை 'சரளாவின் பின்னால் சரசம் தேடிக் கொண்டு, ச்சே, ச்சே!

மர்மக் கதையா, பழிவாங்கல் கதையா, காதல் முக்கோணக் கதையா, என்று சரியாகத் தீர்மானம் பண்ணாமல் படத்தைக் கொண்டு போயிருப்பதில், டைரக்டர்கள் எண்ணெய்த் தூணில் ஏற முயற்சி செய்யும் கதையாகிவிட்டது.

அற்புதமான கண்ணோடு காமிரா அதுமட்டும்தான் ஆறுதல்!

— ஜெயமன்மதன்

வாலிப நண்பர்களுக்கும் மணமான நண்பர்களுக்கும்

அறிவிப்பு



என் அருமை வாலிபர்களே!

நம் வாழ்க்கையில் பருவமான வயதில் நாம் தெரிந்தோ தெரியாமலோ, அறிந்தோ, அறியாமலோ கெட்டவர்கள் சகவாசத் தாலோ சுய இன்பம், ஹோமோ செக்ஸ் (ஆணுடன் புணர்தல்) நம் வயதைவிட அதிக மானவர்களிடம் உடல் உறவு கொள்ளுதல், விலை மாதர்களிடம் தொடர்பு அதிகமான அளவு உடலுறவு கொள்ளுதல் இம்மாதிரி யான தவறான வழிகளில், நம் ஜீவசக்தியை விரயம் செய்து வருவதால், ஆரம்பத்தில் ஒரு கெடுதலும் தெரியாது. சில ஆண்டுகள் பொறுத்து நம் உடலின் நிலை கீழ்கண்ட மாதிரி பாதிக்கப் பட்டு வேதனையும், மனத்தளர்ச்சி — உடல் தளர்ச்சியால் மனோநிலை, உடல் பாதிப்பு— நரம்புத் தளர்ச்சி — உறுப்புகள் தளர்ச்சி — இருதய பலஹீனம் — நடுக்கம் பயம் — உடலில் சக்திக் குறைவு, வீ.டி. நோய் — இடுப்பு— முதுகு நடுத்தண்டு, மூட்டுகளில் வலி — வெட் கம் இயர் ஏமாற்றம் — முயற்சித்தும் முடியாமை துரித ஸ்கலிதம் இன்னும் சொல்லக் கூச்சப் படும் அளவுக்கு மனப்போராட்டம் குழந்தை செல்வம் பெற விந்துவில் சிசுப்பணுக்கள் இல்லாமை, கல்யாணம் செய்யப் பயப்படு கிறவர்களும் — மணம் செய்தும் திருப்தியில்லா நிலை — சந்தேகம் — முன்கோபம் — தூக்க மின்மை — கண் எரிச்சல் — முகம் ஒட்டிப் போதல் — இரேகம் பார்ப்பவர்களுக்கு நல்ல விருந்தும், வாழ்க்கையில் ரசனையை பூர்ண மாக பெற இயலாமல் வேதனையடைவது போன்றவைகளால் பாதிக்கப்படுகின்றவர் கள் ஏராளம்.

மற்றும் சகலவிதமான சர்ம நோய்கள், படைகள் — வெண்மேகம், கருமேகம் படை வரல்கள் (சோரியாஸிஸ்) செதில்களாக உதிரும் படைகள், நாள்பட்ட இருமல்— இளைப்பு — மூக்கடைப்பு — ஸைனோ பிலியா— டஸ்ட் அலர்ஜி — ஓயாதும்மல் — கர்ப்ப ரெண்டு இளைப்பு — மேல் மூச்சு, பனி, மழை— மோடம், வெயில் காலங்களில் ஏற்படும் ஆஸ்துமா நோய், வாய்ப்புண் — குடல் புண்— நீர்தாரைப் புண்கள் — வெள்ளைப் போக்கு— மாதவிலக்கில் ஏற்படும் உபாதைகள் மற்றும் சகல நோய்களுக்கும்

நோயாளிகள் ஆலோசனை பெறலாம் மாதந்தோறும் சந்திக்கலாம்.

டாக்டர் S.R. சிவராஜ் — சிவகுமார் அவர்களின் மாதாந்திர சுற்றுப் பயண விபரம்

சென்னை: 3, 4, 5, 6, 7 ந் தேதிகள் வரை:
ராமச்சந்திரா லாட்ஜ்,
7, அத்திப்பட்டன் தெரு,
P.ORR & சன்ஸ், மவுண்ட் ரோடு,
சென்னை — 2, போன்: 566526
காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை

திருச்சி: 8, 9 ந் தேதிகளில்
அசோக் பவன், ஜங்ஷன் ரோடு,
காலை 8 மணி முதல் மாலை 6 மணி

சேலம் ஹெட்டாபீஸ்: 1, 2, 10, 11, 16, 17, 18, 19, 20 தேதிகளில்

கோவை: 12, 13 ந் தேதி ஸ்ரீ லக்ஷ்மி லாட்ஜ்,
ராஜ வீதி, போன்: 334 87
காலை 8 மணி — இரவு 8 மணி

ஈரோடு: 15 ந் தேதி ஆனந்த் லாட்ஜ்,
ஈஸ்வரன் கோவில் வீதி,
காலை 9 மணி முதல் 5 மணி வரை

உதவி வைத்தியரின் சுற்றுப் பயணம்:

விழுப்புரம்: 3 ந் தேதி: வாசவி விகார் ஹோட்டல்,
M.G. ரோடு, போன்: 4 39
காலை 8 மணி முதல் 12 மணி

கடலூர் N.T. 3 ந் தேதி: ஹோட்டல் பிருந்தாவனம்
(பாரதி ரோடு) மாலை 3 மணி முதல்
இரவு 8 மணி வரை

சிதம்பரம்: 4 ந் தேதி: ஜெயராம் லாட்ஜ், மேல வீதி,
காலை 8 மணி முதல் 2 மணி

மாயவரம்: 4 ந் தேதி: காளியாக்குடி லாட்ஜ்,
பட்டமங்கலத் தெரு, போன்: 24 60
மாலை 4 மணி முதல் இரவு 8 மணி

கும்பகோணம்: 5 ந் தேதி: தாஜ்மஹால் லாட்ஜ்,
பொற்றாமரை குளம் தெற்கு
காலை 8 மணி முதல் மாலை 6 மணி

தஞ்சாவூர்: 6 ந் தேதி: அசோக் லாட்ஜ்,
ராஜா கலைமன்றம் அருகில் போன்: 593
காலை 8 மணி முதல் மாலை 6 மணி

பட்டுக்கோட்டை: 7 ந் தேதி: A.V. லாட்ஜ்,
நாடியம்மாள் நகர், போன்: 312
8 மணி முதல் மாலை 4 மணி

டாக்டர் S.R. சிவராஜ் அவர்கள்

மதுரை: 21, 22, 25 ந் தேதி (3 நாள்)
நியூ காலேஜ் ஹவுஸ்,
காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை

தூத்துக்குடி: 23 ந் தேதி: ராதா லாட்ஜ்,
முனிசிபல் ஆபீஸ் எதிரில்,
காலை 9 மணி முதல் 12 மணி வரை

திருநெல்வேலி: 23 ந் தேதி: பரணி லாட்ஜ், மதுரை ரோடு:
மாலை 3 மணி முதல் இரவு 8 மணி
24 ந் தேதி: காலை 8 மணி முதல்
மாலை 6 மணி வரை

சேலம் ஹெட்டாபீஸ்: 26, 27, 28, 29, 30, 31, 1, 2 தேதிகளில்

1 மாத உயர்ந்த விசேஷ சிகிச்சை (வசதியுள்ளவர்களுக்கு)			1 மாத நடுத்தர சிகிச்சை		
A 1 தெ.	B 1. தெ.	C 1. தெ.	A வகுப்பு	B வகுப்பு	C வகுப்பு
ரூ 1,750.00	1,000.00	650.00	425.00	325.00	225.00

ஹெட்டாபீஸ்: S.R. சிவராஜ், தமிழ் சங்கம் ரோடு (ராஜாராம் நகர்) சேலம் — 7



பட்டுக்கோட்டை பிரபாகர்

என்னைக் காணவில்லை

14

பிரேமாவை 180 டிகிரி கோணத்தில் முறைத்தாள் சுசிலா. பிறகு சோபாவில் அசோக் விட்டுச் சென்றுவிட்ட கர்சிப்பைப் பார்த்தாள்.

''இடியட்'' என்றாள்.

''மேடம், மரியாதை இருக்கட்டும்'' என்றாள் பிரேமா.

''நான் உங்களைச் சொல்லலை. என்னையே திட்டிக்கிறேன். உங்களுக்குத் துப்பறியற வேலை கொடுக்கிற மாதிரி ஆய்டுச்சு பாருங்க, அதுக்காக.''

''நான் உட்காரலாமா?'' என்று பதில் வருமுன்னேயே உட்கார்ந்தாள். ''சொல்லுங்க. அசோக் எங்கே இருக்கார். நான் சந்திக்கணும்.''

''வெல். இனிமே மறைச்சுப் பேசிப் புண்ணியமில்லை. உங்க அசோக் உதவி கேட்டு இங்கே வந்தது உண்மை. ஆனால் இப்ப இங்கே இல்லை.''

''அது தெரியும். இந்த வீட்ல இருந்தார்னா இந்நேரம் என் குரலுக்குத் தாவி வந்திருப்பார்.''

''நீங்க என்ன குழலூதும் கண்ணனா? அவர் என்ன பசுமாடா?''

''இந்தக் கிண்டல் எல்லாம் வேணாம். அசோக் இப்போ எங்கே இருக்கார்?''

''தெரியாது.''

''அதெப்படி தெரியாமப் போகும்?''

''இதோ பாருங்க பிரேமா. 'போலீஸ் சந்தேகப்படும் தப்பி ஓடி வந்த ஒரு மனிதனுக்கு என்னால உதவ முடியாது. நியாயமா உங்களை நான் இப்போ போலீஸ்ல பிடிச்சுக் குடுக்கணும். தயவு செஞ்சி இடத்தைக் காலி பண்ணுங்க'ன்னு பரத் சொல்லிட்டாரு. அசோக் புறப்பட்டுப் போய்ட்டாரு. எங்கே போறேன்னு சொல்லிட்டுப் போகலை.''

''இதை நான் நம்பணும்?''

''இது நடந்த உண்மை. நம்பறதும், நம்பாததும் உங்க பிரியம்.''

''அசோக் இந்த வீட்டுக்கு எப்போ வந்தார்?''

''நேத்து.''

''பேசிட்டு உடனே புறப்பட்டுப் போய்ட்டாரா?''

''ஆமாம்.''

''அப்போ நேத்திலேர்ந்தே இந்தக் கர்சீப் இங்கேயே கிடக்கா?''



உலகத்திலேயே மாபெரும் கொடுமையின் சின்னமாக விளங்குவது மதுக் கோப்பை இல்லை; முகம் பார்க்கும் கண்ணாடி!

— செஸ்டர்டன்



இதுவரை நடந்தது:

தொழிலதிபர் நாகராஜன், மனைவியின் மரணத்துக்குப்பின் தமக்கு மிக இளையவளான அழகி மாயாவை மணக்கிறார். சொத்து முழுவதையும் அவளுக்கு எழுதி வைக்கிறார். இதனால் பெங்களூரில் இருக்கும் மூத்தாள் மகன் அசோக்குக்கு மாயா பேரில் தீராத ஆத்திரம் ஏற்படுகிறது. மேலும் தன் தாயின் மரணம் இயற்கையானதல்ல என்ற பலமான சந்தேகம்.

மாயா — நாகராஜன் திருமண வரவேற்பு தினத்தில் அசோக் சென்னை வந்து தந்தையுடன் சண்டை போட்டுவிட்டுத் தான் தங்கியுள்ள ஓட்டலுக்குத் திரும்புகிறான். இதற்கிடையில் மாயாவும் அவள் அண்ணன் குமாரும் நாகராஜனைத் தீர்த்துக் கட்டி, பழியை அசோக் மீது சுமத்தத் திட்டமிடுகின்றனர். சூசை என்பவன் வேறு யாரும் அறியாமல் நாகராஜனை எதற்காகவோ பிளாக் மெயில் செய்து வருகிறான்.

மாயா அசோக்குடன் சமரசம்செய்துகொள்ளும்படி நாகராஜனைக் கேட்டுக்கொண்டு அசோக்கைக் குறிப்பிட்ட நேரத்துக்கு வரச் சொல்லிவிட்டு, குமாருடன் வெளியே போய்விடுகிறாள். அப்பாவைத் தேடி வரும் அசோக், அவர் கொலை செய்யப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்கிறான். நாகராஜனைக் கொல்ல மாயாவும் குமாரும் ஏற்பாடு செய்திருந்த தாமஸுக்கும் அவர் ஏற்கெனவே கொலையாகியிருப்பது கண்டு அதிர்ச்சி உண்டாகிறது. ஆயினும் என்ன? அவர்கள் திட்டமிட்டபடியே அசோக் போலீஸாரிடம் மாட்டிக் கொள்கிறான். தான் நிரபராதி என்று எடுத்துக் கூறியும் போலீஸார் நம்பாதபோது தப்பி ஓடி பரத் என்ற வக்கீலைச் சரண் அடைகிறான் அசோக். பரத்தும் அவன் தோழி கவிதாவும் அவனைக் காப்பாற்றும் முயற்சியில் இறங்குகின்றனர்; அசோக்கின் காதலி பிரேமா உள்பட யாருக்கும் அசோக்கின் இருப்பிடத்தைச் சொல்லாமல் ரகசியமாய் வைத்திருக்கின்றனர்.

''வொய் நாட்?''

''நீங்க பொய் சொல்றீங்க.''

''இல்லே, அதுதான் உண்மை'' என்று வாசலில் குரல் கேட்க, திரும்பிப் பார்த்தார்கள். பரத் நின்று கொண்டிருந்தான். மோட்டார் பைக்கின் சாவியைச் சுழற்றிக் கொண்டே உள்ளே வந்து உட்கார்ந்தான்.

''சார், நான்...'' என்றாள் பிரேமா.

''தெரிஞ்சுக்கிட்டேன். மிஸ் பிரேமா. அசோக்கோட நேசத்துக்கு உரிய பொண்ணு. நேத்து என் வீட்டை விட்டு அசோக் புறப்பட்டுப் போறதுக்கு முன்னாடி உங்களுக்கு ஒரு தகவல் சொல்லிட்டுப் போனார். நீங்க வந்தா சொல்லச் சொன்னார்.''

''என்ன அது?''

''என்னைக் காணவில்லை.''

''அப்படின்னா?''

''அவர் கொஞ்ச நாளைக்குக் காணாமப் போகப் போறார்ன்னு அர்த்தம். தன் மேல் போலீஸ் சந்தேகப்படறதாலே, உண்மையான குற்றவாளி மாட்டிக்கிற வரைக்கும் தலைமறைவா இருக்கப் போறதாச் சொன்னார். அவரைத் தேடவோ, தொடர்பு கொள்ளவோ நீங்க எந்த முயற்சியும் எடுக்கக் கூடாதுன்னார். சந்தர்ப்பம் வரும் போது அவரே உங்களைத் தொடர்பு கொள்வார்.''

''இப்போ அவர் இருக்கிற இடம் உங்களுக்குத் தெரியாது?''

''தெரியும்.''

''எங்கே?''

''இதே மெட்ராஸ்லதான்.''

''அட்ரஸ்?''

''அதை அவர் தரல்லையே...?''

''சரியான கல்லுளி மங்களு இருக்கீங்க. உங்களுக்கு அவர் அட்ரஸ் கண்டிப்பா தெரியும். ஆனா சொல்ல மாட்டீங்க. வேணாம். சொல்ல வேணாம். நான் அப்பப்போ போன் பண்றேன். நல்லா இருக்காரான்னு ஒரு வார்த்தை சொல்லுங்க, போதும். என் ஹாஸ்டல் அட்ரஸ் இது, உங்களுக்கு அவசியம் ஏற்படறப்போ தொடர்பு கொள்ளுங்க'' என்று அட்டை எடுத்து மேஜை மேல் வைத்துவிட்டு எழுந்தாள்.

''அவசியம்னா?'' என்றான் பரத்.

பிரேமா வாசலில் இருந்து திரும்பிப் பார்த்து, ''இந்தக் குறும்பு எல்லாம் என் கிட்டே வச்சுக்காதீங்க'' என்று சொல்லி விட்டு வெளியேறினாள்.



''**எ**ன்ன வேணும் உங்களுக்கு?'' என்றான் கணேசன். அவன் பிடித்திருந்த சங்கிலியின் மறுமுனையில் ஜின்னியின் கழுத்து. ஜின்னி அப்போதுதான் குளித்து உடம்பெங்கும் ஈரமாய் போர்ட்டிகோவின் சாய்வான வெளிச்சத்தில் உடம்பை உதறி லட்சம் துளிகளைச் சிதறடித்துக் கொண்டிருந்தது.

''மிஸஸ், மாயாவைச் சந்திக்கணும்'' என்றான் பரத்.

குரோட்டன்ஸ் தொட்டிக்கு அந்தப் பக்கம் யாரோ மறைவாய் வைத்திருந்த மட்டக் காகித முப்பத்து நாலு படங்களுடன் கூடிய செந்தமிழ் நாவலைக் கையில் எடுத்துப் பார்த்துவிட்டு அவசரமாக வைத்து விட்டாள் சுசிலா.

கணேசன் சற்றுத் தயங்கி, ''நீங்க யாரு?'' என்றான்.

''வராந்தாவிலே நிக்க வச்சே இவ்வளவு பேசறது தப்பு. போலீசோட சம்பந்தப்பட்டவங்க நாங்க.''



உடனே மரியாதை கலந்து, ''உள்ளே வாங்க. உக்காருங்க. மாடில இருக்காங்க. சொல்றேன்'' என்றான்.

ஹாலை உன்னிப்பாகக் கவனித்தான் பரத். ட்ரே மீதிருந்த மெழுகுவர்த்திஸ்டாண்டின் நுண்ணிய வேலைப்பாடுகளைக் கையில் எடுத்துப் பார்த்தாள் சுசிலா. கடந்து போன வெள்ளைப் பூனை நின்று அவர்களைக் கவனித்துவிட்டு மீசையை அசைத்துக் கொண்டு சென்றது.

மாடியில் இருந்து கொஞ்சம் தூக்கக் கலக்கமாய், கொஞ்சம் துக்கக் கலக்கமாய் இறங்கி வந்த மாயா அமர்ந்து, கால் மேல் கால் அணிந்து, ''என்ன, சொல்லுங்க, விசாரணையா? நாலு நாள்ல நூறு போலீஸ்காரங்களுக்குப் பதில் சொல்லிட்டேன்.'' என்று அலுத்துக் கொண்டாள்.

''உங்க சலிப்பு நியாயமானது மேடம். நாங்க போலீஸ் இல்லே. போலீசோட ஒத்துழைக்க இருக்கிறோம். அதுக்கு அவங்க ஆதரவு தந்திருக்காங்க.''

''புரியலே. நான் என்ன செய்யணும்?''

''சில கேள்விகளுக்குப் பதில் வேணும். கொலை நடந்த அறையை உங்க உபயோகத்துக்குப் போலீஸ் ஒப்படைச்சுட்டாங்களா?''

''நேத்துதான் கொடுத்தாங்க சாவியை.''

''திறந்து சுத்தம் பண்ணியாச்சா?''

''இன்னும் இல்லே. அப்படியே இருக்கு.''

''அப்போ அந்த அறையையும் பார்க்கணும்.''

''கொஞ்சம் காத்திருங்க. என் அண்ணன் இப்ப வருவார்.. அவர் இல்லாமல் நான் உங்களை அனுமதிக்க முடியாது.''

''பதில் கூட அண்ணன் வந்துதானா?''

''இல்லே. சொல்றேன் கேளுங்க.''

''உங்களுக்கும், மிஸ்டர் நாகராஜனுக்கும் நடந்தது காதல் திருமணமா?''

''ஆமாம்.''

''எத்தனை வருஷமா காதல்?''

''மூணு வருஷமா.''

''அதாவது அவரோட முதல் மனைவி உயிரோட இருக்கிறப்பவே உங்களுக்குள்ளே நெருக்கமாயிடுச்சி, இல்லேயா?''


அவசரமாக நாக்கைக் கடித்துக் கொண்டு, ''இல்லே. ஏற்கெனவே அறிமுகம் மட்டும்தான். முதல் மனைவி இறந்தப்புறம்தான் காதலாச்சு.'' என்றாள் மாயா.

''மூணு வருஷம்னு சொன்னீங்களே.''

''மூணு வருஷமா அவர் மட்டும் என்னை நேசிச்சிருக்கார்—ரகசியமா. முதல் மனைவி இறந்து கொஞ்ச நாள் கழிச்சு, தனிமையை உணர்ந்து என்கிட்டே வெளிப்படையா தன் காதலைச் சொன்னார்.''

''எப்படி ஏத்துக்கிட்டீங்க நீங்க? அவருக்கு வயது அம்பதுக்கும் மேலே.''

''நான் வயசைப் பார்க்கலே. உண்மை



பெண் உங்கள் நிழலைப் போன்றவள். அவளைப் பின்தொடர்ந்தால் உங்களுக்கு முன்னால் ஓடுவாள்; அவளிடமிருந்து ஓடினால் உங்களைத் துரத்துவாள்.

— நிகலஸ் சாம்ஃபர்ட்





"தேன்நிலவு தோற்றமின் திருமணம் வெற்றி பெறுகிறது. — செல்டர்டன்"

ராஜாஜி வாழ்க்கை வரலாறு அடுத்த இதழில் இடம்பெறும்.

யான அன்பைத்தான் பார்த்தேன்.''

''இந்தக் கொலையை அவர் பையன் அசோக்கைத் தவிர வேறே யாராச்சும் செய்திருக்க வாய்ப்பிருக்கா?''

''வேறே யாருக்கும் பகை இல்லை இந்த அளவு. தவிர — கையோட அசோக்கை வாட்ச்மேன் பிடிச்சிட்டான். போலீஸ் ஜீப்பிலேர்ந்து தப்பி ஓடியிருக்கான். இதைவிட வேறே என்ன ருசு வேணும்?''

''அசோக்கைக் கொலையிலே சிக்க வைக்கிற மாதிரி திட்டமிட்டு ஒரு சதி நடந்திருந்தாலும் — சந்தேகம் அசோக் மேல்தானே விழும்?''

சார், வந்த ஆஃபீஸர்கள் ஒரே விஷயத்தைப் பார்க்கறாங்க. உயில் எழுதி வச்சிருக்கார் அவர். அதன்படி சொத்து பூரா எனக்குத்தான். அவர் பிள்ளையை அவருக்குக் கட்டோட பிடிக்கலே. சல்லிக்காக எழுதி வைக்கலே. அதிலே வளர்ந்தது விரோதம். முதல் நாள் வந்து கண்டபடி பேசிட்டுப் போனார். மறுநாள் வந்து தீர்த்துட்டார். சொத்துக்கு ஆசைப்பட்டு என் புருஷனை நான் கொல்ல நினைக்கிறவளா இருந்தா, வரவேற்பு அன்றைக்கு நடந்த கொலை முயற்சியைத் தடுத்து என் புஜத்திலே குண்டு வாங்கியிருக்க மாட்டேன். இன்னும் கூட புண் ஆறலே'' என்று சரிந்திருந்த முந்தானையை மேலே ஏற்றிப் புஜத்தின் மேல் போடப்பட்டிருந்த கட்டைக் காட்டினாள் மாயா. ''அவர் கொலை செய்யப்பட்ட போது, இந்தக் காயத்திலே எலும்பு முறிவு இருக்குமோன்னு ஊர்ஜிதம் செய்ய நானும், அண்ணனும் ஒரு டாக்டர் கிட்டே போயிருந்தோம். திரும்பி வரப்போதான் ரகளை. அநாவசியமா என்னைச் சந்தேகப்படறதிலே அர்த்தமில்லை.''

பரத் கொஞ்சம் அமைதி விட்டு, ''போலீஸ் தரோவா விசாரிச்சிருக்காங்க. அதிலே கொலை தினத்தின் காலையிலே சூசைங்கிறவன் வந்து மிஸ்டர் நாகராஜனைச் சந்திச்சிருக்கான். அவன் அவர்கிட்டே வேலை பார்த்த பழைய டிரைவர்னு மட்டும் தெரிய வந்திருக்கு. விலாசம் கிடைக்கலே. உங்களுக்கு சூசையைத் தெரியுமா?''

''தெரியாது. நான் இந்தப் பங்களாவுக்கு வந்தே முழுசா ஒரு வாரம் ஆகலே.''

> "ஆபீஸில் என்ன வசதி [illegible] ?"
>
> "சாப்பிடறதுக்கு அங்கிருப்பது போலத் தூங்கறதுக்கு தூங்கும் அறை வேணுமாம்!"
>
> — லலிதா செல்லப்பா

''சூசையைப் பத்தி நாகராஜன் ஏதாச்சும் சொல்லியிருக்காரா?''

''நினைவில்லே.''

வாசலில் தட் தட் தட் என்று புல்லட் வந்து நின்று... சுகுமார் உள்ளே வந்தான். மாயா அவர்களை போலீஸ் சம்பந்தப்பட்டவர்கள், கொலை தொடர்பாக விசாரிக்க வந்தவர்கள் என்று பெயர் கேட்டு அறிமுகப்படுத்தினாள். பரத் விளக்கினான். சரியாக அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''என்ன சார், போலீஸ் எல்லா விசாரணையும் முடிச்சிடுச்சி. நீங்க என் இதிலே நுழையறீங்க?''

''ஒரு மாரல் இன்வால்வ்மென்ட். மிஸ்டர் நாகராஜன் எனக்கு போன் செஞ்சதும், அவரைச் சந்திச்சிருந்தா, ஒரு வேளை இந்தக் கொலையைத் தவிர்த்திருக்கலாம். அந்த ரூமை நாங்க பார்க்கலாமா?''

''ஒத்துழைக்க மறுத்தா என்ன செய்வீங்க?''

''உதவி கமிஷனரை விட்டுச் சொல்லச் சொன்னா... ஒத்துழைப்பீங்களா? சரி, நம்பர் என்ன? மேடம், லோக்கல் காலுக்கு எவ்வளவு வாங்கறீங்க?''

''வேணும். வேணும். மிரட்டாதீங்க. வாங்க'' என்று பாண்ட்டுக்குள் கைவிட்டுச் சாவியை எடுத்துக் கொண்டு நாகராஜனின் ரீடிங் ரூமுக்கு நடந்தான் சுகுமார்.

உள்ளே வந்ததும்... நிதானமாகப் பார்த்தான், பரத்.

போலீஸ் வரைந்த அடையாளக் கோடுகள், ரேகை பொறுக்கினதன் தடயங்கள், இன்னும் தனியாய்த் தொங்கிக் கொண்டேயிருந்த இண்டர்காமின் ரிசீவர், சற்றுத் தள்ளி ரத்தப் புள்ளிகள் உறைந்த ஆங்கிலப் புத்தகம், அங்கங்கே சுழல் நாற்காலியைச் சுற்றிலும் இரத்தச் சிதறல்கள், என்று நிதானமாகப் பார்த்தான்.

சுழல் நாற்காலியின் அமரும் பரப்பில் இருந்து ஒரு நீள தலைமுடியைக் கையில் எடுத்துப் பார்த்துத் தரையில் போட்டான் பரத்.

''பரத், ஒரு நிமிஷம்... அந்த நாற்காலியை லேசா நகர்த்துங்க. அதோட ஒரு ரப்பர் சக்கரத்துக்குள்ளே என்னமோ சிக்கிக்கிட்டிருக்கு. மின்னுது''. என்றாள் சுசீலா.

(தொடரும்)







20-40%
பண்டிகைக்கால
சிறப்புத்
தள்ளுபடி
கோ-ஆப்டெக்ஸ்
DIPR/Efficient

அலுக்காமல் கொடுத்த துலுக்காணம்!

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுத்தால்வே, 'இதோ, கூரைப் போச்சே!' என்று முக்கால் அழுவார்கள்.



அந்த அதிகாலை வேளையில் 'மாத நாவல் மேதை' துரைசாமி தமது வீட்டின் முன் அறையில் உட்கார்ந்து, மளமள வென்று எழுதிக் கொண்டிருந்தார். அடுத்த மாதம் அவரது எட்டு நாவல்கள் வெளிவந்தாகவேண்டும். ஆறுவது நாவலை நாளைக் காலை கட்டாயம் தந்து விடுவதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். அவரது பேனா, கற்பனை வேகத்தில் நகங்கிப் போன எழுத்துக்களை அவசர அவசரமாகத் துப்பிக் கொண்டிருந்தது.

அப்போதுதான் தலையில் முக்காடு தரித்து, இடுப்பு வரையில் கறுப்புப் போர்வையைச் சுற்றியபடி அந்த ஆள் துரைசாமியின் முதுகுப் பக்கம் ஓசைப்படாமல் வந்து நின்று, ஒற்றை விரலால் அவரது புறங்கழுத்தில் தொட்டான்.

துரைசாமி, சிலிர்த்துக் கொண்டு திருப்பியவர் அடுத்த விநாடி, "ஆ! ஐயையோ! முகமூடிக் கொள்ளைக்காரன்....! பேய், பிசாசு, ரத்தக் காட்டேரி!" என்று அலற முற்பட்டார்.

அந்த ஆள் முக்காட்டையும் போர்வையையும் விலக்கி, காவி படிந்த பற்களைக் காட்டிச் சிரித்தான். "பயந்துட்டீங்களா சார்? மன்னிச்சுக்குங்க!" என்றான், கவாதீனமாக ஒரு நாற்காலியில் உட்கார்ந்தபடி.

"யாருய்யா நீ? எதுக்கு இப்படிக் காலையிலே வந்து கழுத்தறுக்கிறே?" என்றார் காரமாக.

"விலாவாரியாச் சொல்றேன் சார்... என் பேரு துலுக்காணம். சொந்த ஊரு மரக்காணம். அங்கே தென்னந்தோப்பு, ரைஸ்மில், சைக்கிள் ஷாப், மளிகைக் கடை எல்லாம் சொந்தத்திலே இருக்கு.... உங்க எழுத்துன்னா எனக்கு உசிரு.... உங்களை மாதிரி எழுத யாரு இருக்காங்க இப்ப...?"

"உம்... கும்..." என்றார் துரைசாமி. தோரணை வந்து விட்டது!

"உங்களுக்காக ரசிகர் மன்றம் ஏற்படுத்தலாம்னு நினைச்சேன்..."

"காப்பி கொண்டு வரச் சொல்லட்டுமா?" — பரபரத்தார் துரைசாமி.

"வேணுங்க... அப்பாலே, உங்களுக்கு ஒரு பாராட்டு விழா நடத்தி, பண முடிப்பு கொடுக்கலாம்னு யோசிச்சேன்..."

"டிபன் சாப்பிடுங்களேன்... பக்கத்து ஹோட்டல்லே இட்லியும், கொத்சும் பிரமாதமா இருக்கும்... தருவிக்கட்டுமா?"

"பரவாயில்லேங்க. நான் வந்த விஷயத்தைச் சொல்லிடறேன்... நீங்க மனசு வச்சா நான் சந்தோஷமா இருப்பேன்... ஆயுசு முழுக்க உங்களை மறக்க மாட்டேன்...

பொன்னாடைக்கும், பூமாலைக்கும் மைக் செட்டுக்கும் தன்னிடமே பணம் கறந்து விடுவானோ என்ற பயம் துரைசாமியின் மனத்தில் மெதுவாகத் தலைகாட்டியது.

"நான் மனசு வைக்கணுமா? என்ன சொல்றீங்க?"

"நீங்க இனிமேல் யாருக்கும் மாச நாவல் எழுதித் தரக் கூடாதுங்க!"

கொஞ்சம் இடம் கொடுத்தால், அடி மடியிலேயே கையைப் போடறீங்களே! இடத்தைக் காலி பண்ணுய்யா முதல்லே!"

"கொஞ்சம் பொறுமையாக் கேளுங்க ஸார்... மத்தவங்களுக்கு நீங்க நாவல் எழுதக் கூடாதுன்னுதான் சொன்னேன்..."

"அப்படீன்னா?"

"எனக்கு மட்டும் எழுதுங்கன்னு அர்த்தம்!"

"உனக்கா? நீயும் மாச நாவல் வெளியிடப் போறியா?"

"ஆமாம் சார்... 'வெந்தயம்'னு பேர் வச்சு, பதிவெல்லாம் கூடப் பண்ணிட்டேன்..."

"மளிகைக் கடை வாடை அடிக்குதய்யா! வேறே பேரே கிடைக்கல்லியா உனக்கு!"

"எல்லாம் முன் யோசனையோடுதான் செய்திருக்கேன் சார்... மூணே மாசத்திலே நம்ம நாவல் மற்ற எல்லாத்தையும் தூக்கியடிக்கப் போகுது... அப்ப 'பந்தயத்தில் வென்ற வெந்தயம்'னு பேட்டிக் கட்டுரை வெளியிடறதுக்கு வசதியாக இருக்குமில்லையா?"

"சரி...! என்னவோ செய்துட்டுப் போங்க... என் நாவல் வேணும்னு கேட்கிறீங்களே — என் ரேட்டு தெரியுமா?"

"மூவாயிரம்னு கேள்விப்பட்டேன்..."

"அது போன மாச ரேட்டு... இப்ப மூணரை வாங்கறேன்..." என்று சினிமா நடிக — நடிகை பாணியில் சின்னதாக 'ரீல்' விட்டார் துரைசாமி.

"எனக்கு அரை டஜன் நாவல் தொடர்ச்சியா வேணும்.... ரேட்டைச் சொல்லுங்க!"

''அப்படீன்னா நாலாயிரம் கொடுங்க.''

''ஐயாயிரமா வாங்கிக்குங்க சார்! இந்தாங்க அட்வான்ஸ் பத்தாயிரம்!''

லுங்கி மடிப்பில் பதுங்கியிருந்த புத்தம் புதிய நூறு ரூபாய்க் கட்டு ஒன்றை அலட்சியமாக எடுத்து, மேஜை மீது வீசினான் துலுக்காணம். துரைசாமியின் இருதயம் இரண்டு 'லப்-டப்'பைக் கோட்டை விட்டது! சட்டென்று எடுத்து, மேஜை டிராயரில் போட்டு மூடினார். இந்த ஆசாமி மனசு மாறாமலிருக்க வேண்டுமே!

''சார்! ஒரே ஒரு கண்டிஷன். இந்த அரை டஜன் நாவல்களை எழுதி என்கிட்டே கொடுத்ததுக்கு அப்பாலேதான் நீங்க மத்தவங்களுக்கு எழுதணும்....''

''அதெப்படி? ஏற்கெனவே நிறைய பேருக்கு ஒப்புத்துக்கிட்டிருக்கேன்... அவங்க அறிவிப்பு கூடப் போட்டுத் தொலைச்சிருப்பாங்களே...!''

''ஏதாவது சாக்கு, போக்கு சொல்லுங்களேன்... உங்களுக்கு இல்லாத கற்பனை வளமா?''

''வீட்டு வாசல்லே கடன்காரங்க கணக்கா வந்து நிப்பாங்களே.... எப்படிச் சமாளிக்கறது?''

''அதுக்கும் ஓர் ஐடியா வச்சிருக்கேங்க...''

''உன்னை மாதிரி முகமூடி மாட்டிக்கிட்டு அலையச் சொல்றியா?''

''இல்லீங்க... சிங்கப்பூருக்கு ஒரு 'டிரிப்' அடியுங்க...!''

அதுக்கு எவன்யா பணம் கொடுப்பான்?

''நான் தர்றேங்க!''

துரைசாமியின் இருதயம் பத்து விநாடிகள் மௌனம் அனுஷ்டித்தது.

''என்ன! நீங்க கொடுக்கிறீங்களா?''

''உங்க சிங்கப்பூர் செலவு முழுக்க முழுக்க என்னுடையது... உங்ககிட்டே பாஸ்போர்ட் இருக்குமே — அதை இப்படிக் கொடுங்க... இன்னும் ரெண்டே நாள்லே நீங்க சிங்கப்பூர் போறீங்க. டிக்கெட் உங்க வீடு தேடி வரும்!''

முதல் முதலாக ஜர்தா பீடா போட்டவனுக்கு ஏற்படக் கூடிய கிறுகிறுப்புடன் துரைசாமி இரும்பு பீரோவைத் திறந்து பாஸ்போர்ட்டை எடுத்துக் கொடுத்தார்.

அவருக்குத் துலுக்காணத்தை ரொம்பப் பிடித்துப் போய்விட்டது. ஏதாவது பத்திரிகைக்காரர்கள் கட்டுரை கேட்டால், 'அலுக்காமல் கொடுத்த துலுக்காணம்' என்ற தலைப்புப் போட்டு அனுபவக் கட்டுரை எழுதிக் கொடுக்க வேண்டும் என்கிற அளவுக்கு அன்பு ஏற்பட்டு விட்டது,

சரியாக இருபத்தைந்து நாட்களுக்குப் பிறகு, யானைக்குட்டி சைஸில் அரை டஜன் பெட்டிகளுடன் சிங்கப்பூரிலிருந்து திரும்பினார் துரைசாமி.

வீட்டுக்குவந்ததும்,ஆளுக்கு ஆள் அவரை நச்சரித்தார்கள்.

''டாடி! நான் கொடுத்த லிஸ்ட் படி பெர்ஃப்யூம், சோப்பு, பௌடர், மேக்கப்—கிட் எல்லாம் வாங்கிட்டு வந்திருக்கீங்க, இல்லையா?'' என்றாள் மகள் கலா.

''பதினாறு புடவை, டூ — இன் — ஒன்,

ஒருவர் தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாரோ, அதையே நாம் கூறுவதுதான் புகழ்ச்சி!







அருள்வாக்கு

'மங்களம்' என்றால் மங்களந்தான்! ஆனந்தமாக அதிலேயே ஒரு கம்பீரத்தோடு, தூய்மையோடு, ஆனந்தமாக இருந்து கொண்டிருப்பதுதான் மங்களம். எதற்கெடுத்தாலும் எரிந்து விழுந்து கொண்டோ, மூக்கைச் சிந்திப் போட்டுக் கொண்டோ இல்லாமல் 'ஆஹா' என்று எப்போதும்ஸந்தோஷமாகஇருக்கவேண்டும். இதுதான் லோகத்துக்குநாம்செய்கிற பெரிய ஒத்தாசை, பெரிய தொண்டு. பணத்தை வாரிக் கொடுப்பதை விட, வேறு ஸர்வீஸ்கள் பண்ணுவதை விட, நாம் போகிற இடமெல்லாம் நம் மங்களத்தாலேயே ஆனந்தத்தை உண்டாக்கிக் கொண்டிருப்பதுதான் மற்ற ஜீவர்களுக்குப்பெரியதொண்டு.'லைட்' டாக,லேசாக எதையும் சாதிப்பது அநாயாஸம். போகிற இடமெல்லாம் நாமே ஒரு 'லைட்' (தீபம்) மாதிரி ஒளியை, ஆனந்தத்தைக் கொடுப்பது 'மங்களம்.' நாம் ஓர் இடத்துக்குப் போனால் அங்கேயிருப்பவர்கள் 'குற்றம் கண்டுபிடிக்க வந்து விட்டான்' என்று முகத்தைச் சுளிக்கும்படியாக இருக்கக் கூடாது. எங்கே நாம் போனாலும் அங்கே நல்ல நினுஸான ஸந்தோஷத்தை விருத்தி பண்ண வேண்டும். நாமும் மங்களமாக இருந்து கொண்டு, பொங்கும் மங்களம் எங்கும் தங்குமாறும் செய்ய வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள்.

ஹேர்–டிரையர், மௌலினெக்ஸ் மிக்ஸி கேட்டிருந்தேன்... அதெல்லாம் எந்தப் பெட்டியிலே இருக்கு?'' என்றாள் மனைவி அம்புஜம்.

''வீடியோ கேம்ஸ், ரிமோட் – கண்ட்ரோல் ப்ளேன், மெஷின் கன் எதையும் மறந்துடல்லியே?'' என்றான் மகன் முரளி.

தாக்குதல் நடத்தவும், கோபம் கொதிநிலைக்கு ஏறவே, சத்தம் போட்டார், துரைசாமி. ''மனுஷனைக் கொஞ்ச நேரம் நிம்மதியா இருக்கவிட மாட்டீங்களா? இப்படிப் போட்டுக் குதர்றீங்களே!''

''அதான் சிங்கப்பூர்லே மூணு வாரம் நிம்மதியா இருந்துட்டு வந்திருக்கீங்களே — அப்புறம் என்ன புலம்பல்?'' என்று அதட்டினாள் அம்புஜம்.

''உளறாதே, ரொம்பத் தெரிஞ்ச மாதிரி! சிங்கப்பூர்லேயாவது, நிம்மதியாவது! நாய் படாத பாடு, கழுதை அலையாத அலைச்சல்!''

''வேளா வேளைக்குச் சாப்பிட வேண்டியது; ஹோட்டல் ரூம்லே உட்கார்ந்து நாவல் எழுத வேண்டியது; ஊர் சுற்றிப் பார்க்க வேண்டியது — இதுவா நாய் படாத பாடு?''

''வாயை மூடு! நான் நாவல் எழுதி நாசமாய்ப் போனேன்!''

''மூணு நாளைக்கு ஒரு நாவல் எழுதறவராச்சே நீங்க! அந்தக் கணக்குப்படிப் பார்த்தால் ஆறு நாவல்களையும் அதுக்குள்ளே எழுதி முடிச்சிருக்கணுமே!''

''மண்ணாங்கட்டி! அரை நாவல் கூட எழுதல்லே!''

''அவரும் உங்க கூட வந்திருந்தாரா என்ன?''

''அவன் இல்லே — அவன் கொடுத்திருந்த லிஸ்ட்கள் வந்தன..... ரெண்டு நாளைக்கொரு தரம் டிரங்க் கால், நாலு நாளைக்கொரு லெட்டர்னு வந்தது... சுத்த உபத்திரவம் பிடிச்ச மனுஷன்!''

''வீணாகத் திட்டாதீங்க... நாவல் எழுதப் பணமும் கொடுத்து, ஹாய்யாக இருக்கச் சிங்கப்பூருக்கும் அனுப்பி வச்ச புண்ணியவானாச்சே!''

''புண்ணாக்குவான்! மண்ணாந்தைப் பயல்! அவனும் அவன் பரட்டைத் தலையும், கொட்டைப் பாக்குப் பல்லும்! அவனுக்காகச் சாமான்கள் வாங்கிச் சுமந்தே முதுகு வலி வந்துட்டுது எனக்கு!''

''அப்ப இதெல்லாம்....''

''நமக்கில்லே! அவனுக்குத்தான்! இதையெல்லாம் வாங்க அலைஞ்சதிலே நாவல் எழுதவே நேரமில்லாமப்போச்சு!வரட்டும் அந்த நண்டுக் காலன்! நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி நாலு வார்த்தை கேட்கிறேன்!''

''என்ன துரைசாமி சார்! எப்ப வந்தாப்பலே?'' என்று கேட்டபடியே திடும் பிரவேசமாகத் துலுக்காணம் நுழைந்து விடவும், 'பிட்' அடிக்கும் போது பிடிபட்ட மாணவனைப் போல விழித்தார் துரைசாமி.

அவருடைய சுபாவம் என்னவென்றால் எப்பேர்ப்பட்ட இக்கட்டையும் இளித்தே சமாளிப்பது. இதன் காரணமாக அவரது வாய் வருஷம் ஒன்றுக்கு 0.5 மில்லி மீட்டர் வீதம் அகலமாகிக் கொண்டு வருவதாகக் குடும்ப டாக்டர் கண்டுபிடித்துக் கூறியிருந்தார்.

தமது வழக்கமான ஆயுதத்தை அன்று அவர் அளவுக்கு மீறிப் பிரயோகிக்கவும், அரை டஜன் ஆளுயர மாலைகளை ஒரே சமயத்தில் போட்டுக் கொண்ட அரசியல்வாதி போலக் கவிழ்ந்து போனான் துலுக்காணம்.

''சிங்கப்பூர் பிரயாணமெல்லாம் நல்லா

தனக்கு என்ன தேவை என்பது பலருக்குத் தெரியாது. ஆனால் அது தம்மிடம் இல்லை என்பது மட்டும் தெரியும்!

இருந்ததா?'' என்று கேட்டான்.

''உம்... இருந்தது... ஆனால் எங்கேயும் சுற்றிப் பார்க்கத்தான் முடியல்லே...''

அடுத்தபடி துலுக்காணம் சொன்ன வார்த்தைகள் துரைசாமியை ஒரு துள்ளுத் துள்ள வைத்தன.

''அதுக்கென்ன? இன்னொரு டிரிப் அடிச்சுட்டாப் போகுது!''

''இன்னொரு டிரிப்பா?''

''ஆமாம்... அடுத்த மாசம் 10 ஆம் தேதி போறீங்க...''

''ஒரு நிமிஷம்... இதோ வந்துட்டேன்!'' என்று சமையலறைக்கு ஓடினார் துரைசாமி. ''அம்பு! ஸ்ட்ராங்கா காப்பி போடு. துலுக்காணத்துக்கு!''

துரைசாமி கொண்டு வந்திருந்த பெட்டிகளுடன் துலுக்காணம் புறப்பட்ட போது. ''நாவல்களைக் கொடுங்க!'' என்று கையை நீட்டினான்.

''எழுதி முடிச்சாத்தானே கொடுக்கிறதுக்கு? ஒரு நாவல் கூட 'கம்ப்ளீட்' செய்ய முடியல்லே....'' இழுத்தபடியே இளித்தார்.

''இங்கேதான் இன்னும் பதினைந்து நாள் இருக்கப் போறீங்களே... அதுக்குள்ளே அட்லீஸ்ட் மூணு நாவலாவது எழுதிக் கொடுத்துடுங்க!''

''ஷ்யூர்! ஷ்யூர்!'' என்று மண்டையைப் போட்டு ஆட்டினார் துரைசாமி.

அவர் அந்தக் காலக் கெடுவிற்குள் துலுக்காணம் கேட்டபடியே மூன்று நாவல்களை எழுதி முடித்திருக்கலாம்தான். விதி என்கிற விளையாட்டுப் பிள்ளை விட்டால்தானே?'' வலது ஆள்காட்டி விரலில் நகச்சுற்று வந்து விடவே, 'அதற்கு எலுமிச்சம்பழம் செருகவும், மஞ்சள் அரைத்துப் பூசவும், பாட்டி வைத்தியப்படிப் பாலேட்டைச் சுற்றி விடவுமே நேரம் சரியாக இருந்தது. போதாத குறைக்கு. ''காலே வாரி விட்டுட்டீங்களே சார்!'' என்று புகார் சொல்லிக் கொண்டு வரும் மாத நாவல் பதிப்பாளர்கள் வேறு. ஒருநாள் விட்டு ஒருநாள் துலுக்காணம் வந்து, ''இன்னு! எத்தினி பக்கம் முடிச்சிருக்கீங்க! கம்போஸுக்குக் கொடுத்தால் தேவலே?'' என்று உரிமையுடன் அதட்டல் போட்டுவிட்டுப்போனான். எலியையடியில் கட்டிக் கொண்ட மசால் வடை வண்டிக்காரன் போலத் திக்குமுக்காடிப் போனார் துரைசாமி.

எப்படியோ சமாளித்து, சிங்கப்பூருக்குப் பிளேன் ஏறுவதற்கு முன்பு இரண்டு நாவல்களை ஒப்பேற்றித் துலுக்காணத்திடம் கொடுத்து விட்டார்.

இரண்டாவது பயணம் முடிந்து ஊர் திரும்பும்போது, தமது குடும்பத்தினர் போட்டுக் கொடுத்திருந்த பட்டியலில் சிலவற்றை மட்டும் வாங்கி வந்தார் துரைசாமி. எல்லாருமே, 'இவ்வளவுதானா?' என்று உதட்டைப் பிதுக்கவும், ''இன்னொரு நடை போய்விட்டு வரும்போது நிறைய வாங்கிக் கொண்டு வருகிறேன்!'' என்று

தத்துவம்: தீர்வில்லாத பிரச்னைகளுக்குக் கற்பிக்கும் புரியாத விடைகள்.
— ஹென்றி ஆடம்ஸ்

அளவுக்கு அதிகமான மருத்துவர்களின் உதவியுடன் நான் செத்துக் கொண்டிருக்கிறேன். — அலெக்ஸாண்டர்

சமாதானம் சொன்னார்.

துலுக்காணம் வந்தான். துரைசாமி கொண்டு வந்திருந்த பெட்டிகளைப் பொறுக்கிக் கொண்டான். "அப்புறம்... இன்னா சார் சமா(ச்)சாரம்?" என்று விசாரித்தான்.

"அங்கே ஒரு நாவல்தான் எழுத டயம் கிடைச்சுது..."

"பரவாயில்லே... பத்து நாள் டயம் எடுத்துக்குங்க.... இன்னும் நமக்கு ரெண்டு நாவல் தானே பாக்கி....?"

"அட்வான்ஸ் போகப் பாக்கிப் பணம்...?"

"காலையிலே தம்பி கையிலே கொடுத்தனுப்பறேன்...." என்று சொல்லிப் புறப்பட்டவன் அநாவசியமாக ஒரு முறை சிரித்தான். "துரைசாமி சார்! பணத்தோடு கூட நீங்க எதிர்பார்க்காத அயிட்டம் ஒண்ணும் வரும்!"

அது என்னவாக இருக்கும் என்ற கவலை துரைசாமியை அரிக்கத் தொடங்கியது.

மறுநாள் துலுக்காணம் சொன்னபடியே அவன் தம்பி — ஜூனியர் பரட்டை — துரைசாமியைத் தேடி வந்து, ஸீனியர் போலவே நூறு ரூபாய்க் கட்டை எடுத்து மேஜை மீது விசிறி விட்டு, கனத்த கவர் ஒன்றைக் கையில் கொடுத்துவிட்டுப் போனான்.

அவசர அவசரமாக உறையைப் பிரிக்க முயன்றார் துரைசாமி.

"லெட்டர் பாம் ஏதாவது வச்சிருப்பானோ என்னவோ! எதற்கும் ஜாக்கிரதையாக இருங்கள்!" என்று பயமுறுத்தினாள் அப்புறம்.

"கூடிய சைஸிலே கட்டுவிரியன் பாம்பாகக் கூட இருக்கலாம்!" என்றான் முரளி.

லட்சியம் செய்யாமல் பிரித்தார் துரைசாமி. உள்ளே இருந்ததைப் பார்த்ததும் மயக்கம் வருவது போலிருந்தது.

ஹாங்காங் பயணத்துக்கான டிக்கெட்களும், பயணத் திட்டமும், தகவல் புத்தகங்களும் அனுப்பியிருந்தான் துலுக்காணம்.

"பயமுறுத்தினியே! பார்த்துக்கோ!" என்று டிக்கெட்டுகளைக் காற்றில் வீசிக் காட்டினார் மனைவியிடம்.

"அந்த ஆள் சரியான பைத்தியமாக இருப்பான் போலிருக்கிறது.... இல்லாவிட்டால் இப்படி உங்களை ஊர் ஊராக அனுப்பிக் கொண்டிருப்பானா?"

"அவன் ரொம்பப் பெரிய மனுஷன். என்ன பெருந்தன்மை பாரு! தான் போகாமல் என்னை ஃபாரினுக்கு அனுப்பறான். இந்தத் தடவை மீதி ரெண்டு நாவலையும் மூணேங்க உட்கார்ந்து எழுதிக் கொடுத்துடணும்..." என்று சொன்ன துரைசாமி மேஜையடியில் போய் அமர்ந்தார்.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு வெயில் கொளுத்தும் ஒரு பிற்பகல் நேரத்தில் ஹாங்காங் கடைவீதிகளில் துரைசாமி சுற்றியலைந்து கொண்டிருந்தபோது, துலுக்காணம் சென்னை ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நண்பர்களுடன் உல்லாசமாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்தான்.

"பிஸினஸ் நிலவரம் எல்லாம் எப்படி இருக்கு வாத்தியாரே?" என்று கேட்டான் ஒருவன் துலுக்காணத்தை.

"அதுக்கென்ன? ஜம்முனு நடக்குது... நானே போய்ச் சரக்கு கொண்டாந்து வித்தால் மாட்டிக்குவேன்னுதானே துரைசாமி என்கிற ஆசாமியைப் பிடிச்சிருக்கேன். பிரபல்மான எழுத்தாளராச்சே! அதனாலே இங்கே கஸ்டம்ஸிலே அவருக்குத் தனி மரியாதை, கௌரவம் கொடுக்கிறாங்க. அநாவசியமா எந்தக் கேள்வியும் கேட்கிறதில்லே. கிரீன் சானல்லே ராஜா மாதிரி வந்துடறாரு.... நமக்கும் சரக்கு பத்திரமா வந்து சேர்ந்துடுது. எத்தினி வாட்ச், எத்தினி டூ-இன்-ஒன், எத்தினி வீடியோ ரெகார்டர்...."

"எப்படி அண்ணே அவரைச் சம்மதிக்க வச்சே?"

"ரொம்ப ஸிம்பிள்.... அவர் எழுதற ஆறு கதைகளுக்கு மொத்தம் முப்பதாயிரம் கொடுக்கிறதா சொன்னேன்.... ஆள் வலையிலே விழுந்துட்டாரு."

"அந்த முப்பதாயிரமும் உனக்கு நஷ்டம் தானே? அதைக் கொடுக்காமல் காரியத்தைச் சாதிச்சிருந்தா நீ கில்லாடிதான்...."

"அவ்வளவு சுலபமா ஏமாந்துடுவேனா? துரைசாமி எழுதின நாவலைப் போடறதுக்கு எத்தினி பேர் காத்துக்கிட்டிருக்காங்க தெரியுமா? அவங்ககிட்டே நாவல்களைத் தள்ளிவிட்டேன். இருபத்து நாலாயிரம் கிடைச்சுது...."

"அப்படியும் ஆறாயிரம் நஷ்டமாச்சே உனக்கு?"

"அவசரப்படாதேடா அல்பம்! எனக்கு எப்படிடா நஷ்டம் வரும்? நான் துரைசாமி கிட்டே தள்ளிவிட்டது ஹாங்காங்கிலே அச்சடிச்ச நோட்டுடா, முண்டம்!"



இவர்: கணக்கு எழுதக் கொஞ்சம் பேனா கொடுங்க!

அவர்: என்னுடைய பேனா பட்டை அடிக்கும்!

இவர்: பரவாயில்லே! நான் எழுதப் போறதே சாராயக் கணக்குதானே!

— கடலூர் கன்னியப்பன்

12345

Now HINDUSTHAN FINANCE Can turn you into a financial genius in FIVE different ways.

1. Fixed Deposits guaranteed by registered mortgage deed.
2. Short term notice deposits.
3. Fixed deposit guaranteed by Cash Certificate From Government owned public Limited Companies
4. Fixed Deposit guaranteed by Bank Cash Certificate.
5. 3 year Cumulative time Deposit.

HINDUSTHAN FINANCE:

In 7 years of dedicated service HINDUSTHAN FINANCE have built up an enviable reputation as investment consultants and trustees, mortgage financiers, approved layout promoters township elevators and estate agents. They will protect your investments by providing 100% security.

The Company started business with a Simple goal-promoting savings amongst people. They have succeeded admirably. Today they offer unique investment schemes for small medium and big investors.

1 FIXED DEPOSITS GUARANTEED BY REGISTERED MORTGAGE DEED SCHEME

LAND ON AN OPPORTUNITY OF A LIFETIME.

A unique Scheme-introduced for the first time in India. This Scheme protects it with a Registered Mortgage of a Government approved Housing Plot. Remember your guaranteed plots will go up in value several times by the time of maturity which means maximum protection to your investment.

Nature of deposit	period of deposit	Rate of interest
Fixed Deposit	12 months	15%
Fixed Deposit	18 months	18%
Fixed Deposit	24 months	20%
Fixed Deposit	36 months	attractive interest.

2 SHORT TERM NOTICE DEPOSIT SCHEME

MONEY GROWS IN NO TIME AT ALL

The minimum deposit is Rs. 1000/- to be deposited for 70 days/160 days. Under this scheme the depositor can get back the deposit only after a minimum period of 2/6 months after giving notice of 70 to 160 days respectively.

3 YOUR DEPOSITS GUARANTEED BY CASH CERTIFICATE FROM GOVERNMENT OWNED COMPANIES

FIRST TIME IN INDIA

Your fixed deposit is guaranteed by cash certificate from government owned public limited companies. This unique short term scheme has been introduced for the first time. Under this scheme the principal will earn interest at 20% p.a. payable monthly.

4 YOUR FIXED DEPOSIT GUARANTEED BY BANK CASH CERTIFICATE

'BANK ON GOOD RETURNS'

Make a minimum deposit of Rs. 5,000/- and get a cash certificate in your favour from a Nationalised Bank of your choice. The repayment of your deposit after maturity is guaranteed.

100% Security only

HINDUSTHAN FINANCE Guarantees your investment

We don't Advertise 100 times to make our point

Our Depositors Come Invest and feel secure! Do we need to say more?

5 3 YEAR CUMULATIVE TIME DEPOSIT SCHEME

An attractive scheme which any depositor would love to avail of.

The people behind financial miracles, Hindusthan Finance have with vision and foresight, become a name to reckon with. Hindusthan Finance are pioneers in this field of activity.

Come to Hindusthan Finance because only we can play the role of investment trustees to perfection.

I want to turn into a financial genius. Rush me information on

- Fixed Deposits guaranteed by registered mortgage deed.
- Short term notice deposit Scheme.
- Your Deposit guaranteed by Cash Certificate from Government owned Companies.
- Your Fixed Deposit guaranteed by Bank Cash Certificate.
- 3 year Cumulative Time Deposit Scheme.

Name ____________________

Address ____________________

For Details contact:

HINDUSTHAN FINANCE

12, Ramaswamy Street, Theagaraya Nagar, Madras-600 017. Phone: 441448.

SATURDAY HOLIDAY SUNDAY WORKING DAY

* கே.ஜி.எஃப். பழனிச்சாமி, பெங்களூர்.

? ராஜீவ் காந்தியின் எட்டு நாள் வெளி நாட்டுப் பயணம் அவசியம்தானா?

! அவசியம்தான். ஆனால் ஆஸ்திரேலியப் பூர்வ குடி மக்களைப் பற்றி அந்நாட்டில் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொள்ள அவசியமில்லை. பாங்காக்கில் போய் நமது நாட்டு வர்த்தகர்களை இடித்துரைத்துப் பரிகசிக்க அவசியமில்லை. சொல்லுகிற விஷயம் சரியாக இருந்தால் கூட, அதைச் சொல்லுகிற இடம், நேரம் எல்லாம் கவனிக்க வேண்டும். இங்கிதம் தெரியாமல் அடிக்கடி நடந்து கொள்கிறார் பிரதமர்.

* ஆர். ஆனந்த், கும்பகோணம்.

? ரவி சாஸ்திரி அடுத்த கேப்டனாகத் தேர்ந்தெடுக்கப்படுவாரா?

! தேர்ந்தெடுக்கப்படுவாரா, தெரியாது. தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்— தெரியும்.


* எஸ். வெங்கடேசன், கும்பகோணம்

? புதுவையில் நடந்த கட்சி மாறல் பற்றி....?

புதுவையில் நடந்த கட்சி மாறல் பற்றி ?



* மறக்க முடியுமா?



* அடுத்த காப்டன்?

! கட்சி மாறல் தடுப்புச் சட்டம் என்பதாக ஒன்று இருப்பதைக்கூட மறந்து விட்டுப் பிறகு விழித்துக் கொண்ட இதுபோன்ற நபர்கள் எந்தக் கட்சியில் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன?

* டி. தாழைப் பிரபு, குடியாத்தம்

? அன்னை இந்திரா காந்தியை வாழ்த்தியவர்கள், பிரதமர் ராஜீவ் காந்தியை வெறுப்பது ஏன்?

! இவர்கள் பதவியில் இருந்தவர்கள். 'அடுத்த தலைமுறை பொறுப்பேற்றுக் கொண்டுவிட்டது. நாம் ஒதுங்கி இருப்போம்' என்று கௌரவமாக விலகி இருக்கத் தெரியாதவர்கள். இவர்கள் வாயை அடைப்பதற்காகப் பதவிகளைத் தந்து கொண்டிருக்க முடியுமா? பிளாக் மெயில் செய்பவர்கள் கூடத் தேவலாம்; அவர்கள் உண்மைகளை வைத்துக் கொண்டு மிரட்டுவார்கள். இவர்கள் கயிறு திரிப்பவர்கள். பயப்படுவதா? பிதற்றிவிட்டுப் போகட்டும் என்று விட வேண்டியதுதான்.

* எச்.கே. நாசர், தோப்புத்துறை

? ரேகன் — கார்பசேவ் பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்தது பற்றி....?

! இவர் அவர் மீதும் அவர் இவர் மீதும் பழி சுமத்திவிட்டுப் பிரிவது பொறுப்பற்ற செயல். மொத்தத்தில் மனிதாபிமானத்துக்குத் தோல்வி. அணு ஆயுத அரக்கனுக்கு வெற்றி.

* பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன்புதூர்

? ஹிந்தி திணிப்பைப் பற்றிக் கேட்டால் இ.காங்கிரஸ்காரர்கள் ஆங்கிலவெறுப்பைப் பற்றி பேசுகிறார்களே?

! பிரச்னையைத் திசை திருப்ப அவர்கள் அப்படித்தானே அபத்தமாகப் பேசியாக வேண்டும்! அண்ணா கூறியதுபோல் 'அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் அனைத்து மக்களுக்கும் சமமாகப் பகிர்ந்து அளிப்பது ஆங்கிலம் மத்திய ஆட்சி மொழியாகும் போதுதான்'. இதைஒப்புக்கொள்ளாதவரை ஹிந்தி ஆதரவாளர்கள் ஒருமைப்பாட்டுக்குச் சவக்குழி தோண்டுகிறார்கள். பிரிவினைத் தீயில் பெட்ரோல் ஊற்றுகிறார்கள். சந்தேகமில்லை.

* கே.எம். ஜான் முகம்மது, இளையான்குடி

? சென்ற தீபாவளியில் நீர் என்ன செய்து கொண்டிருந்தீர்?

! கடுமையான புயல் மழையை அனுபவித்துக் கொண்டும், பாக்யராஜுடன் ஒரு பெரும் போருக்குப் பிள்ளையார் சுழி போட்டுக் கொண்டும் இருந்தேன். மறக்க முடியுமா?

* வெ. ரமேஷ்நாதன், சிங்காரப்பேட்டை

? எம்.ஜி. ஆரைப் போல் யாரும் இந்த அளவுக்கு ஆட்சியில் சுறுசுறுப்பாகச் செயல்

படமுடியாது என ஹண்டே கூறியுள்ளது குறித்து?

! ஹ ஹ் ஹ ஹ் ஹா! ஹி ஹ் ஹி ஹ் ஹி! இது சிரிப்புச் சிறப்பிதழ் என்பதை மறக்காமல் கேள்வி கேட்டிருக்கிறீரே, பலே!

* ஆர். கே. அருண் செல்வன், விக்கிர பாண்டியம்.

? யாரை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது?

! புதை சேறு என்று தெரியாமல் குட்டையில் குளிக்கப் போய் உயிரைவிட்ட பள்ளிச் சிறுவர்களை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது. அவர்களுடைய பெற்றோரை எண்ணினால் அதைவிடப் பரிதாபமாக இருக்கிறது.

நீங்கள் கேட்டவை — தராசு



இனியவை இருபது!



புதியவை இருபது!



சிறப்பிதழ் ஸ்பெஷல்



சுசெயல்.



பொறுப்பற்ற...

குழந்தைகள் அந்தக் குட்டைக்குப் போகக் கூடாது என்று எச்சரிக்கப்பட்டிருந்தார்கள்; எச்சரிக்கையை மீறிப் போயிருக்கிறார்கள் என்று சமாதானம் கூறும் பள்ளித் தலைமை ஆசிரியரை நினைத்தால் ரொம்ப ரொம்பப் பரிதாபமாக இருக்கிறது. இவ்வளவு ஆபத்தான இடத்தில் குழந்தைகளை அழைத்துப் போயிருக்கலாமா? அப்படியே அழைத்துச் செல்ல நிர்ப்பந்தம் இருந்திருந்தாலும் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டாமா? என்றெல்லாம் நினைக்க நினைக்க மனம் குமுறுகிறது. துயரம் நெஞ்சை அடைக்கிறது.

* ரஜினிவாசன், சென்னை—35.

? இந்திராவின் இனியவை இருபது; ராஜீவின் புதியவை இருபது — ஆகியன நாடு முன்னேற்றம் அடையும் திட்டங்களா?

! நம்மை ஆட்டிப் படைக்கும் கொடிய அரக்கர்கள்: வறுமை, அறியாமை. வறுமையை ஒழிக்கக் 'கடன்' என்ற பெயரில் பணத்தை வாரி விடுவது, பண வீக்கத்தை அதிகரித்து வறுமையையும் அதிகரிக்கவே செய்யும். மற்ற மற்ற இலவச விநியோகங்களும் வளத்தைப் பெருக்காது. நேர்மாறான பலனையே ஏற்படுத்தும். உழைப்பைப் பெற்று, ஊதியம் அளிப்பதே வறுமையையும் விரட்டி, தேசப் பொருளாதாரத்தையும் உயர்த்தும். எனவே வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது ஒன்றே வழி. இதற்கு 'இருபது அம்சத் திட்டம் தேவையில்லை. ஒரே அம்சத் திட்டம் போதும். முன்பு பசுமைப் புரட்சியில் வெற்றி கண்டது போல், இன்று வேலை வாய்ப்புப் புரட்சியில் வெற்றி அடைய, நாட்டின் செல்வம், அரசு யந்திரம், தலைவர்களின் செல்வாக்கு, அறிவாளிகளின் அறிவு, மக்களின் முனைப்பு முதலிய அனைத்தும் ஒருமுகப்படுத்தப்பட வேண்டும். இத் தொழில் புரட்சிக்கு அத்யாவசியமான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அரசு தீவிரமாக இறங்க வேண்டும். இப்படி தொழிலகங்கள் வளரும்போது அவை அரசுத் துறையானாலும் தனியார் துறையானாலும், தொழிலாளிகளின் குழந்தைகளுடைய கல்விக்குத் தார்மீகப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தினால் ஒரே சமயத்தில் இரு பெரிய பிரச்னைகளையும் எதிர்த்துப் போராடி வெற்றி காண விழைவதாக அமையும். இது நடக்க முடியாத பகற் கனவு அல்ல. உலக நாடுகள் பல நடத்திக் காட்டியுள்ளன!

* ரூ 10 பரிசு பெறுபவர்:
ரஜினிவாசன்,
6, இரண்டாவது மெயின் ரோடு,
சி.ஐ.டி. நகர், சென்னை—35.

வனவிலங்கு வாரம் கொண்டாடினால் போதாது!

வட்டமேஜை

* கம்ப்யூட்டர் இந்தியாவுக்கு நிமைமைய விளைவிக்கும் என்ற மணக்கால் ஸ்ரீராமின் வாதம் மேடைப் பேச்சு போல காரசாரமாக, அட்டகாசமாய் இருந்தது.

திருத்துறைப்பூண்டி, மிஸ்டர் ஷி.

* இந்த வாரக் கதைகளுள், ஒரு பக்கமே இருந்த 'பாலவின் பிரார்த்தனை' சூப்பர்! சின்னக் கதைக்குள், ஒரு சின்ன சஸ்பென்ஸ்!

திருவிடைமருதூர், நாதன்பாபு.

* கோடம்பாக்கம் க்ரைம்ஸ் இன்ஸ்பெக்டர் கதையில் தவற விட்டிருந்த இளமைகளை ஓவியர் ஜெயராஜ் தனது தூரிகை மூலம் நிவர்த்தி செய்துவிட்டாரே. என்ன ஒரு அண்டர்ஸ்டாண்டிங், கதாசிரியருக்கும் ஓவியருக்குமிடையில்!?

குடியாத்தம்–2. கே. வெங்கடசுப்ரமணியன்.

* ஸ்ரீவீரப்பா வித்யாலய உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ப. ராமச்சந்திரன் அவர்களை உண்மை உள்ள எந்த மாணவரும் பாராட்டாமல்தான் இருந்துவிட முடியுமா, என்ன!

சீர்காழி, வசந்தப்பிரியன்.

* கல்கி தீபாவளிச் சிறப்பிதழைச் 'சிரிப்பிதழாக' அகஸ்தியன் தயாரித்து வழங்க இருப்பது குறித்து மகிழ்ச்சிதான். அதற்காக 19.10.86 இதழை இப்படி 'சிக்கனச் சிரிப்பிதழாக' வெளியிட வேண்டுமா? (இரண்டே இரண்டு ஜோக்குகள்தான் இருந்தன!)

நந்தியநல்லூர், க. இளங்கோ.

* தலையங்கம் கண்டேன். பிரதமமந்திரியை பொறுப்புணர்ந்து செயல்படுவதைத் தவிர்த்து, தாயைப் பின்பற்றும் தனயனுக்குத் தாங்கள் கூறியிருக்கும் ஆலோசனைகள் அருமையிலும், அருமை!

நாகர்கோவில், தா. கொழுந்துவேல்.

* அழிக்கப்பட்டு வரும் அபூர்வ அணில் கட்டுரையினைப் படித்துப் பெரிதும் அதிர்ச்சியுற்றேன். வனவிலங்கு வாரம் கொண்டாடும் அரசுக்கு இதுவெல்லாம் தெரியாதா?

தோட்டக்குறிச்சி, இரா. வலையபதி.

* எங்கள் மாவட்ட சிறப்பிதழ்கள் மிகச் சிறப்பாக வெளிவந்துள்ளன. தங்கள் நிருபர் குழுவின் துணிச்சலான எழுத்து வேகமும், ஆட்சித் தலைவரிடம் கேட்ட கேள்விகளும் உண்மையிலேயே பாராட்டத்தக்க வகையில் அமைந்திருந்தன. இவ்வளவு தெளிவாக ஒவ்வொரு மாவட்டத்தையும் அலசுவீர்கள் எனத் தெரிந்திருந்தால் இதுவரை வெளியான மாவட்டச் சிறப்பிதழ்களை வரிவிடாமல் படித்திருப்பேன். தமிழகத்தின் தலைவிதியை அப்பட்டமாக உணர்த்தும் நாடியாக விளங்குகிறது ஒவ்வொரு இதழும்.

ராஜபாளையம், கே.கே. ரங்கராஜ்.

* ஒவ்வொரு கிராமத்தின் இன்றைய நிலைமையே ஏதோ காரணத்தால் எப்படியாவது இடைத் தேர்தல் வராதா? விடிவு காலம் ஏற்படாதா? என்பதுதான். இதில் துரைசாமிபுரம் விதிவிலக்கா என்ன?

பெங்களூர், ப. மூர்த்தி.

* சரித்திர காலத்து அசோகர் ஆட்சிக் காலத்தில் சாலைகளின் இருபுறங்களிலும் மரங்கள் நடப்பட்டு நிழல் ஏற்படுத்தப்பட்டது! ஆனால் நமது எம்.ஜி. ஆர். ஆட்சிக் காலத்தில் மரங்கள் வெட்டப்படுகின்றன! பாக்கெட்டுகள் நிரப்பப்படுகின்றன!

லால்குடி, எம். ராஜேந்திரன்.

* அருமை ஸார்! காமராஜர் மாவட்டக் கலெக்டர் உங்கள் நெருக்கிப் பிடியில் மூச்சுத் திணறி இருக்கிறார்! எனினும் பேட்டியின் முடிவில் நீங்கள் தொடுத்த அம்பைப் பெருந்தன்மையான வார்த்தைகளால் தடுத்து வீழ்த்திய சாதுரியம் அபாரம்! சமூக சேவையில் 'கல்கி'யின் அணுகுமுறை, சரித்திரச் சாதனை. தலை வணங்குகிறேன்.

இராஜபாளையம், குன்றக்குடி பெரியபெருமாள்.

* கலெக்டர் பேட்டியில் எங்கள் மாவட்டத்தை நன்கு அலசியுள்ளீர்கள். ஆனால் அதிகாரிகளின் அவசரமான ஆணித்தரமான பதில்கள் நிச்சயமாக அவர்களின் நெஞ்சிலிருந்து வந்தவை அல்ல என்பது வெட்டவெளிச்சமாகிறது. குறிப்பாக, வரித்துறை–வனத் துறையினரின் பதில்கள் — கலெக்டரின் மௌனம்.

ஸ்ரீவில்லிபுத்தூர், வி.ஏ. பாலசுப்ரமணியன்.

* ஓர் இளைஞனும் ஒரு யுவதியும் காதலின்றி நெருங்க முடியாது என்ற பிடிவாத அபவாதக் கருத்தை இன்னும் நீக்கிவிடாத இருபதாம் நூற்றாண்டு பகுத்தறிவு மக்களை நறுக்கென்று குட்டியது 'உழவு மாடு' எனும் அருமையான, வித்தியாசமான, கருத்துச் செறிவு மிக்கச் சிறுகதை.

ஈரோடு, அருண்.

* பெமினாவின் 'உழவு மாடு' கதையல்ல; பெண் இனத்திற்கே உரித்தான நெஞ்சை உருக்கும் பரிதாபங்களைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி.

சென்னை–16, அர. மணிவண்ணன்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543).
Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.


பாம்பினோ. இத்தாலிய தானியங்கி
தொழிற்சாலையில் சுகாதாரத்துடன்
உருவாக்கப்பட்ட அதிசய சேமியா
கையில் ஒட்டாத இந்த பாம்பினோ.
கொழுப்பு கலவாத. புரதச்சத்து
மிக்கது. இப்பொழுது பாம்பினோவைப்
பயன்படுத்தி நாவிற்குச் சுவையூட்டும்
பாயாசம் போன்ற இனிப்புகளையும்.
புளியோதரை போன்ற கார வகை
களையும் சமையுங்கள். சாதாரண
சமையலில் அசாதாரணச் சுவையை
விதவிதமாய் பாம்பினோ எப்படித்
தருகிறது என்பதைக் கண்டறியுங்கள்.
பாம்பினோ பகோடா
செய்முறை: பாம்பினோவை தண்ணீரில்
வேகவிட்டு வைத்துக் கொள்ளவும்.
கடலை மாவை கொஞ்சம் தண்ணீரில்
கரைத்து அதனுடன் சேமியா நறுக்கிய
வெங்காயம், உருளைக்கிழங்கு, பச்சை
மிளகாய் இவற்றைப் போட்டு அரைத்த
இஞ்சி விழுதையும் சேர்த்துக் கொள்ளவும்.
எண்ணெயை காய வைக்கவும்.
காய்ந்த பின் ஒரு ஸ்பூன் மேற்சொன்ன
மாவைவிட்டு பொன்னிறமாக வரும்வரை
வேகவிடவும். பிறகு சட்னி அல்லது
தக்காளி சாஸுடன் சூடாக பரிமாறவும்.
அளவான செலவிலே
அறுவகை சுவைகளை
பாங்கோடு துவங்குவீர்
பாம்பினோ உணவுடன்.
இலவசம்
உங்கள் இலவச செய்முறைக்
குறிப்புகள் அடங்கிய புத்தகத்திற்கு
கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.
ஜன ஜீவன் ஃபுட்ஸ் பிரைவேட் லிமிடெட்,
பஷீர்பாக் பாலஸ், பஷீர்பாக்,
ஹைதராபாத்-500 029.
IS:1485
பாம்பினோ
வர்மிஸெல்லி
இனிப்போ காரமோ ருசிதரும் பாம்பினோ!
associated

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

ஸ்டேன்ஸ்

ரெட் ரோஸ் டஸ்ட் டீ

சிகப்பு ரோஜாவின் அழகில் ஆழ்ந்து மதிமயங்காதவர் உண்டோ...

ஸ்டேன்ஸ் ரெட் ரோஸ் டஸ்ட் டீ

ருசித்து மனம் பறிகொடுக்காதவர் உண்டோ?

ரோஜாவின் மணத்தை யாரால் மறக்கமுடியும்? ஸ்டேன்ஸ் ரெட் ரோஸ் டஸ்ட் டீயின் நறுமணமும் அதேபோல்தான்—நினைத்தாலே நாவூற வைப்பது.

அதன் சுவையோ, ம்ம்ம்... இயற்கையானது. முழு திருப்தி அளிப்பது. மீண்டும் மீண்டும் பருகத் தூண்டுவது.

இத்தனிச் சுவையையும் நறுமணத்தையும் அதிகமாகப் பெறலாம்—ஸ்டேன்ஸ் ரெட் ரோஸ் டஸ்ட் டீ அளிக்கும் அதிக கோப்பைகளிலிருந்து.

ஸ்டேன்ஸ் கம்பெனியாரின் 80 வருட அனுபவத்தின் விளைவான தரமான தயாரிப்பு...



M86.61 Tm.

ஸ்டேன்ஸ் ரெட் ரோஸ் டஸ்ட் டீ.
இதன் உன்னதச் சுவை, ரோஜா அழகிற்கு இணை

ஸ்டேன்ஸ் டீ & காபி லிமிடெட் த.பெ. எண் 3856 கோயம்புத்தூர்-641 018.